மாலை 47 மணி 8 ஆகஸ்ட் 2005 விலை ரூ10

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

திருச்செந்தூரில் ஆவணிப் பெருவிழா

வரகூரில் உறியடி உற்சவம்

ஆதிபுரியின் அதிகாரநந்தி

கதைகதையாம் காரணமாம்

-பாலகுமாரன்

சத்ரபதி சிவாஜி வழிபட்ட சென்னை அருள்மிகு காளிகாம்பாள்

சொற்பொழிவு கேட்கும் சேவல்

மயிலை காரணீசுவரர் கோயிலில் ஓர் அதிசயம்

அருள்மிகு கபர்தீஸ்வர சுவாமி திருக்கோயில், திருவலஞ்சுழி.

(சுவாமி மலை, அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில் இணைக்கோயிலாகும்)
கும்பகோணம் வட்டம். தஞ்சாவூர் மாவட்டம்

திருப்பணி வேண்டுகோள்

இத்திருக்கோயில் கும்பகோணம் தஞ்சாவூர் பிரதான சாலையில் கும்பகோணத்திலிருந்து 7 கி.மீட்டர் தொலைவிலும், சுவாமிமலை திருக்கோயிலில் இருந்து தெற்கே 1 கி.மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ள தேவாரப் பாடல் பெற்ற சோழ நாட்டு காவிரி தென்கரை சிவஸ்தலங்களில் 25-வது தலமாகும். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடல் பெற்றது. இறைவன் கபர்தீஸ்வரர் (சடைமுடிநாதர்) இறைவி பிரஉறன்நாயகி (பெரிய நாயகி) சுவேத விநாயகர் (கடல் நுரையினால் ஆன வெள்ளை பிள்ளையார்) அஷ்டபுஜ மகா காளி கிழக்கு நோக்கிய தனி சனீஸ்வரர் சன்னதி அமையப் பெற்ற திருத்தலமாகும்.

இத்திருக்கோயில் கும்பாபிடேகம் கடந்த 1971-ம் ஆண்டு நடைபெற்றது. தற்போது சுமார் 60 லட்சரூபாய் மதிப்பீட்டில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகிறது. திருப்பணி வேலைகள் செய்வதற்கு உபயதாரர்கள் வேண்டப்படுகிறார்கள். மேலும் பக்தர்கள், சேவார்த்திகள், திருப்பணி மற்றும் கும்பாபிஷேகப் பணியில் பெரும் பங்கு பெற்று நிதி வழங்கி இறையருள் பெற வேண்டுகிறோம்.

மேலும் விபரங்களும், நன்கொடைகள் அனுப்புவதற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

துணை ஆணையர் / செயல் அலுவலர்.

அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில்,

சுவாமிமலை - 612 302

தஞ்சாவூர் மாவட்டம்.

தொலைபேசி - 0435 2454421

தொலைநகல் - 0435 2454358

ஐசிஐசிஐ வங்கி கணக்கு எண் 608101081324

website : www.seyyone.net / swamimalai /admin. html
E-mail : swamimalai@sancharnet.in

ராம்.தியாகராஜன்,
தலைவர், அறங்காவலர் குழு.

ச.இலட்சுமணன், பி.எல்
துணை ஆணையர் / செயல் அலுவலர்.

சே. சந்திரன்
சோ. ரோஜா

ஞா. ரெங்கராஜன்
அ. பன்னீர்செல்வம்

அறங்காவலர்கள்.

திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2036 பார்த்திப ஆவணி
மாலை 47 மணி 8 ஆகஸ்ட் 2005

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருமயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயத்தில் 23.3.02 அன்று தொடங்கி வைத்த **''திருக்கோயில் அன்னதானத் திட்டம்''** இன்று 171 கோயில்களில் தினசரி பதினையாயிரம் பேர் பயன்பெறும் வகையில் சிறப்புற நடைபெற்றுவருகிறது. இதுவரை இந்த அன்னதானத் திட்டத்தின் மூலம் 1 கோடியே 87இலட்சத்து 74ஆயிரத்து 188 பேர் பயன் பெற்றுள்ளனர்.

திருக்கோயில்களில் ஞாயிறுதோறும் நடைபெற்று வரும் ஆன்மீக வகுப்புகளில் இதுகாறும் 5,81,272 சிறார்கள் நல்லொழுக்கப் பாடம் பயின்றுள்ளனர்.

'' ஞானநூல்தனை ஓதல், ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல், தான்கேட்டல், நன்கு
ஈனமிலாப் பொருள் அதனைச் சிந்தித்தல், ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில் ஞான பூசை''

என்று சிவஞான சித்தியார் கூறுகின்றது.

திருக்கோயில்களில் நாள் பூசைகளும், விழாக்காலப் பூசைகளும் நிறைவாக நடைபெற ஆவன செய்து வரும் நமது அறநிலைய ஆட்சித்துறை, அருளாளர்கள் ஆசி கூறியுள்ள வண்ணம் எழில் ஞானப் பூசைகளும் சிறப்புற நிறைவேறத் திருக்கோயில்கள் தோறும் **திருமுறைத் தொடர்ச் சொற்பொழிவுகளும்**, நல்லொழுக்க **நீதிபோதனை** வகுப்புகளும் நடைபெறத் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த 4 ஆண்டுகளில் 4606 திருக்கோயில்களின் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டுத் திருக்குட நீராட்டு விழாக்களும் நிகழ்த்தப் பெற்றுள்ளன.

148 திருக்கோயில் திருத்தேர்கள் திருப்பணி செய்யப்பட்டுள்ளன.

300 கிராமக் கோயில்களில் திருப்பணியும், 507 திருக்குளங்களின் தூர் வாரும் திருப்பணியும் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

6275 ஆதிதிராவிடர் பகுதிகளில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணிகளுக்குக் கோயில் ஒன்றுக்கு ரூ.25 ஆயிரம் வீதம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 16 மாதங்களாகப் புதுப்பொலிவுடன் வெளிவரும் '' திருக்கோயில்'' இதழுக்கும் வாசகர்களாகிய நீங்கள் அளித்து வரும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கண்டு நான் மிக்க பூரிப்பு அடைந்து வருகின்றேன்.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றும் கொல்லோ உலகு?"

என்பது திருக்குறள்.

மாரியைப் போன்றே கைம்மாறு வேண்டாமல் அன்புமாரி பொழிந்து வரும் வாசகப் பெருமக்களாகிய உங்களுக்கு நன்றி சொல்ல வார்த்தைகளே இல்லை என்பதைத் தெரிவித்துத் தொடர்ந்து திருக்கோயில் இதழைப் படித்து மகிழ்ந்து எங்களை உற்சாகப்படுத்துமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

அன்புள்ள

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள 6000 ஆதித்திராவிடர் கோயில்களில் ரூ. 25 கோடி செலவில் திருப்பணிகள்

ஏழை ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதியில் உள்ள கோயில்களில் தெய்வங்கள் மழையில் நனைந்து, வெயிலில் காயும் நிலையை மாற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

கடந்த ஆண்டு 6000 ஆதிதிராவிடர் கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப் பட்டன. அதே போன்று இந்த ஆண்டும் 6000 ஆதி திராவிடர் கோயில்களில் திருப்பணி செய்ய **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** உத்திர விட்டுள்ளார்கள்.

வசதி படைத்த 4000 கோயில்களில் இருந்து ரூ.25 கோடி நிதி திரட்டி அதன் மூலம் வசதி இல்லாத இந்த 6000 கோயில்களிலும் திருப்பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

இதழின் உள்ளே ....

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள 6000 ஆதிதிராவிடர் கோயில்களில் ரூ.25 கோடி செலவில் திருப்பணிகள் — 2
2. திருச்செந்தூரில் ஆவணிப் பெருவிழா — 3
3. காலச்சுவடுகள்: சத்திரபதி சிவாஜி வழிபட்ட சென்னை காளிகாம்பாள் — 6
4. கதை கதையாம் காரணமாம் - **"எழுத்துச்சித்தர்" பாலகுமாரன்** — 7
5. சொற்பொழிவு கேட்கும் சேவல் - மயிலை காரணீஸ்வரர் கோயிலில் ஒரு அதிசயம் - **இரா. இரகுநாதன்** — 10
6. திருவிளையாடல் புராணம் - **இரா. அரங்கசாமி** — 11
7. மகாபாரதம் - **முனைவர் த. அமிர்தலிங்கம்** — 14
8. சிற்பங்கள் அறிவோம் - **மா. குணசேகரன், எம்.ஏ., பி.எஸ்.ஸி.** — 18
9. ஓர் அரிசி - அருளரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் — 20
10. தமிழ்த்தாத்தா உ.வே.சா. வாழ்வும், தமிழ்த்தொண்டும் - **டாக்டர் பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.** — 22
11. திருமந்திர உபதேசம் - **"திருமந்திரச்செல்வர்" டி.வி.வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)** — 25
12. சைவ சித்தாந்தம் உணர்த்தும் உண்மை - **டி.என்.எஸ். முருகதாசதீர்த்தபூபதி** — 27
13. தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - சிவவாக்கியர் - **முனைவர் இரா. செல்வக்கணபதி** — 28
14. திருநாவுக்கரசரை வழங்கிய திருவதிகைத் திருக்கோயில் - **கி. ஸ்ரீதரன், எம்.ஏ.** — 30
15. பாம்பன் சுவாமிகள் - **தா. சந்திரசேகரன், இ.ஆ.ப.** — 31
16. இவ்வளவு தூரம் வந்தபிறகு - **நிறைமதி** — 33
17. ஏது குறை எல்லாம் நிறை - **துருவன். கோபாலகிருஷ்ணன்** — 36
18. ஆதிபுரியின் அதிகாரநந்தி - **ப.ராஜா, பி.எஸ்.ஸி., பி.எல்.** — 37
19. வரகூரில் உறியடி உற்சவம் - **திருமதி இந்திரா ஆராஅமுதன்** — 38

திருச்செந்தூரில் ஆவணிப் பெருவிழா

உலகம் கொண்டாடும் ஒப்பற்ற திருத்தலம் திருச்சீரலைவாய் எனப்படும் திருச்செந்தூர் திருத்தலம் என்பதை நக்கீரர் திருமுருகாற்றுப் படையில்

''உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்''

என்று பாடியிருக்கக் காணலாம்.

முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள ஆறுபடை வீடுகளில் சூரபதுமனைச் சம்ஹாரம் செய்த சிறப்புடைய திருத்தலமான திருச்செந்தூர் இரண்டாம் படைவீடாகக் கொண்டாடப்படுகின்றது.

முருகப்பெருமான் தெய்வயானையை மணம் புரிந்த சிறப்பால் திருப்பரங்குன்றம் முதற்படை வீடெனும் பெருமை பெற்றுள்ளது.

திருஆவினன் குடியாம் பழநி மூன்றாம் படைவீடு. தந்தைக்கு முருகப்பெருமான் பிரணவ மந்திரத்தின் பொருளை இனிது கூறிய திருவேரகம் நான்காம் படைவீடு.

முருகப்பெருமான் வள்ளிக்குறமாதைத் திருமணம் புரிந்த குன்றுதோறாடலாம் திருத்தணிகை ஐந்தாம் படைவீடு. பழமுதிர்சோலை ஆறாவது படைவீடு.

அலைகள் வந்து மோதும் கடலோரம் அமைந்துள்ளபடியால் ''திருச்சீரலைவாய்'' என வழங்கப்பட்ட இத்திருத்தலம், சேந்தனாம் முருகன் கோயில் கொண்டுள்ளபடியால் செந்தில் எனவும் திருச்செந்தில் எனவும் வழங்கித் தற்போது திருச்செந்தூர் என வழங்கப்பட்டு வருகின்றது.

செந்து என்று சொல்லுக்கு உயிர் என்பதும் ஒரு பொருளாகும். உயிர்களுக்கு அடைக்கலமாகத் திகழ்வதால் செந்தில் என்று பெயர்வந்ததாகத் தமிழறிஞர்கள் கூறுகின்றனர்.

''சீர்கெழு செந்தில்'' எனச் சிலப்பதிகாரம் போற்றுகின்றது.

முருகப் பெருமானுக்கு ''ஓடக்காரன்'' என்று ஒரு பெயர் வழங்குகின்றது.

''யாதும் நிலையற்றலையும் ஏழுபிறவிக் கடலை

ஏறவிடு நற்கருணை ஓடக்காரன்''

என்று போற்றுகின்றார் அருணகிரிநாதர்.

பிறவிக் பெருங்கடலில் வீழ்ந்து நீண்டகாலமாகத் துன்பப்படுகின்ற ஆன்மாக்கள் ஆகிய நாம் திருச்செந்.தூர் போகவேண்டும். திருச்செந்திலாண்டவன் திருவடி ஆகிய ஓடத்தில் ஏறிக் கொண்டால், நிச்சயமாக முத்திக்கரை சேர்ந்துவிடலாம்.

ஆதிசங்கரர் தாம் பாடியுள்ள ''சுப்பிரமணிய புஜங்கத்''தில், தம் அடியார்களைப் பிறவியாகிய கடலிலிருந்து கரையேற்றிக் காக்கும் வண்ணம் கருணாமூர்த்தியாகிய கந்தப்பெருமான் திருச்செந்தூரில் கடற்கரையில் கோயில் கொண்டு வீற்றிருப்பதாகப் பாடுகின்றார்.

''**யதாசன்னிதானம் கதா மானவாமே**'' எனத் தொடங்கும் ஆதிசங்கரர் பாடலின் தமிழாக்கம் பின்வருமாறு:

''என்முன்னர் வந்தோர் பிறப்பென்ற வேலை
யினை ஏறினார் என்று நிலமேல் விளங்கித்
துன்னும் கடற்செந்தில் உறைகின்ற தூயோன்
துங்க பராசக்தி அருள்சேயை நினைவாம்''

கடலின் அலைகள் ஆரவாரத்துடன் கரைவரை வந்து கரைந்து போவதைப் போல், கடற்கரையில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானைப் பூசிப்பவர்

''கொக்கரக்கோ'' எனச் சேவல் கூவுவது ஏன்?

கொக்கு என்றால் மாமரம் என்பது பொருள். கடல் நடுவே மாமரமாய் நின்ற சூரபன்மன்மேல் வேல் எறிந்தார் முருகப்பெருமான். மாமரம் இருகூறாகப் பிளந்து ஒரு கூறு சேவலாகவும், மறு கூறு மயிலாகவும் நின்றது. மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் கொண்டு அருள்புரிந்தார் முருகப்பெருமான்.

தம்மைச் சேவற்கொடியாகக் கொண்டு ஆட்கொண்ட செவ்வேள் பரமனுக்கு நன்றி தெரிவித்தே 'கொக்கரக்கோ' என்று கூவுகின்றது சேவல்.

புரசையில் ''பெரியபுராணத் தொடர்ச் சொற்பொழிவு'' தொடக்கவிழா

புரசைஅருள்மிகு கங்காதீஸ்வரர் திருக்கோயிலில் ''பெரியபுராணத் தொடர்ச் சொற்பொழிவு'' நிகழ்ச்சியை நம் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு த. பிச்சாண்டி இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இவ்விழாவில் சென்னை இணை ஆணையாளர் திருமிகு ப. ராஜா பிஎஸ்.சி.பிஎல் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். திருக்கோயில் நிர்வாக அதிகாரி திருமிகு பழநிஅவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள். சொற்பொழிவாளர் முனைவர் தெ.ஞான சுந்தரம் அவர்கள் வெள்ளிக்கிழமை தோறும் மாலையில் பெரியபுராண விரிவுரை நிகழ்த்துகின்றார்.

பாவங்களும் துன்பங்களும் கரைந்து தீர்ந்து இலையாகிப் போகும் எனவும் ஆதிசங்கரர் ஸ்ரீசுப்பிரமணிய புஜங்கத்தில் பாடியுள்ளார்.

அபிநவகுப்தர் என்பவர் ஏவல்வினை செய்ய, காசநோய் உண்டாகி வருந்திய ஆதிசங்கரர் திருச்செந்தூர் வந்து திருச்செந்திலாண்டவரை வழிபட்டு, இத்திருத்தலத்தில் வழங்கப்படும் பன்னீர் இலை விபூதிப் பிரசாதம் உண்டு காசநோய் நீங்கினார்.

பன்னீர் இலையில் பன்னிரண்டு நரம்புகள் உள்ளன. இவை முருகப்பெருமானின் பன்னிரு கரங்களைக் குறிப்பில் உணர்த்தும்.

பன்னீர் விபூதியைப் பூசிக் கொள்ளும் அடியார்களுக்கு முருகப்பெருமான் பன்னிரு கரங்களாலும் தம் திருவருளை வாரி வழங்குகின்றான் என்பது பொருள்.

ஏற்கனவே நமக்கு வந்த வினைகளும், இனி எதிர்காலத்தில் படர இருக்கும் வினைத் துயர்களும் கந்தன் என்ற திருப்பெயரைச் சொன்னாலே கலங்கி ஓடும். இன்னும் செந்தில்நகர் சேவகனே என்று உள்ளம் உருகி, ஓதித் திருநீறு அணிபவர்களைத் தொடராமல் வினைகள் விலகி ஓடிவிடும். இதனை

''வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்த னென்று சொல்லக் கலங்குமே —
செந்தினகர்ச்
சேவகா என்று திருநீறு அணிவார்க்கு
மேவ வாராதே வினை''

என்ற பாடல் மிக உருக்கமுடன் கூறக் காணலாம்.

கடலோரம் அமைந்துள்ள திருச்செந்தூர் பெருமை அக்கடலைவிட விரிவுடையது. அவற்றை எல்லாம் விரித்துரைக்கின் பெருகும்.

திருச்செந்தூர் சென்று அருள்மிகு செந்தில் வேலவரை வழிபட்டால் விதியையும் வென்று, நம் வாழ்வில் வளமும் நலமும் ஓங்கிச் சிறப்புறலாம் என்று பாடுகின்றார் அருணகிரிநாதர்.

நம் தலையில் பிரமன் எழுதிய தலை எழுத்தைச் செந்திலாண்டவர் திருவடி அழித்து, நம் வாழ்வை மேம்படுத்தும் என்பதைக் கந்தர் அலங்காரத்தில் அருணகிரிநாதர் பின்வருமாறு பாடுகின்றார்.

''சேல்பட்டு அழிந்தது செந்தூர் வயற்
பொழில் தேங்கடம்பின்
மால்பட்டு அழிந்தது பூங்கொடி
யார்மனம் மாமயிலோன்
வேல்பட்டு அழிந்தது வேலையும்
சூரரும் வெற்பும் அவன்
கால்பட்டு அழிந்தது இங்கு என்
தலைமேல் அயன்
கையெழுத்தே''

'முந்து தமிழ் மாலை கோடி கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி
உழலாதே

என்று அறிவுறுத்தும் அருணகிரிநாதர், செந்தில்நகர் வாழும் ஆண்மைக்காரப் பெருமாளை வழிபட்டால் இகபரசுகங்கள் யாவும் பெற்று இன்புறலாம் என்று வழிகாட்டுகின்றனர்.

செந்தில்வேலவர் அந்தண்மறைவேள்வி காவல்காரன்; செந்தமிழ்சொல் பாவின் மாலைக் காரன்; அண்டர் உபகார சேவற்காரன் ; அஞ்சலி செய்வோர்கள் நேயக்காரன் ; குன்றுருவ ஏவும் வேலைக்காரன் ஆவார்.

அத்தகைய திருச்செந்திலாண்டவர்க்கு நித்தமும் பூசைவழிபாடுகள் வெகுகோலாகலமாகத் திருச்செந்தூரில் நடைபெற்று வருகின்றது.

தினமும் பன்னிரண்டு காலம் பூசைகள் திருச்செந்தூரில் நடைபெறுவது மிகச் சிறப்பு. அதுபோலவே ஆண்டில் இருமுறை பிரம்மோற்சவ விழாக்கள் நடைபெறுவதும் திருச்செந்தூருக்குள்ள சிறப்பாகும்.

அவை மாசிப் பெருவிழா, ஆவணிப் பெருவிழா ஆகும். ஆவணிப் பெருவிழா

திருச்செந்தூரில் மட்டுமே கொண்டாடப்படுவது இத்திருவிழாவிற்குள்ள தனிச்சிறப்பாகும்.

ஆவணிப் பெருவிழா ஆவணிமாதம் தேய்பிறையில் அசுவதி நாளில் கொடியேற்றப் பட்டுத் தொடங்குகிறது. மகநாளில் நிறைவு பெறும் இவ்விழா மொத்தம் 12 நாட்கள் சிறப்புற நடைபெறுகின்றது.

ஆவணிப் பெருவிழாவில் ஏழு, எட்டு ஆகிய நாட்களே மிகவும் சிறப்புடையன. விழாவைக் காண மிகத்திரளான பக்தர்கள் கூடுவர்.

ஆவணிப் பெருவிழாவின் ஏழு, எட்டு நாட்களில் நடைபெறும் விசேஷ அலங்காரங்களும், அதன் தாத்பரியங்களும் பின்வருமாறு விளக்கப்படுகின்றன.

1. உருகு பலகைக் காட்சி:

ஏழாம் நாள் விழாவன்று காலை சண்முகரைச் சப்பரத்தில் எழுந்தருளச் செய்யும் நிகழ்ச்சியே உருகு பலகைச் காட்சி எனப்படும். சண்முகரைச் செந்திலாண்டவருக்கு நேராக நகர்த்தித் தீபாராதனை காட்டுவர். மூலவரது சக்தியைப் பெற்று சண்முகர் சீபலி மண்பத்தில் தங்கியபின் சண்முக விலாசம் சேர்கிறார். சண்முகர் மஞ்சள் மலர் மற்றும் மஞ்சள் பட்டாடை அணிந்து இருப்பார். நான்முகன் கோலத்துடன் படைத்தல் தொழிலைச் செய்வதை இவ்வலங்காரம் குறிக்கும்.

2. வெட்டிவேர் சப்பரம்:

சண்முக விலாசத்தில் சண்முகர் அபிடேகம் அலங்காரம் பெற்று வெற்றிவேர்ச் சப்பரத்தில் புறப்படுகிறார். சுற்றிலும் வெற்றி வேர்த் தட்டிகளால் அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் தூண்டுகை விநாயகர் கோயிலின் முன் இடப்புறம் உள்ள பிள்ளையன் மண்டபத்திற்கு எழுந்தருளுவார்.

இப்போது சுவாமி நீலமலர், நீல ஆடை அணிந்து இருப்பார். திருமால் கோலத்துடன் காத்தல் தொழிலைப் புரிவதை இவ்வலங்காரம் குறிக்கும்.

3. தங்கச்சப்பரம்:

பிள்ளையன் மண்டபத்திலிருந்து ... மாலை 4 மணி அளவில் செம்பட்டு அணிந்து ..., சிவப்பு நிறமுள்ள மலர்களை அணிந்து தங்கச் ... சப்பரத்தில் சுவாமி எழுந்தருளுவது **"சிவப்புச் ... சாத்தி"** என வழங்கப்பெறும்.

சிவப்புச்சாத்திச் சிவனெனும் ... நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மானாகச் ... சுவாமி காட்சி தருகிறார். முருகப்பெருமான், ... சிவபெருமானாக அழித்தல் தொழில் மேற்கொ... ள்வதை இந்த அலங்காரம் குறிக்கின்றது.

அருணகிரிநாதர் ஆறுமுக ... ப் பெருமானிடம் நடராசர் நடனக் கோலத்தை ... தக் காட்டுமாறு வேண்ட, செந்திலாண்டவரு... ம் அவ்வாறு ஆடிக் காட்டியதை நினைவு கூரு... ம் வகையில் தங்கச் சப்பரத்தில் சிவப்புச் சாத்... தி வரும் சண்முகர், சப்பரத்தின் பின்புறம் நட... ராசர் திருக்கோலமும் காட்டுவதைக் கண்டு மகிழ... லாம்.

4. வெள்ளைச்சப்பரம்:

சிவப்புசாத்தி வலம் வந்தபின் இரவு ஒரு மணி அளவில் பந்தல் மண்டப முகப்பில் உள்ள வெங்குபாட்சா மண்டபத்தில் வீற்றிருப்பார் சண்முகர். அபிசேகம் நடைபெற்றபின் வெள்ளிச் சப்பரத்தில் வெள்ளுடை அணிந்து, வெண்ணிறப் பூக்களால் சுவாமிக்கு அலங்காரம் நடைபெறும். இந்த வெள்ளைச் சாத்தித் திருக்கோலம் சண்முகர், மகேசனாய் மறைத்தல் தொழில் புரிவதைக் குறிப்பதாகும்.

5. பச்சைச் சப்பரம்:

எட்டாம்நாள் விடியலில் சுவாமி பச்சைச் சாத்திப் பச்சைப்பட்டு அணிந்து எழுந்தருள, திரளான மக்கள் வழிபட்டு மகிழ்வர். மருக்கொழுந்து மற்றும் பச்சைஇலைமாலைகள் சூட்டிப் பச்சைப் பட்டாடை அணிந்து வரும் போது பன்னீர் அபிசேகம் சிறப்பாக நடைபெறும். தேர்வீதிகள் யாவும் பன்னீரால் சேறாகக் காணலாம்.

முருகர் சதாசிவக் கோலத்துடன் அருள்தல் தொழில் புரிதலைப் **"பச்சைச்சாத்தி"** குறிக்கின்றது.

நான்முகனாய் உயிர்களைப் படைத்துத், திருமாலாய் உயிர்களைக் காத்துச், சிவபெருமானாய் உயிர்களை அழித்து, மகேசனாய் மறைத்தல் செய்து, சதாசிவனாய் அருள்தலைப் புரிந்து ஐந்தொழில் ஆற்றுபவர் முருகப்பெருமானே என்பதை இந்த ஆவணிப் பெருவிழா மிகச் சிறப்பாக நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

முருகர் கையில் சேவல்

முருகப் பெருமான் தம் கையில் சேவல் கொடி வைத்திருப்பது வழக்கமான ஒன்று.

ஆனால் முருகன் சேவலையே கையில் தாங்கியுள்ளார். கோவை மாவட்டம் பல்லடம் அருகில் உள்ள தென்சேரி மலை வேலாயுதசாமி திருக்கோயிலில்.

மராட்டிய மாமன்னர்

சத்ரபதி சிவாஜி வழிபட்ட அன்னை காளிகாம்பாள்

மகாலட்சுமியும், மகாசரஸ்வதியும் தம் இரு கண்களாகக் கொண்டு அருள்பாலிப்பவளே ஸ்ரீ காளிகாம்பாள்.

ஸ்ரீ காளிகாம்பாளின் திருவருள் ஓங்கும் நகரம் என்பதாலேயே செல்வமும், கல்வியும் குவிந்துள்ள திருநகரமாகச் சென்னை திகழ்கின்றது என்பதை அம்பிகையின் பக்தர்கள் பெருமையுடன் கூறி வருகிறார்கள்.

தமிழகத்தின் தலைநகரமான சென்னைக்குச் சில நூறு ஆண்டுகளுக்கு முன்பு வழங்கிய பெயர் சென்னபுரி என்பதாகும்.

கி.பி. 1639ல் கிழக்கிந்திய கம்பெனியார் சென்னையை விலைக்கு வாங்கியபோது அதற்கு வழங்கிய பெயர் சென்னம்மன் குப்பம் என்பதே ஆகும்.

சென்ன - என்றால் **அழகு** என்பது பொருளாகும். கன்னடத்தில் இன்றும் அச்சொல் அழகு என்ற பொருளிலேயே வழங்கிவருகின்றது.

அழகான காளிகாம்பாள் கோயில் கொண்டு மக்களைக் காத்தபடியால் சென்னைக்கு அன்று வழங்கிய பெயர் சென்னம்மன் குப்பம் என்பதாகும்.

சென்னம்மன் குப்பம், சென்னபுரி என வழங்கிய அன்றைய சென்னைப் பகுதியை விலைக்கு வாங்கிய ஆங்கிலேயர்கள், தம் கோட்டையைக் (இன்றைய செயின்ட் ஜார்ஜ் கோட்டை) கட்டியபோது அங்கிருந்த எழில்மிகு காளிகாம்பாள் கோயிலை நிர்வகித்த நிர்வாகிகளிடம் பத்திரமாக வேறு இடத்திற்கு மாற்றிக் கட்டிக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டார்கள்.

அவ்வாறு கி.பி.1640 ஆம் ஆண்டு வாக்கில் தம்புசெட்டித் தெருவிற்கு மாற்றி அமைக்கப்பட்ட எழில்மிகு ஆலயம்தான் புகழ்மிக்க அருள்மிகு காளிகாம்பாள் ஆலயம்.

இவ்வரிய விரங்களை ஆங்கில வரலாற்று ஆசிரியரான திரு **எச்.டி.லோவ்** அவர்கள் தமது **''சென்னை நகர வரலாறு''** என்னும் நூலில் சிறப்புறத் தெளிவுபடுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மகாராட்டிரத்தில் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் மாபெரும் இந்து சாம்ராஜ்யத்தை நிலைநிறுத்திய வீரசிவாஜி தென்னகத் திருத்தல யாத்திரை மேற்கொண்ட போது சென்னையில் புகழ்பெற்று விளங்கிய அன்னை ஸ்ரீகாளிகாம்பாளை 1677ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3நாள் வழிபட்டு அம்பிகையின் திருவருள் பெற்றார் என்பதையும் ஆங்கில வரலாற்று ஆசிரியர் திரு. எச்.டி.லோவ் அவர்கள் தமது ஆங்கில வரலாற்று நூலில் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கவொன்றாகும்.

சென்னைக்கு வருகைதந்து மீண்டும் மஹாராஷ்டிரம் செல்லும் போது அரண்மனைக் காரத்தெருவில் முகாமிட்டு ஸ்ரீ காளிகாம்பாளைத் தரிசனம் செய்தான் மராட்டிய மாமன்னன் சிவாஜி. தரிசனம் செய்துவிட்டு சென்ற பிறகுதான் மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜியாக முடிசூட்டிக் கொண்டார் என்று தலவரலாறு நூல் குறிப்பிடும் அரிய செய்தி நாம் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய ஒன்றாகும்.

கதைகதையாம் காரணமாம்

''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன்

சென்னை மயிலாப்பூருக்கு அருகிலுள்ள லஸ் பிள்ளையார் கோவிலின் விமானத்துத் தென் பகுதியில் ஒரு சிலை இருக்கும். சிவனும், உமையும் அருகருகே நெருக்கமாக அமர்ந்திருக்க சிவனின் வலதுபக்கம் விநாயகரும் இடது பக்கம் முருகனும் ஒரே சிம்மாசனத்தில் ஒரு குடும்பமாய் அமர்ந்து இருப்பார்கள்.

மிக அழகான சிலை இது. அங்க அமைப்புகள் நேர்த்தியாக இருக்கும். முகம் களையோடு இருக்கும். சிற்பம் நன்றாக வந்ததாலோ என்னவோ அந்தத் தெற்குப் பகுதி சிலைக்குத் தனி விளக்கு போட்டு இரவிலும் அங்கே ஒளிபடும்படி வைத்திருப்பார்கள்.

யார் அந்தப் பகுதியைத் தாண்டிப் போனாலும் ஒரு குடும்பமாய் இருக்கின்ற அந்த நால்வரையும் பார்க்காமல் போக முடியாது. பலபேர் வணங்கிப் போவதையும் நான்கவனித்திருக்கிறேன்.

என்ன அது குடும்பமா, குடித்தனமா? சிவபெருமான் அலுவலக குமாஸ்தாவா? உமை வெறும் குடும்பத் தலைவியா? பகலில் தூங்கி இரவில் டி.வி. சீரியல் பார்த்து விடியலில் எழுந்து குழந்தைகளுக்கு உணவு தயாரித்து அனுப்புகின்ற பெண்ணா உமை? யானைத்தலை விநாயகரும், அழகனான முருகனும் என்ன விஷயங்கள்? யோசிக்கத் துவங்க இந்து மதம் சாதாரணமில்லை. அது மிகப்பெரிய விஷயம் எல்லாவற்றையும் உவமையாகச் சொல்லுகின்ற நிலையில் இந்த உருவங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பது தெளிவாகும்.

சிவம் என்பது என்ன? சடைமுடியும், பஞ்சகச்சமும், குறுக்குப்புனலும், இடுப்பில் புலித்தோல் ஆடையும் கொண்ட ஒரு உருவமா சிவம்?

சிவம் என்பது ஆத்மா. பிராணன். எங்கும் பரவியதான ஒரு சக்தி. இந்த உடம்புக்குள் பிராணன் என்பதாய் அமர்ந்திருக்கிறது.

இது அனாதியானது. எந்தக் காலத்திலும் உண்டானது இல்லை. அது உருவானதில்லை. அழிவதில்லை. எப்போதும் இருப்பது.

இந்த ஆத்மா உடல் எடுத்தது. உடல் உயிர் எடுப்பதில்லை. உயிர்தான் உடல் எடுத்தது. அந்த ஆத்மா சலனப் பட்டு ஒரு உடலுக்குள் புகுந்து கொள்கிறது. அப்பொழுது அதற்குப் பிராணன் என்று பெயர். அந்த ஆத்மா உடம்புக்குள் குடியேறிய பிறகும் விருப்பு, வெறுப்புமில்லாமல் இருக்கிறது. அந்த ஆத்மாவின் இருப்பினாலேயே உடம்பு இயங்குகிறது. வளர்கிறது. ஹிருதயம், நுரையீரல்கள் செயல்படுகின்றன. உணவு செரிக்கின்றது. வெளியே தள்ளப்படுகிறது. தசைகளும் வளர்கின்றன. இரத்தம் ஊறுகிறது. புத்தி

பாரதியார் வழிபாடு செய்த காளிகாம்பாள்

மகாகவி பாரதியார் சுதேசமித்திரன் பத்திரிக்கையில் பணியாற்றியபோது ஸ்ரீகாளிகாம்பாள் திருக்கோயிலுக்கு வருகை தந்து வழிபாடு செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்துள்ளார்.

அப்போது காளிகாம்பாள் சந்நிதியில் மெய் மறந்து நின்று பல பாடல்களைப் பாடியுள்ளார்.

''யாதுமாகி நின்றாய் - காளீ!
எங்கும் நீநிறைந்தாய்
ஆதிசக்தி தாயே! என் மீது
அருள் புரிந்து காப்பாய்''

என்ற புகழ் பெற்ற காளி தோத்திர[illegible] மகாகவி பாரதியார் ஸ்ரீகாளிகாம்பாள் திருக்கோயிலுக்கு வந்தபோது அம்மன் சந்நிதியில் இயற்றிப் பாடிய பாடல் என்பதும் நாம் அறிந்து மகிழ வேண்டிய ஒன்றாகும்.

மிளிர்கிறது. உடம்பு ஆத்மா இல்லாமல் இருக்கமுடியாது. இருப்பின், அதற்குப் பிணம் என்று பெயர்.

உடம்புக்குள் ஆத்மா இருப்பதாலேயே இந்த உடம்பு பலமாக வளர்கிறது. உடம்பு, இருப்பதாலேயே ஆத்மாவின் இருப்பு பிராணன் எனத் தெரிகிறது. உடம்பு இல்லையெனில் ஆத்மாவின் இருப்பு மனிதருக்கோ, மற்ற உயிரினங்களுக்கோ தெரியாது. அது வெறுமே இருக்கும். இயங்கத் துவங்குவதற்காக செயல்படுவதற்காக ஆத்மா அகோரப்பட்டு உடம்பாயிற்று. உடம்பானது செயல்படத் துவங்க ஆத்மா காரணம். ஆனால், ஆத்மாவிற்கு எந்தச் செயல்களிலும் சம்பந்தமில்லை. உடம்பு மட்டுமே இயங்குகிறது.

உடம்பு என்ற தசைக்கோளம் இயங்கினால் உலகம் இயங்கிவிடுமா? இல்லையே! உடம்பு என்ற தசைக்கோளம் மட்டுமே இயங்குகிற விஷயம் அல்ல. உடம்பும், உயிரும் சேர்ந்து இயங்குவதால் புத்தி என்கிற விஷயம் பிறக்கிறது. நினைவாற்றல் என்கிற விஷயம் உள்ளுக்குள் நடைபெறுகிறது. குழந்தைக்குத் தாய் தெரிகிறது. தாய் உணவு தரும் இடம் தெரிகிறது. அவள் குரல் புரிகிறது. இவையெல்லாம் நினைவாற்றலால் ஏற்படும் விஷயங்கள்.

மெல்ல மெல்ல தந்தையும், மற்றவரும், உலகமும் குழந்தைக்குப் பரிச்சயமா கின்றன. குழந்தையின் நினைவாற்றல் பலப்பட பலப்பட அதற்கு பேச்சும், பாட்டும் மற்ற பழக்கங்களும் வந்து விடுகின்றன. ஆக, உயிரும், உடலும் சிவனும், பார்வதியும் சேர்ந்தால் பிறக்கின்ற முதல் விஷயம் நினைவாற்றல் என்ற கணபதி.

புத்தி என்கிற விநாயகர் நினைவாற்றல் என்பதை உவமையாகச் சொல்வதற்கு நல்ல நினைவாற்றல் என்ற விஷயமாக யானையின் தலையாக வைத்தார்கள். யானைத்தலையை உடைய நல்ல நினைவாற்றல் உடைய ஒரு பிள்ளையைச் சொல்வதற்காக அந்த உருவம் கொடுத்தார்கள். நினைவாற்றலின் உச்சகட்டம் யானை என்கிற கூர்மையான மிருகம்.

முப்பது வருடத்திற்கு முன்பு தன்னைத் துன்புறுத்தியவனையும் யானை அடையாளம் கண்டு கொண்டுவிடும். தன்னை கைமாற்றிக் கொடுத்துவிட்டுப் போன யானைப் பாகனைப் பார்த்துச்சலாம் வைக்கும்.

விநாயகர் பிரம்மச்சாரியா? திருமணமானவரா? நினைவாற்றல் தனியாக இயங்குவதா? வேறு ஏதேனும் விஷயமா? நினைவாற்றலுக்கு துணையாக, வெளிப்பாடாக இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. ஒன்று திட்டமிடுதல். அதாவது புத்தி, இன்னொன்று செயலாற்றுதல் அதாவது சித்தி. இந்த இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குப் பயணப்படப் போகிறோம். எப்படிப் போவது? எப்படித் திரும்புவது? எந்தப்பக்கம் நடப்பது? எவ்வளவு தூரம் நடப்பது? எங்கே சாலையைக் கடப்பது என்றெல்லாம் உள்ளுக்குள் மடமடவென்று ஒரு திட்டம் ஏற்படும். இந்தத் திட்டம்தான் புத்தி. வெறும் திட்டம் போதுமா?

ஒரு ரூபாய்க்கு மேல் காணிக்கை வேண்டாம்

திருத்தணி அருகிலுள்ள பொன்பாடி மகிஷாசுரமர்த்தினி அம்மன் கோயிலில் ஒரு ரூபாய் தட்டில் போட்டால் மட்டுமே அர்ச்சகர் காணிக்கை எடுத்துக் கொள்வார்.

அதற்கு மேல் போட்டால் போட்டவரிடமே காசைத் திருப்பிக் கொடுத்து விடுவார்.

ஆவணியில் நாயன்மார் திருநட்சத்திரம்

செருத்துணையார்	-	பூசம்
புகழ்த்துணையார்	-	ஆயிலியம்
அதிபத்தர்	-	ஆயிலியம்
இளையான்குடிமாறர்	-	மகம்
குலச்சிறையார்	-	அனுசம்
குங்குலியக்கலயர்	-	மூலம்

இல்லை. திட்டம் செயலாக்கப் படவேண்டும். கால்கள் வேகமாக நடக்கவேண்டும். சரியான இடத்தில் திரும்ப வேண்டும். திரும்பிப் பிறகு பாதையை கவனமாகக் கடக்க வேண்டும். கடந்த பிறகு வெளியேற வேண்டும். சமதளத்திற்குப் போக வேண்டும். பிறகு வீட்டை அடைய வேண்டும் என்கிற செயல்திறன் சித்தி. திட்டமிடுதலும் செயல்திறனும், நினைவாற்றலுக்கு துணையாக நிற்கிறவை. சித்தி, புத்தி என்று இரண்டு மனைவியரை விநாயகர் கொண்டு உள்ளார் என்பது ஒரு உவமை. இந்த நினைவாற்றலைத் தனியாகவும் சொல்கிறார்களே ! விநாயகரை பிரம்மச்சாரியாகவும் சொல்கிறார்களே ! அதெப்படி?

கூர்மையான நினைவாற்றல் தனித்து அருமையாக இருக்கும் போது அதிகமாகிறது. ஒருவர் பலமுள்ளவராக வேண்டுமெனில் தனித்து இருத்தல் அவசியம். பிரம்மச்சரியம் என்பது பிரம்மத்தைச் சார்ந்திருப்பதே தவிர வேறு எதுவுமில்லை. விநாயகர் பிரம்மச்சாரி, தனக்குள்ளே மூழ்கிக் கிடப்பவர். நினைவாற்றல் அமைதியாய் தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது அதிகமாக பலம் பெறுகிறது. பலமாக இருப்பதை இப்படியொரு உருவமாகச் சொல்லி இருக்கிறார்கள்.

விநாயகர் பிரம்மத்தைச் சார்ந்திருக்கிற பிரம்மச்சாரிதான். சித்தி புத்தி என்று இரண்டு மனைவியை உடையவர்தான். இவை யெல்லாமும் உவமை.

அப்பொழுது முருகர்யார்?

நினைவாற்றல் என்கிற புத்திக்குப் பிறகு சிவனுக்கும் உமைக்கும் அதாவது ஆத்மாவுக்கும், உடம்புக்கும் பிறந்த இன்னொரு குழந்தை மனம். மனதிற்குப் பெயர் முருகன். முருகன் என்பதற்குப் பெயர் அழகன். மனம்தான் நீங்கள் அழகாக இருக்கிறது என்பதைக் காட்டுவது.

அழகு என்பது உடம்பல்ல ; உங்கள் கண்களில் தோன்றும் ஒளி. உங்கள் கண்களில் தோன்றும் ஒளி உங்கள் மனதினுடைய சிந்தனையைப் பொறுத்திருக்கிறது. மனம் செயல்படுவதைக் குறித்து உங்கள் முகத்தின் பிரகாசம் இருக்கிறது. நீங்கள் அழகனாக இருப்பது என்பது உங்கள் மனதால் ஏற்படும் விஷயம். நீங்கள் அழகை ரசிப்பதும் மனதால் ஏற்படும் விஷயம்.

நல்ல மழை, வானவில், தென்றல் காற்று, பூக்களின் நறுமணம், செடிகளின் அசைவு, பறவைகளின் கூச்சல், குழந்தைகளின் ஆட்டம் என்று பல்வேறு விஷயங்களை நீங்கள் ரசிக்கிறீர்கள் அல்லவா ! இவையெல்லாம் மனம் செய்யும் காரியம். மனம் அழகோடு தொடர்புடையது.

ஆனால், மனம் என்பதற்கு இரண்டு வித குணங்கள் உண்டு. ஒன்று தெய்வீகம். இன்னொன்று பூமி. மனம் என்பது இறை என்கிற விஷயத்தை மிக உயரிய விஷயத்தைத் தேடியும், பற்றியும் நிற்கும். அதே நேரம் பூமி என்கிற விஷயத்தின் மீதும் காதலாக இருக்கும். பூமி என்பதினுடைய உவமை வள்ளி. வள்ளி என்றால் என்ன அர்த்தம்?

கொடி என்று அர்த்தம். பூமியினுடைய உன்னதமான செயல் எது? தாவரம். தாவரத்தில் உன்னதமான விஷயம் எது? கொடி. ஆக பூமியின் உன்னதமான விஷயம் கொடிகள். கொடிக்குப் பெயர் வள்ளி. வள்ளி என்றால் கொடி என்று அர்த்தம். எனவே, முருகன் தெய்வீகமான, தெய்வயானை என்கிற விஷயத்தையும், வள்ளி என்கிற பூமியின் உயர்வான விஷயத்தையும் பற்றி நிற்கிறவன்.

இவையெல்லாம் உவமையாகச் சொல்லப் பட்டிருக்கின்றன.

ஆகவே லஸ்ஸின் முனையிலுள்ள பிள்ளையார் கோயிலில் இருக்கிற சிவனையும் பார்வதியையும் விநாயகரையும் முருகனையும் பார்த்து ''ஐயோ பாவம் பெருங்குடும்பி! என்னைப் போல இவருக்கும் அவஸ்தை'' என்று நினைப்பது மதியீனம்.

சொற்பொழிவு கேட்கும் சேவல்

மயிலை காரணீசுவரர் கோயிலில் ஓர் அதிசயம்

இரா. இரகுநாதன், செயல் அலுவலர்

விலங்குகளும், பறவைகளும் - வீட்டில் வளர்ப்பவைகளும் - மனிதனுடன் ஒட்டி உறவாடி விடுகின்றன. வளர்ப்பவர்களின் பழக்கத்திற்கு ஏற்ற வகையில் அவையும் பழகி விடுகின்றன.

ஊருக்குத் தண்ணீர் தரும் இடத்தைக் கழுதைகள் கண்டுபிடித்துக் கொடுத்ததையும், நடுக்கடலில் மாட்டிய மூன்று பேரைக் கடல் ஆமைகள் காப்பாற்றிக் கரை சேர்த்ததையும், கவிழ்ந்த படகில் இருந்த மனிதனை விழுங்க வந்த சுறாவிடம் இருந்து 10 டால்பின்கள் வட்டமிட்டுக் கொண்டு காப்பாற்றியதையும் கூறி விலங்குகள் ஏளனமானவையா? என ஒரு ஆன்மீக இதழ் கட்டுரை வெளியிட்டு இருப்பது இங்கு நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

விலங்குகளும், பறவைகளும் கேவலமானவை அல்ல. மனிதனுக்கு நிகரானவை. ஆத்ம சுத்தியும் உயர் எண்ணமும் கொண்டவை என்பதைப் பல வரலாறுகள் குறிப்பிடுகின்றன.

பசு, காளை, யானை, ஆடு, புலி, எறும்பு, மான், நண்டு, ஒட்டகம், பருந்து, புறா, கருங்குருவி, சிட்டுக்குருவி, காகம், குரங்கு, அணில், மீன், கருடன், பாம்பு ஆகியவை இறைவனை வழிபட்டதைத் தலவரலாறுகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

காசிக்கு வாரணாசி என்ற பெயர் உண்டு. வாரணாசி வாரணம்+அசி எனப் பிரிக்கப் படுகிறது. வாரணம் என்பதற்குக் கோழி என்ற பொருள் சொல்லப்படுகிறது. காசித் திருக்கோயில் கொக்குடீச்சரம் என அழைக்கப் பட்டதாகத் தகவல் உள்ளது. குக்குடம் என்பது சேவலைக் குறிக்கும்.

மயிலாப்பூரில் பஜார் தெரு முக்கியமான இடம். உயர்ரக வருவாய் குடியிருப்போரும், பங்களாவாசிகளும் நிறைந்து, கடைகளும் உள்ள பகுதியில் அமைந்துள்ளது மயிலாப்பூர் அருள்மிகு காரணீஸ்வரர் திருக்கோயில். இக்கோயிலின் அருகில் சுமார் 1 கி.மீ. சுற்று வட்டாரத்தில் எங்கும் கோழிகள் வளர்ப்பிடம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு செவ்வாய்க்கிழமை சஷ்டியோடு கூடிவந்த கிருத்திகை நாளில் அர்ச்சகர் சன்னதி திறந்து பூஜை செய்து கொண்டிருந்த வேளையில் சேவல் ஒன்று திடீரென்று எங்கிருந்தோ பறந்து வந்தது. கோயிலுக்குள் இருந்த பக்தர்கள் அதனை விரட்டி அடிக்க, 3 சுற்றுச் சுற்றி வந்து முருகன் சன்னதி முன்புறம் பூட்டிய கம்பிக் கதவின் முன்புறம் நின்று விட்டது அந்தச் சேவல்.

அந்நாள் முதல் இந்நாள் வரை அந்தச் சேவல் சுமார் 5 மாதங்களாகக் கோயிலிலேயே வாசம் செய்து கொண்டு உள்ளது. காலை சன்னதி திறந்ததும் அபிஷேகம் ஆனவுடன் கோயில் முழுவதையும் 2 அல்லது 3 முறை சுற்றி வந்து கொடி மரத்தருகில் சிறிது நேரம் நின்று விட்டு பிரகாரத்தில் உலாவர ஆரம்பித்துவிடும்.

சேவார்த்திகளின் பின்னால் சுற்றி வரும். குழந்தைகளுடன் விளையாடும். மாலையில் மண்டபத்தில் உட்கார்ந்து சகஸ்ரநாமம் சொல்லும் போது, நடுவில் நின்று கேட்கும்.

வெள்ளிக் கிழமைகளில் சொற்பொழிவு

நடைபெறும் போது முன்புறம் போய் நின்று பேசுவோரைக் கவனிக்கும். அதை உற்றுப் பார்த்தால் அது பேசுவோரின் பேச்சைப் புரிந்து தலையாட்டுவது போல் தெரியும்.

பிரதோஷத்தன்றும் கிருத்திகை அன்றும் தவறாமல் கோயிலைச் சுற்றிச் சுற்றி வரும். கல்கண்டு வாழைப்பழம் சாப்பிடும். கடந்த 26.06.2005 அன்று சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு மாலை ஹோமம் நடந்தபோது ஹோமத்தின் அருகில் போய் முடியும் வரை நின்றது.

துணை தேடி வெளியே எங்கும் செல்வது கிடையாது. அதனுடைய அதிகப்படி எல்லை கோயில் கோபுரப்படி மட்டுமே. இரவிலோ பகலிலோ அதனை எங்கும் அடைப்பது இல்லை.

இந்த அதிசய சேவல் அனைவரின் கவனத்தையும் கவர்வதுடன் எந்தச் சித்தரோ சேவல் உருவில் வந்துள்ளார் எனவும் மக்கள் பேசுகின்றனர்.

காசியில் சேவல் வழிபட்டது போலவே, இங்கும் வழிபாடாற்ற இந்தச் சேவல் வந்திருப்பதால், காசிக்கு நிகரான காரணீச்சரம் என மயிலாப்பூர் காரணீஸ்வரர் திருக்கோயிலைப் பற்றி மக்கள் பேசி வருகின்றனர்.

விருத்த குமார பாலரான படலம்



விக்கிரமபாண்டியன் ஆட்சிக்காலத்தில் மதுரையில் 'விருபாக்கன்' என்னும் அந்தணன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் மனைவியின் பெயர் சுபவிரதை. அவர்கள் நெடுங்காலம் மகப்பேறின்றிச் சிவவிரதம் மேற்கொண்டு கௌரி என்னும் பெண் குழந்தையைப் பெற்றனர். கௌரிக்கு ஐந்தாண்டு நிரம்பப் பெற்றது. அவள் தந்தையை வணங்கி, ''ஐயா, இப்பிறவியை ஒழிக்கும் தெய்வத்தன்மை பொருந்திய மந்திரம் யாது ?'' என்று கேட்டாள். விருபாக்கன் அதிசயித்து பராசக்தியின் திருமந்திரத்தைக் கௌரிக்கு உபதேசித்தான். தந்தையிடம் அம்மந்திரத்தைக் கேட்டுத் தெரிந்த கௌரி தினமும் சிரத்தையோடு செபித்து வந்தாள்.

கௌரியோடு தன் இல்லம் வந்தடைந்தான். வைணவ மதம் மேற்கொண்டு ஒழுகுட அவன் தாய் தந்தையர் அதனைக் கண்டு மனம் பொறாமல் வாடினர். கௌரியின் சிவவேடத்தையும், சிவ சிந்தனையையும் கண்டு அவளை நிந்திக்கத் தொடங்கினர். அவளைப் பெரிதும் துன்பப் படுத்தினர்.

ஒரு நாள் அயலூரில் நடைபெறும்

திருவிளையாடல் புராணம்

இரா.அரங்கசாமி

விருபாக்கன் தன் மகளுக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்ற எண்ணமுடையவனாய் இருந்தான். கௌரிக்கு உரிய மணப்பருவம் வந்தது. அப்போது அயலூரைச் சேர்ந்த வைணவப் பிரம்மச்சாரி ஒருவன் கௌரியின் வீட்டிற்குப் பிச்சைவேண்டி நின்றான். அவ்வாறு வந்து நின்ற வைணவப் பிச்சைக்காரனுக்குத் தன் மகளை மணம் செய்து கொடுக்க வேண்டும் என்று விருபாக்கன் விரும்பினான்.

மனைவியையும், சுற்றத்தினையும் ஆராயாமல் விருபாக்கன் மந்திரத்துடன் பிரம்மச்சாரியின் கையில் மகளைத் தாரைவார்த்துக் கொடுத்தான். அதனை அறிந்த அவன் மனைவியும், சுற்றத்தினரும் ''குலம் கோத்திரம் ஆராயாமல் இவ்வாறு செய்து விட்டாரே ! பெயர், ஊர் கூடச் சரியாகத் தெரிய வில்லையே ! இஃது என்னே ! விதியின் வழியே மதி செல்லும் என்பது இவர் விஷயத்தில் உண்மையாயிற்றே'' என்று எண்ணிக் கலங்கினர்.

பின்னர் அவன் குடி, குலம் முதலியவற்றை ஆராய்ந்து அனைத்தும் ஒத்திருப்பதை அறிந்தனர். ஆயினும் வைணவமதக்கட்டுப்பாடு ஒழுகும் குற்றம் ஒன்று மட்டுமே உள்ளது என்று எண்ணி, இனி எங்ஙனம் மறுப்பது என்று தீர்மானித்து அவனுக்கே கௌரியைத் திருமணம் செய்து கொடுத்தனர்.

வைணவப் பிராமணன் தன் மனைவி

திருமணத்திற்குச் செல்ல எண்ணிய அவர்கள் கௌரியைத் தனியே வைத்து விட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு சென்றனர். அவர்கள் சென்ற பின்னர் குற்றம் நீங்குமாறு ஒரு சிவனடியாரையும் காணப் பெறாமல் 'இன்று என் கண் மாசடைகின்றது' என்று அவள் கவலைப்படத் தொடங்கினாள். அப்போது சோமசுந்தரக் கடவுள் கௌரியின் கவலையைப் போக்கத் திருவுளங்கொண்டு முதிர்ந்த வேதியர் வடிவம் கொண்டு கௌரியை அடைந்தார். பலநாள் உணவின்றி வருந்துபவர் போல மிக வாட்டமுடன் காணப்பட்டார்.

அவரைக் கண்ட கௌரி மிக்க அன்புடன் எழுந்து எதிர்கொண்டு அழைத்து ஆசனத்தில் அமர்த்திக் கைகூப்பி வணங்கி நின்றாள். வேதியர் தாம் பசியோடு வந்துள்ள செய்தியைக் கூறினார். கௌரி, ''அய்யோ ! வீட்டைப் பூட்டிக் கொண்டு சென்றுவிட்டார்களே! என்ன செய்வேன்'' என்று சொல்லிக் கலங்கினாள். உடனே கிழவேதியர், 'உன் கையால் பூட்டைத் தொடு. பூட்டுத் திறந்து கொள்ளும். உள்ளே சென்று சமைப்பாய்' என்று கூறினார்.

கௌரியும் அவ்வாறே செய்து உள்ளே சென்று சமையல் செய்தாள். பின் வேதியரிடம் வந்து கமண்டல நீரை ஏந்தி ''ஐயனே ! திருவமுது செய்ய எழுந்தருள்க'' என்று வேண்டினாள். அவ்வாறு எழுந்த முதியவரின் பாதங்களைத் தன்

கைக்கமண்டல நீரால் தூய்மை செய்தாள். உள்ளே அழைத்துச் சென்று அமுது படைத்தாள். அதனை உண்ட முதியவர் தேவாமிர்தம் உண்டவர் போன்று மகிழ்ந்தார். முதுமையான பருவம் நீங்கப்பெற்று இளமையான மன்மதனைப் போன்ற தோற்றத்துடன் காளைப் பருவத்தினராக நின்றார்.

அவரைக் கண்ட கற்பிற் சிறந்த கௌரி நடுநடுங்கி விட்டாள். திகைத்து உடல் வியர்த்தாள். வளைக்கரங்களை நெரித்தாள். ஒரு புறம் ஒதுங்கி நின்றாள். அப்போது திருமணத்தின் பொருட்டு வெளியூர் சென்றிருந்த மாமனும் மாமியும் வீட்டின் உள்ளே வந்து புகுந்தனர். உடனே பதினாறு வயதுடைய தோற்றத்துடன் நின்ற இறையவர் கௌரியின் பொருட்டுப் பசும் குழந்தையின் வடிவத்தை மேற்கொண்டார். தரையில் விரிக்கப் பட்ட ஒரு துணியில் அழுது கொண்டு கிடந்தார்.

அழுகின்ற குழந்தையைக் கௌரியின் மாமி கண்டாள். ''இக்குழந்தை ஏது ?'' என்று கேட்டாள். சிவபெருமானிடம் அன்பு பூண்ட கௌரி. ''தேவதத்தன் என்பவன் தன் மனைவியுடன் இங்கு வந்து இக்குழந்தையைச் சற்று நேரம் பார்த்துக் கொள்வாயாக என்று கூறி இங்கு வைத்து விட்டுச் சென்றான்'' என்றாள். இதனைக் கேட்டவுடன் அவள் மாமனும் மாமியும் மிகவும் கோபம் கொண்டனர். ''சிவபெருமானிடம் அன்பு பூண்டவனின் குழந்தையிடம் அன்பு பூண்டவளே ! நீயும் எங்களுக்கு ஆகாதவளாயினை'' என்று கூறி அக்குழந்தையையும் கௌரியையும் வீட்டை விட்டுத் துரத்திவிட்டனர்.

வீட்டிலிருந்து வெளியேறிய கௌரி ஒன்றுமறியாமல் திகைத்தாள். தாயில்லாப் பிள்ளையின் திருமுகத்தை நோக்கி உள்ளம் தளர்ந்தாள். கூடல் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை மனதில் தியானித்துக் கொண்டு உமாதேவியாரின் திருமந்திரத்தை உச்சரித்தாள். என்ன ஆச்சரியம்! குழந்தை மறைந்தது. சிவபெருமான் உமாதேவியாருடன் இடப வாகனத்தில் ஏறி ஆகாயத்தில் காட்சி கொடுத்தார்.

அக்காட்சியை கண்டகௌரி சிவானந்தக் கடலில் ஆழ்ந்தாள். உடனே கௌரிக்கு இறைவர் உமாதேவியின் சாரூபப் பதவியை அளித்து அவளை இடபவூர்தியில் ஏற்றிக் கொண்டு ஆகாயமார்க்கமாக எழுந்தருளினார். பூமியில் உள்ளோர் அதனைக் கண்டு வியப்படைந்தார்கள்.

(தொடரும்)

நூல் மதிப்புரை

1. நூல் பெயர் : **மதுரங்கனிந்த திருப்புகழ்ப் பாமாலை**

நூலாசிரியர் : **திருப்புகழ் மு.அருணகிரி**

வெளியீடு : அருணகிரி பதிப்பகம்,
26, கந்தசாமி கோவில் தெரு,
பெரம்பூர் பேரக்ஸ்,
சென்னை - 600012

பக்கங்கள் : 320

விலை : ரூ 75.00

வள்ளி மலை திருப்புகழ்ச் சுவாமிகளின் பிரதமசீடருள் ஒருவரான திருப்புகழ் மாமணி மு.அருணகிரி அவர்கள் உமக்குத் திருப்புகழே நிரந்தர பொக்கிஷம் எனத் தம் குருநாதர் உரைத்த ஆசியைப் பெற்று, நாளும் திருப்புகழால் திருமுருகன் புகழைப் பரவியும், பரப்பியும் வருகிறார்.

தேமதுரத் தமிழமுதம் வழிந்தொழுகும் 36 அரிய கட்டுரைகள் இந்நூலை அணி செய்கின்றன. திருப்புகழ்ச்சித்தராகவும் பித்தராகவும் திகழும் திருப்புகழ்மாமணி மு.அருணகிரி அவர்களின் இவ்வரிய நூலை யாவரும் பயின்று இன்புறலாம்.

2. நூல் பெயர் : **பிரதோஷப் பாடல்கள்**

நூலாசிரியர் : **டாக்டர் சிவப்பிரியா**

வெளியீடு : தென்னவர் திருநெறிப் பதிப்பகம்,
969, பாபா கரக்சிங் மார்கம்,
புதுதில்லி 110001.

பக்கங்கள் : 128

விலை : ரூ 25

பிரதோஷ வழிபாட்டின் மகிமையை இந்நூல் இனிதினில் இயம்புகின்றது.

பிரதோஷ காலத்தில் ஐந்தெழுத்து ஓதி நெற்றியில் திருநீறு அணிந்து சிவவழிபாடு புரியும் போது தீராத கொடிய துன்பங்கள் எல்லாம் தீர்ந்து போகின்றன. விரதத்தினால் எந்தவிதமான தொல்லையும் உண்டாவது இல்லை. கவலை, பயம், குழப்பம் எல்லாம் நீங்கி மனம் அமைதி அடைகின்றது. சனிதோஷம் நீங்குகின்றது. வாழ்க்கையில் எல்லாவிதமான நலன்களும் வந்து சேர்கின்றன என்று தெளிவுபடக் கூறிப் பிரதோசவழிபாட்டின் மகிமை விளக்கும் இந்நூல் இல்லந்தோறும் திகழவேண்டிய பயன்மிகு நூல் என்பதில் ஐயமில்லை.

அருள்மிகு நாடியம்மன் திருக்கோயில் - பட்டுக்கோட்டை நகர் மற்றும் வட்டம் தஞ்சாவூர் - மாவட்டம்

தொலைபேசி எண் : 04373 - 259265

தல அமைவிடம் : இத்திருக்கோயில் பட்டுக்கோட்டை பேருந்து நிலையத்திலிருந்து தெற்கே அரை கி.மீ. தூரத்தில் உள்ளது. இத்திருக்கோயில் அமைந்துள்ள இடம் நாடியம்மாள்புரம் என வருவாய்துறை ஆவணங்களில் உள்ளது. காரைக்குடி - மயிலாடுதுறை ரயில் பாதையில் பட்டுக்கோட்டை இரயில் நிலையத்திலிருந்து அரை கி.மீ. தொலைவிலும், மாவட்டத் தலைநகர் தஞ்சாவூரிலிருந்து தெற்கு 45 கி.மீ. தூரத்திலும் இத்திருக்கோயில் உள்ளது.

இறைவி : அருள்மிகு நாடியம்மன்

தலவிருட்சம் : நாகலிங்கமரம்

பூஜைக் காலங்கள் : இக்கோயிலில் உச்சிக்காலம் மற்றும் அர்த்த ஜாமம் ஆகிய இரு வேளைகளிலும் காமிக ஆகம முறைப்படி பூஜை நடைபெற்று வருகிறது.

நடை திறந்திருக்கும் நேரம் : காலை மணி 7.30 - 12.30
மாலை மணி 4.30 - 8.30

தலச்சிறப்பு : இப்பகுதி மக்களின் குறை தீர்க்கும் அன்னையாக பெரிதும் நம்பப்படும் இறைவி. வடக்கு நோக்கி அருள்பாலித்து வருகிறாள். பங்குனி உற்சவத்தில் அம்மனுக்கு வரகரிசி மாலை அணிவித்தல், தேரோட்டம் மிகச்சிறப்பு. இவ்வாலயத்தில் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய இரும்பு அச்சுகள், இரும்புச்சக்கரங்கள் பொருத்தப்பட்ட மரத்தேர் ஒன்று உள்ளது.

திருவிழா : ஒவ்வொரு தமிழ் ஆண்டின் பங்குனி மாதத்தில் இரண்டாவது செவ்வாய்க்கிழமை அருள்மிகு நாடியம்மனுக்குக் கங்கண தாரணம் செய்து மூன்றாவது செவ்வாய்க்கிழமை இரவு மூலஸ்தானத்திலிருந்து நகரின் மத்தியில் அமைந்துள்ள உற்சவ மண்டபப்படிக்கு ஸ்ரீ அம்பாள் எழுந்தருளி 12 நாட்களுக்குப் பங்குனித் திருவிழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இத்திருவிழாவில் அன்னை ஸ்ரீ நாடியம்மன் வெள்ளிகாமதேனு வாகனம், அன்ன வாகனம், பூதவாகனம், ரிஷபவாகனம் வெள்ளி சிம்மவாகனம் ஆகியவற்றிலும், சிறப்பு வாய்ந்த தேரோட்டத்தின் போது திருத்தேரிலும் அம்மன் நகரின் பிரதான வீதிகளில் வலம் வந்து இறுதி நாளில் ஸ்ரீ அம்பாள் முத்துப்பல்லக்கில் நகர்வலம் வந்து திருவிழா நிறைவு பெறும்.

கட்டணங்கள் :

1. அர்ச்சனைக் கட்டணம்	ரூ 2.00
2. அபிஷேகக் கட்டணம்	ரூ. 10.00
3. முடிகாணிக்கை	ரூ. 10.00
4. மாவிளக்கு	ரூ. 1.00
5. வாகனப்பூஜை	ரூ. 10.00

கோயில் நிர்வாகம் : இத்திருக்கோயில் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சட்டப்பிரிவு 46(2)ன் கீழ்பட்டியலில் சேர்ந்ததும், தஞ்சாவூர் இணை ஆணையர் அவர்களது ஆளுகைக்கு உட்பட்டதுமான திருக்கோயிலாகும்.

இணையதளவசதி : இத்திருக்கோயிலுக்கு இண்டர்நெட் மூலம் இணையதள வசதி செய்யப்பட்டுள்ளது.

அ. இளம்பரிதி, M.A., B.L.,
தக்கார் / உதவி ஆணையர்

பொ. ஜெயராமன், M.A.,
செயல் அலுவலர்

மகாபாரதம்

முனைவர் த.அமிர்தலிங்கம்

16

இவ்வாறு சதுர்த்தசியை அமாவாசையாக்கி விடும் கண்ணபெருமான், பாண்டவர்களின் அவையைக் கூட்டி இராவான் துரியோதனன் வேண்ட, தன்னை அவனுக்குக் களப்பலி கொடுக்க உடன்பட்டு விட்டதையும் பாண்டவர்களுக்கு முன்பாக துரியோதனன் களப்பலி கொடுத்து விட்டால், வெற்றி நிச்சயம் அவனுக்கே கிட்டிவிடும் என்பதையும் எடுத்துக் கூறுகிறார்.

''சதுர்த்தசியை நான் அமாவாசையாகக் கொண்டாட வைத்து விட்டதை அறியாதவனாகிய துரியோதனன் மறுநாளே அமாவாசைஎன்று ஏமாந்திருக்கும் இந்த நேரத்தைப் பயன்படுத்தி களப்பலியை நாம் இன்றே - இன்று நடு இரவு நேரத்திலேயே கொடுத்து விட வேண்டும். களப்பலி கொடுப்பதற்கு உத்தமகுணங்கள் பொருந்த அமைந்தவர்கள் இருவர் மட்டுமே இந்த அவையில் இருக்கிறார்கள். ஒருவன் இராவான், அவனோ பகைவன் துரியோதனனுக்குக் களப்பலி ஆக உடன்பட்டு விட்டான். களப்பலிக்குப் பொருந்தக் கூடிய உத்தம குணங்கள் வாய்க்கப் பெற்ற இருவரில் மற்றொருவனாகிய என்னை நீங்கள் களப்பலி கொடுக்க உடன்படுகிறேன். உங்கள் வெற்றி ஒன்றே என் இலட்சியம். நான் தயார், இப்பொழுதே புறப்பட்டால் தான் சகாதேவன் குறித்துக் கொடுத்த முகூர்த்தம் தப்பாது. காளிகோயிலுக்குச் சென்று அவள் முன் என்னைப் பலி தருகிறேன் புறப்படுங்கள்'' என்று கண்ணபெருமான் கூறுகிறார்.

ஆனால் பாண்டவர்களோ பரம்பொருளாம் கண்ணபெருமான் பாதத்திலே விழுந்து, ''ஐயனே, நீர் களப்பலியாதல் கூடாது. எங்களுக்குப் போரிலே தோல்வி நேரினும் நேரட்டும். நாடு கிட்டாமல் போனாலும் போகட்டும். உம்மைப் பலிகொடுக்க இசைய மாட்டோம். அப்படிப்பட்ட வாழ்வும் வளமும் எங்களுக்கு வேண்டவே வேண்டாம்'' என்று தொழுதும் அழுதும் கண்ணபெருமான் மேல் தாம் கொண்டிருக்கும் பெரும் பக்தியைப் புலப் படுத்துகிறார்கள். பாண்டவர்கள் தம்மேல் கொண்டிருக்கும் பக்தியையும் பேரன்பினையும் கண்ணபெருமானும் மிக நன்றாகவே அறிவார்.

அவர் தம்மைப் பலிகொடுக்கக் கேட்டுக் கொள்வதற்குக் காரணமே அதைத் தடுக்கும் விதத்தில் இராவான் பாண்டவர்களுக்குப் பலியாக முன்வரக் கூடிய எண்ணத்தை உண்டாக்க வேண்டும்

என்ற கருத்தினால்தான். அவருடைய எண்ணம் வெல்கிறது. கண்ணபெருமானின் கால்மலர்களில் விழுந்து தம் தந்தைமார்கள் கண்ணீர் சிந்துவதைத் தாங்கிக் கொள்ள முடியாதவனாகிய இராவான் ''என்னை நான் உங்களுக்காக இப்பொழுதே களப்பலி கொடுக்கச் சித்தமாக இருக்கிறேன். கவலையை விடுங்கள். துரியோதனன் வந்து கேட்ட போது இல்லை என்று சொல்வது பண்புள்ளவர்களுக்குத் தகாதே என்று அவனுக்குக் களப்பலியாக நான் உடன்பட்டது உண்மை தான். ஆனால் அவனோ அமாவாசையன்று என்னைக் களப்பலி கொள்வதாகக் கூறிச் சென்றவன் குறித்த நேரம் வந்தும் கூட என்னைப் பலிகொள்ள வராத காரணத்தால், அற்பனுக்காக போக இருந்த உயிர் என்னைப் பெற்ற அப்பன்களுக்காகப் போகட்டும், என்னைப் பலி கொடுத்து வெற்றி கொள்ளுங்கள்'' என்று கேட்டுக் கொள்கிறான்.

உடனே கண்ணபெருமானும், ''என்னினும் பொருத்தமானவன் நீயே. இனி நாம் வெற்றிபெற எந்த தடையும் இல்லை'' என்பதாக இசைந்து கூற சகாதேவன் குறித்துக் கொடுத்த சரியான முகூர்த்தத்தில் போர்த் தெய்வமாகிய காளிக்குக் களப்பலியாக இராவானைக் கொடுக்கிறார்கள்.

''மெய்வரு காளிமுன்னர் மெய்யுறுப் பனைத்தும் வீரன்
கொய்தரு நிலையிற் கொய்து கொடுத்தனன்
ஆண்டகை கன்னிமுன்னர் அவயமனைத்தும் ஈந்து
காண்டக மலர்ந்த தீபமென முகங்கவின நின்றான்''

காலில் சிறுமுள் குத்திவிட்டாலும் அதை எடுக்கும் வலி தாங்க முடியாமல் அரற்றுகின்ற பலரை நாம் காணலாம். உயிரை விட்டுவிடுவது என்பது சுலபம். நோகாமல் உயிரைப் போக்கடித்துக் கொள்ள எத்தனையோ மருந்துகளும் வழிமுறைகளும் கூட உள்ளன. காளிதேவியின் முன் நின்று தன்னுடைய உடல் உறுப்புக்களை முகமலர்ச்சி மாறாமல் தானே ஒவ்வொன்றாக அறுத்து யாமளம் என்ற நூலில் முன்னோர்கள் வகுத்துத் தந்த இலக்கணத்தின் படி தருவது என்பது இராவான் என்ற பலவானுக்கு மட்டுமே ஆகும் என்பதைத்தான் மகாபாரதம் காட்டுகிறது.

முகமலர்ச்சி மென்மேலும் கூட களப்பலி கொடுக்க இருவருக்கும் மட்டுமே இயலும் என்பதைக் கண்ணபெருமானும் கூறினார் அல்லவா! ''ஒன்று தாம், மற்றொன்று இராவான்''. அத்தகைய இராவானுக்கு கண்ணபெருமான் மகிழ்ந்து இறவாத வரம் தருகிறார். களப்பலியாக இராவான் அவனைக் கொடுத்துவிட்ட போதும் அவன் இறவாதவனாகவே அவ்வுடலுடனே இருந்து. மகாபாரதப் போரினைக் காணவும், காண்பதோடு போரிலும் பங்கேற்றுப் பகைவர்களைப் பந்தாடவும் அவனுக்கு வரம் அருளுகிறார் கண்ணபெருமான்.

வாசகர் எண்ணங்கள்

''திருக்கோயில்'' இதழ் கற்றவர்க்கும், கல்லார்க்கும் ஒருசேர பயன் விளைக்கும் ஒப்பற்ற இதழாகத் திகழ்ந்து வருகின்றது.

ஆராய்ச்சி மாணவர் ஒருவர் என்னிடம் பதினெண்சித்தர்களைப் பற்றிய குறிப்புகள் கேட்டு வந்தார். அவருக்கு நான் திருக்கோயில் இதழைக் கொடுத்தபோது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

- பி.கே. சந்திரசேகரன், செயலாளர்,
தமிழ்நாடு தெய்வீக இயல் இசை மன்றம்,
ஆதம்பாக்கம்.

திருக்கோயில் ஜூலை மாத இதழ் படித்தேன். படைவீடு அருள்மிகு இரேணுகாம்பாள் ஆலயம், ஆடித்தபசு காணும் அருள்மிகு கோமதி அம்பாள், சேலம் கோட்டை மாரியம்மன் போன்ற பல அரிய அம்மன் ஆலயங்களைப் பற்றிய அற்புதத் தகவல்களை அள்ளித் தந்து அம்மன் சிறப்பிதழ் என்று போற்ற வைத்து விட்டீர்கள்.

-அயன்புரம் த. சத்தியநாராயணன்

இவ்வாறாக, சகாதேவன் குறித்துக் கொடுத்த நல்ல முகூர்த்தத்தில் துரியோதனனுக்கு உடன்பட்ட இராவானையே களப்பலியும் தந்து, துரியோதனனுடைய சூழ்ச்சிகளைத் தம்முடைய சூழ்ச்சியால் முறியடித்து விடுகிறார் கண்ணபெருமான். **''மகாபாரதத்துக் கண்ணா ! மாயக் கலையின் மன்னா !''** என்று கண்ணபெருமானைச் சும்மாவா பாடிப் போற்றியிருக்கிறார்கள் நம் கவிஞர்கள்.

பாரதப் போர் தொடங்கி விடுகிறது. அங்கு துரியோதனன் படைக்கு வீடுமரே சேனாதிபதி.

''பரசுடை இராமன் பாதபங்கயம் சென்னி ஏந்தி
வரிசிலை வேதங்கற்று மற்றவன் தனையும் வென்ற
குரிசிலைக் கங்கை தந்த குருகுலக் கோமான்தன்னை
அரசன் வெஞ் சேனைக்கெல்லாம் அதிபதி ஆக்கினானே''

- படையெழுச்சிச் சருக்கம்:24

இங்குப் பாண்டவர் அணிக்கு அஞ்ஞாத வாசத்தின் போது அவர்களைப் புரந்தவனாகிய விராட தேசத்தரசனின் மகன் சுவேதன் சேனாதிபதி.

இருபடை சேனாதிபதிகளும் தத்தம் படையினரைப் பாகுபடுத்திப் பிரிப்பதிலும், வியூகம் அமைப்பதிலும் ஈடுபடுகின்றனர்.

வீடுமர் தம் சேனையிலிருக்கும் வீரர்களை அதிரதர், மகாரதர், சமரதர், அர்த்தரதர் எனப்பாகுபடுத்துகின்றார். அதிரதர் எனப்படுவோர் தாம் ஒரு தேரில் ஏறி நின்று தம் தேர்க்குதிரை, சாரதிகளுக்கு அழிவுவாராமல் காத்துக் கொண்டு

நூற்றாண்டு விழா கண்ட



அருள்திரு. ஞானியார் சுவாமிகள்
(1873 - 1942)

திருப்பாதிரிப்புலியூர் **ஞானியார் சுவாமிகளும், மறைமலையடிகளாரும்** 7.7.1905 இல் தோற்றுவித்த சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் நூற்றாண்டு விழா தில்லையில் 22.7.05, 23.7.05, 24.7.05 ஆகிய மூன்று நாட்கள் சிறப்பான முறையில் கொண்டாடப் பெற்றது.

சித்தாந்த ரத்தினம் முனைவர் ஏ.எம். சுவாமிநாதன், இ.ஆ.ப. அவர்களைத் தலைவராகக் கொண்டு சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் **திருமிகு த. பிச்சாண்டி இ.ஆ.ப.** அவர்கள், உலகெங்கிலும் இருந்து தமிழ்ச் சான்றோர்கள் இப்பெருவிழாவில் மிக்க மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள்.

பிறர் துணை ஒன்றும் வேண்டாமலே பல்லாயிரக் கணக்கான தேர்வீரர்களைப் போரில் வெல்லக்கூடிய மகாவலிமை படைத்தவர்கள் ஆவர்.

அதிரதரை விடச் சற்றுத் தாழ்ந்தவர் மகாரதர். இவர்கள் தாம் ஒருவராகவே பதினோராயிரம் தேர் வீரர்களோடு போர் செய்து வெல்பவர் ஆவர்.

சமரதர் எனப்படுவோர் ஒரே ஒரு தேர் வீரரை மட்டும் எதிர்க்க வல்ல வலிமை பெற்றவர் ஆவர்.

அர்த்தரதர் என்பவர் மிகக் குறைந்த வலிமை படைத்தவர். அதாவது நேருக்கு நேர் போரிடும் ஒரே ஒரு தேர்வீரனையும் வெல்ல முடியாமல் சிரமப்படுபவரே அர்த்தரதர் ஆவர்.

இத்தகைய அர்த்தரதர்களில் ஒருவனாக கர்ணனை வீடுமர் வகைப்படுத்தும் போது, கர்ணனுக்கு ஆத்திரம் எப்படி வராமல் போகும்?

வீடுமர் தன்னையும் துரோணர், துரோணர் மகன் அசுவத்தாமா, பூரிசிரவஸ் ஆகியோரை அதிரதர் எனவும், சோமதத்தன், பகதத்தன், துர்மர்ஷன் ஆகியோரை மகாரதர் எனவும், கிருதவர்மன், சகுனி, சல்லியன், சயத்திரதன் ஆகியோரைச் சமரதர் எனவும் வகைப்படுத்தி, தம்மையும் காத்துக் கொள்ளத் திறமையில்லாத அர்த்தரதர்கள் என்ற வகையில் துரியோதனனின் தம்பியர் தொண்ணூற்றொன்பதின்மரையும், கர்ணனையும் வகைப்படுத்த, கர்ணன் வீடுமரைச் சுட்டுப் பொசுக்கி வீடுவதைப் போன்ற கோபத்துடன் வீடுமர்மேல் பாய்கிறான்.

''உன்னுடைய உயிரைப் பறித்துவிடுகிறேன். நானா அர்த்தரதன்? நான் அர்த்தரதனா? அதிரதனா? என்பதை இப்பொழுதே காட்டி விடுகிறேன். ஏய் கிழவா! உனக்கு வீரமிருந்தால், உன்னுடைய உயிரைக் காத்துக்கொள், பார்ப்போம்'' எனக் கர்ணன் வீடுமன் மேல்பாய, இடையில் வந்து துரியோதனன் கர்ணனைத் தடுத்துச் சமாதானப் படுத்துகின்றான்.

துரியோதனனுக்காக கர்ணன் தன் மாளாக் கோபத்தை அடக்கிக் கொண்டாலும், ''இனி நான் இங்கே நிற்பதில் அர்த்தமே இல்லை. இந்த அர்த்தரதன் போரில் கலந்து கொண்டு என்ன சாதிக்கப் போகிறான்? துரியோதனா! இந்த வீடுமன் உயிரோடு இருக்கும் வரையில் நான் உனக்காகவும் போர் செய்யப்போவதில்லை. இது சத்தியம்'' என்று சபதம் செய்தவனாக யாருடைய சமாதானத்திற்கும் காத்திருக்காமல், போர்க்களத்தை விட்டே புறப்பட்டுப் போய் விடுகிறான் கர்ணன்.

துரியோதனனுக்குப் போர் தொடங்குவதற்கு முன்னமே தோல்விமேல் தோல்வி, அடிமேல் அடி.

பாண்டவர் பக்கத்தில் இத்தகைய குழப்பங்கள் ஏதும் இல்லாமல் வீரர்கள் வகைப்படுத்தப்பட்டு, படைகளும் அணி வகுக்கப்படுகின்றன.

**''செங்கண்மால் உயிர், தருமன் மார்பு, சுவேதன்
ஆனனம், இருபுயம்
வெங்கண் வீமனும் விசயனும், திறல்வில்
மருத்துவர் மைந்தர் தாள்
அங்கண்மா முடியரசர் மற்றும் அவய ஆதிகள்
ஆகவே
தங்கள் பூமியிலான போதொரு வடிவ மொத்தது
தானையே''**

- அணிவகுப்புச் சருக்கம் : 16

போரில் வெற்றி பெறுவதற்கு இன்றியமையாத முதல் தேவை போர் வீரர்களிடம் காணப்படக்கூடிய ஒழுங்கும் கட்டுப்பாடும். அந்த ஒழுங்கும் கட்டுப்பாடும் பாண்டவர் படையில் காணப் படுகிறது என்பதைத்தான் வில்லிப் புத்தூரார் மேற்கண்ட பாடலில் மிக நேர்த்தியாகச் சித்தரிக்கிறார்.

சைவ சித்தாந்தப் பெருமன்றம்

விழாவின் சிறப்பாக சைவ சித்தாந்த நூற்றாண்டுப் பெருவிழா மலர் வெளியிடப்பட்டது.

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் **திருமிகு பி.சி. இராமசாமி** அவர்கள் **''வாழ்த்தும் வையகம்''** எனும் தலைப்பில் அரியதொரு வாழ்த்துரையைத் தந்து இந்நூற்றாண்டு விழா மலரினைச் சிறப்பித்து உள்ளார்கள்.

மலரின் விலை : ரு.200.
மலர் வேண்டுவோர் நாட வேண்டிய முகவரி:
சைவசித்தாந்தப் பெருமன்றம்
4, வேங்கடேசஅக்கிரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004

தவத்திரு மறைமலை அடிகளார்
(1876 - 1950)

பாண்டவர் தளபதியாக சுவேதன் படைக்கு முகமாக இருக்கிறான். தருமர் மார்பாகத் திகழ்கிறார். வீமனும் விசயனும் இருதோளாக விளங்குகின்றனர். மற்ற அரசர்கள் உடலின் பிற உறுப்புக்களைப் போல ஒழுங்குபட்டு விளங்க, பாண்டவர் படையாகிய உடலுக்கு உயிராக கண்ண பெருமான் திகழ்கிறார் என்கிறார் வில்லிப்புத்தூரார்.

இவ்வாறு குருசேத்திரப் போர்க்களத்தில் பாண்டவர்கள் மற்றும் துரியோதனன் படைகள் போருக்கு ஆயத்தமாகி அணி வகுத்து நிற்கின்றன.

போர் முரசம் முழங்கியதும் போரும் தொடங்க வேண்டியது தான். அதற்குள் நேர்ந்து விடுகிறது பாண்டவர் அணியில் ஒரு மாபெரும் சங்கடம், பாண்டவர், துரியோதனன் படைகளுக்கு நடுவில் கண்ண பெருமான் தேரினைக் கொண்டு வந்து நிறுத்துகிறார். தேரில் அமர்ந்தவாறே தான் வெல்ல வேண்டிய எதிரியின் படையை முழுமையாக ஒரு பார்வை பார்க்கிறான் அர்ச்சுனன்.

அப்படையில் இருப்பவர் அனைவரும் தனக்கு உறவினர்களாகவும், 'நண்பர்களாகவும், வேண்டப் பட்டவர்களாகவும் விளங்குவதைக் காணும் அர்ச்சுனன் மனம் தளர்ச்சியடைந்து ''நான் போர் செய்யமாட்டேன். எனக்கு நாடும் வேண்டாம், நகரமும் வேண்டாம், தாத்தாவைக் கொன்று தம்பிகளைக் கொன்று, கல்வி கற்பித்த ஆசிரியரைக் கொன்று நண்பர்களைக் கொன்று நாடு கொள்வதில் எனக்கு நாட்டமே இல்லை. என்னால் போர் செய்ய முடியாது. என்னை விட்டு விடுங்கள். நான் மறுபடியும் வேண்டு மானாலும் காட்டிற்கே போய் விடுகிறேன்'' என்பதாகக் கூறித் தன்கையிலிருக்கும் காண்டீபத்தையும் கீழே போட்டுவிடுவதைக் காணுகின்றோம்.

தேவர்களின் தலைவன் இந்திரானாலும் வெல்ல முடியாத வலிமையும், வரமும் பெற்று விளங்கிய நிவாத கவசஅரக்கர்கள் மூன்று கோடிப் பேரையும், காலகேய அரக்கர்கள் அறுபதினாயிரம் பேரையும் வெற்றி கொண்ட மாபெரும் வீரனே அர்ச்சுனன்.

அவனிடத்தில் சிவபெருமான் தந்த பாசுபதாத்திரம் உண்டு. அக்கினி பகவான் அளித்த காண்டீபம் உண்டு. இராவணனின் அடல் அழித்த அனுமனே தேர்க் கொடியாகி நிற்கும் துணைப்பலமும் உண்டு.

இத்தனைக்கும மேலாக கண்ணபெருமானே பார்த்தசாரதியான பாக்கியமும் அவனுக்கே உண்டு. இத்தனை இருந்தும் துரியோதனனுக்காகத் திரண்டிருக்கும் பதினோரு அக்குரோணி சேனைகளை ஒரு சேரப் பார்வையிட்டுக் காண்டீபத்தை கைநழுவ விட்டான் என்றால், அதற்கு அச்சமா காரணம்?

அச்சம் என்ற வார்த்தையையே அறியாதவன் அர்ச்சுனன். அதனை மதியாதவன். மாபெரும் வீரன் ஆகிய விசயன், ''எனக்கு நாடும் வேண்டாம், என்னை விட்டு விடுங்கள், நான் காட்டிற்கே போய் விடுகிறேன்'' என்று இருபடைகளும் அணி வகுத்து மோதப் போகின்ற அந்த இறுதி நேரத்தில் அப்படியொரு திடீர் முடிவுக்கு வந்தான் என்றால் அதற்கு என்ன காரணம்? பெரியவர்களைப் போற்றும் அர்ச்சுனனுடைய அருங்குணம் தான் அதற்குக் காரணம்.

(தொடரும்)

சிற்பங்கள் அறிவோம்

தாராசுரம் ஐராவதீசுவரர் கோயிலில் பெரியபுராணச் சிற்பங்கள்

மா. குணசேகரன், எம்.ஏ., பி.எஸ்.ஸி.
முதல்வர், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி, மாமல்லபுரம் மற்றும் ஸ்தபதி ஆலோசகர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.



தாராசுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஐராவதீசுவரர் கோயில், இரண்டாம் இராஜராஜ சோழனால் தமிழ் மண்ணிற்கு அளிக்கப்பட்ட அரியதொரு கலைப் பெட்டகமாகும். இக்கோயில் தஞ்சையிலிருந்து 37 கி.மீ. தொலைவில் கும்பகோணத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இரண்டாம் குலோத்துங்கனுக்குப் பிறகு சோழர் குல மரபுப்படி இரண்டாம் இராஜராஜ சோழன் பரகேசரிப் பட்டம் புனைந்து கொண்டான். இவனது ஆட்சி ஆண்டு கி.பி. 1147 முதல் 1173 வரை எனக் கணக்கிடப்படுகிறது.

தாராசுரம் ஐராவதீசுவரர் கோயிலில், கட்டடக்கலை, சிற்பக்கலை வேலைப்பாடு மிக நுணுக்கமாக கருங்கல்லால் செதுக்கப்பட்டதாகும். முதலாம் இராஜஇராஜசோழன் தஞ்சையில் மிக உயர்ந்தக் கருவறை விமானத்தைக் கட்டிச் சிறப்புப் பெற்றான். அம்மரபில் வந்த இரண்டாம் இராஜராஜ சோழன் தாராசுரத்தில் சிறிய அளவில் ஒரு கோயிலைக் கட்டினாலும் மிக உயர்ந்த நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்த சிற்பங்கள், தூண்கள் போன்ற அம்சங்கள் அதில் சிறந்ததாகும். இக்கோயிலில் உள்ள சிற்பங்களின் இலக்கியச் சிற்பங்கள் என கூறத்தக்கவை நாயன்மார்களின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களில் முக்கிய நிகழ்ச்சிகளை விளக்கும் வண்ணம் அமைந்தவை ஆகும்.

கருவறையில் பாத வர்க்கத்தில் உள்ள வேதிகை வரியில் தொடர்ச் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு சிற்பத்தின் மீதும் தமிழ் கல்வெட்டால் அதன் பெயர்கள் பொறிக்கப் பட்டுள்ளன. ஆனால் அவ்வெழுத்துக்கள் தற்பொழுது கால வெள்ளத்தால் மறைந்து வருகின்றன. சிற்ப சாஸ்திர அளவுகள், பங்க அமைதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவை புடைப்புச் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன. பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ள பாடல் வரிகளுக்கு ஏற்ப வரிசைக் கிரமமாக 63 நாயன்மார்கள் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருப்பது வியக்கத்தக்கதாகும். அதில் முதல் மூன்று சிற்பங்களைப் பற்றி இங்கு காண்போம்.

தில்லைவாழ் அந்தணர் சிற்பம்

இச்சிற்பம் 7 அங்குல உயரமும், 14 அங்குல நீளமும் கொண்டுள்ளது. ஏகதள விமானத்தின் கருவறைப் பகுதி, அதிட்டானம் முதல் பிரஸ்தரம் ஈறாக இதில் காட்டப்பட்டுள்ளன. இதில் அமைந்துள்ள பிரஸ்தரத்தில் நான்கு கர்ணக் கூடுகள் காணப்படுகின்றன. இதன் முன், மூன்று அந்தணர்கள் நிற்கின்றனர். அதில் ஒருவர் குடையையும், சாமரத்தையும் வைத்துள்ளார். மற்ற இருவரும் கைகளைத் தலைக்குமேல் தூக்கி நின்ற கோலத்தில் இறைவனை வணங்கும் காட்சி இடம் பெற்றிருக்கிறது. இம் மூவரும் தில்லை வாழ் அந்தணர்கள் என்றும் ஒவ்வொருவரும் ஆயிரம் அந்தணர்களுக்கு ஒப்பாவர் என்றும் கொள்ள வேண்டும்.

திருநீலகண்ட நாயனார் சிற்பம்

இச்சிற்பம் ஏழு அங்குல உயரமும், 17அங்குல நீளமும் உடையதாகும். இச்சிற்பக் காட்சியின் இடப்புறத்தில் ஒரு சிவன் கோயில் மிக அருமையாகக் காட்டப்பட்டுள்ளது. அதிஸ்டானம், பாதம், பிரஸ்தரம், கண்டம், சிகரம், ஸ்தூபி இவை அனைத்தும் பொருந்தியும், கோஷ்டம் நாசிக்கூடு ஆகியவற்றுடன்கூடிய ஏகதள விமானம் முகமண்டப அமைப்போடு காட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் முன்புறம் ஒரு



குளம் போன்ற அமைப்பும் அதில் ஒரு ஆணும், பெண்ணும் ஒரு கோலை ஒவ்வொரு முனையிலும் பிடித்து அத்திருக்குளத்தில் மூழ்கக் கூடிய பாவனையில் செதுக்கப்பட்டுள்ளது. இது நீலகண்ட நாயனாருடைய வாழ்வில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சியாகும்.

இங்கே கோல் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. ஏன் இருவரும் கோலைப் பிடித்துக் கொண்டு இருக்கவேண்டும் என்ற கேள்விக்கு விடை பிறக்கிறது. இதன் அந்தரங்கம் இங்கே கிராம சபையினரிடம் அடியார்களை உபசரித்து அவர்களுக்குத் திருவோடு கொடுக்கும் இத்தகைய பக்தர் இளமையின் மிடுக்கால் புறத்தொழுக்கம் உடையவராக இருந்தமையால் அவரது மனைவி திருநீலகண்டத்தின் மேல் ஆணையிட்டு எம்மைத் தீண்டக்கூடாது என்றார். எம்மை என்றதனால் இனி உம்மை மட்டுமல்ல எந்தப் பெண்ணையும் தீண்டுவதில்லை என்று காம இன்பத்தைத் துறந்து இருந்தார் என்ற செய்தி இங்கே வெளியாகிறது. அவ்வாறு கோலைக் காட்டி கேள்விக்குரிய வினாவை எழுப்பி விடை காணச் செய்யும் வகையில் இச்சிற்பம் செதுக்கப் பட்டு உள்ளது. இக்காட்சியைக் கீழ்கண்ட பாடலிலே காணலாம்.

''தண்டிரு தலையும் பற்றிப் புகுபவர் தம்மை நோக்கி
வெண்டிரு நீற்று முண்ட வேதியர் மாதைத் தீண்டிக்
கொண்டுடன் மூழ்கீ ரென்னக் கூடாமை பாரோர் கேட்கப்
பண்டு தன் செய்கை சொல்லி மூழ்கினார் பழுதிலாதார்''

(பெரி. 238)

இயற்பகை நாயனார் சிற்பம்:

இச்சிற்பம் 7 அங்குல உயரமும் 18 அங்குல நீளமும் கொண்டு திகழ்கிறது. இச்சிற்பத்தில் நாம் முக்கியமாகக் கருத்திற் கொள்ள வேண்டியது, கொண்டையை உடைய தலையணியுடன் இருகரம் குவித்து ஒரு பெண் நாணத்துடன் நிற்பதையும், அந்தப் பெண்ணிற்கு வலது புறம் (நமது பார்வைக்கு இடப்புறம்) அடியவர் அப்பெண்ணை அழைக்க முயல்வதும், அவளது வலதுபுறம் உரிமையுடன் தொட்டு அவருடன் செல்க என்ற பாவனையில் ஒருவரும், அவருக்கு வலதுபுறம் ஒருவர் வணங்கிய நிலையிலும், மற்றவர் எதையும் கூற முடியாமல் நிற்பதும் காட்சியாகச் சித்தரிக்கப்பட்டு இருக்கிறது. இக்காட்சியில் அடியவர் தன் மனைவியைச் சிவனடியார்க்குக் கொடுக்கப் போகும் பாவனையைச் சிற்பி காட்டியுள்ளார். இக்காட்சியை விளக்கும் வகையில் கீழ்க்கண்ட பாடலும் அமைந்துள்ளது.

''......தம் மனை வாழ்க்கை
கற்பின் மேம்படு காதலியாரை
விதி மணக்குல மடந்தை இன்று உனைஇம்
மெய்த்த வர்க்குநான் கொடுத்தனன் என்ன.''

(பெரிய 323)

இவரது வாழ்க்கை நிகழ்ச்சியில் பல சம்பவங்கள் இடம் பெறுகின்றன. அவை இங்கே காட்டப்படவில்லை. தன் மனைவியையே தானமாகக் கொடுக்கிறானே என்று அவர் சுற்றத்தார்கள் வெகுண்டெழுந்து ஆயுதங்களுடன் வழிமறித்ததாகவும், நாயனார் கத்தி, கேடயம் கொண்டு அவர்களிடம் போரிட்டதாகவும் கூறப்படுகிறது. இந்நிகழ்ச்சி சிற்பமாக்கப் படவில்லை. இறைவர் தாம் தூர்த்த வேடங் கொண்டு வந்தார் என்பதை வெளிப்படுத்தி அமைப்பதாக ரிஷப வாகனத்தில் அபயம் அளிக்கும் காட்சி இச்சிற்பத்தில் காட்டப்பட்டுள்ளது.

ஆயிரம் காளியம்மன் கோயிலில் ஒரு அதிசயம்

காரைக்கால் அருகே உள்ளது ஆயிரம் காளியம்மன் கோயில். இந்த அம்மன் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வைகாசி மாதம் வளர்பிறை திங்கட்கிழமை அன்று ஒருநாள் மட்டும் தான் பக்தர்களுக்குத் தரிசனம் தருகின்றாள்.

மற்றநாட்களில் அம்மன் வீற்றிருக்கும் பெட்டியை மட்டுமே பக்தர்கள் வணங்க முடியும்.

இந்த அம்மனுக்கு எதைப் படைத்தாலும் 1000, 2000, 3000 என்ற எண்ணிக்கையில் தான் படைக்கமுடியும். ஆகவே இந்த அம்மனுக்கு ஆயிரம் காளியம்மன் என்பது திருநாமம் ஆகும்.

ஓர் அரிசி

(நீதிக்கதை)

''அருளரசு'' திருமுருக
கிருபானந்த வாரியார் சுவாமிகள்

ஒரு கிராமத்தில் ஒரு கிழவி இருந்தாள். சூது வாது வஞ்சனை பொய் களவு முதலிய தீக்குற்றங்கள் அத்தனைக்கும் அவள் உறைவிடமாக இருந்தாள். தரும குணம் ஒரு சிறிதும் இல்லாத பொல்லாத கிழவி. அவள் வீட்டில் வாழும் எறும்புகளுக்கு நித்திய ஏகாதசி. ஒன்றையும் சிந்தமாட்டாள். எறும்பின் வாயில் ஒரு நொய்யைப் பார்த்தால் உடனே ஓடி அதை எடுத்துப் பானையில் போட்டுக் கொள்வாள். அவள் வீட்டில் சாப்பிட்ட இலை வெளியில் விழுந்தால் சாப்பிடாத இலை மாதிரி சுத்தமாக விழும். அதில் ஓர் துளிப் பசைகூட இராது. நாய்கள் வந்து பார்த்து ஏமாந்து போகும். நாம் செய்கின்ற வேலைகள் முழுவதையும் இந்தக் கிழவியே செய்துவிட்டாள் போலும் எனப் பேசிக்கொள்ளும்.

ஒரு நாள் காலை, கிழவி நடையில் அரிசி தட்டிக்கொண்டிருந்தாள். ஒரு சிவனடியார் வந்து

**''அரஹர சிவசிவ அம்பல வாணா
பரம தயாபர வரத குணாளா''**

என்று பாடிக் கொண்டு நின்றார். 'பாட்டி! ஒரு பிடி அரிசி போடு' என்றார்.

கிழவி, 'ஏய்! உனக்கென மமதை? எனக்கு என்ன வயது? எண்பதுதானே ஆயிற்று! பாட்டி என்கிறாய். பச்சைவெட்டு மருந்து சாப்பிட்டுப் பல் போய்விட்டது. தேன் பட்டு மயிர் நரைத்து விட்டது. இது என்ன தருமசத்திரமா? உனக்கென்ன கேடு? செக்குலக்கை மாதிரி இருக்கின்றாய் போ போ!' என்று விரட்டினாள்.

''பெரியம்மா! காதில் தங்கத்தால் செய்த பாம்பு வடம் போட்டிருக்கின்றாயே! கழுத்து நிறையத் தங்கச் சங்கிலி, இவையெல்லாம் ஏது! சிவன் தந்ததுதானே! நான் பொன்னையும் பொருளையும் கேட்க வில்லையே! ஒரு பிடி அரிசி தானே யாசிக்கின்றேன்? அண்டாத் தொண்டையால், தகர டின்தட்டியது போல் கர்ச்சித்துப் பேசுகின்றனையே!'' என்றார் சிவனடியார்.

அவ்வளவுதான், கிழவிக்குப் பொங்கி எழுந்தது சீற்றம். ஆலகால விஷம் போல் கொதித்தாள். ''பிச்சைக்காரப் பயலே! என் வீட்டிலே வந்து என்னையே திட்டுகிறாயா ?'' என்று வைது, அரிசி தீட்டுகின்ற உலக்கையால் பத்திரகாளிபோல் அந்தச் சிவனடியாரை அடிக்க ஓங்கினாள்.

உலக்கையில் ஒட்டியிருந்த ஓர் அரிசி அவருடைய அட்சய பாத்திரத்தில் வீழ்ந்தது. அதனைக் கிழவி பார்க்கவில்லை. பார்த்திருந்தால் எல்லா அரிசியும் என்னது என்று எடுத்துக் கொண்டிருப்பாள். அடியார் பிடித்தார் ஓட்டம்.

மற்ற வீடுகளுக்குச் சென்றார். சிறிது அரிசி கிடைத்தது. ஒரு மண்டபத்தில் அதைப் பொங்கி, தாம் வழிபடும் சிவலிங்கத்துக்கு நிவேதித்தார். பசியாறினார். சிவயோகத்தில் அமர்ந்தார். சிவஞானிகள் இன்றிருந்த ஊரில் நாளை இரார். அவர் தலயாத்திரைக்குச் சென்று விட்டார்.

நாளடைவில் கிழவி கண்ணை மூடிவிட்டாள். கால தூதர்கள் அவளைக் கட்டிப்பிடித்து யாதனா சரீரத்துடன் கொண்டு போய் அறக்கடவுளுக்கு முன்னே நிறுத்தினார்கள்.

அறக்கடவுள் கடுகடுத்த முகத்துடன் 'சித்தரகுப்தா, இவள் கணக்கை எடுத்துப்படி' என்று கட்டளையிட்டார்.

சித்திரகுப்தன் கிழவியின் கணக்கை எடுத்துப் படித்தான். 'எல்லாம் பாவந்தான், புண்ணியமே இல்லை. ஒரு நாள் ஒரு மகானை உலக்கையால் அடிக்கச் சென்றாள். உலக்கையில் ஒட்டிய ஓர் அரிசி அவருடைய கரத்தில் இருந்த அட்சய பாத்திரத்தில் வீழ்ந்தது. அந்த ஓர் அரிசி சிவநிவேதனமாகி அச்சிவயோகியார் திருவயிற்றில் சேர்ந்தது. இந்த ஒன்றுதான் இவள் வாழ்நாளில் செய்த புண்ணியம். அதுவும் அபுத்தி பூர்வமாகச் செய்தது' என்றான்.

அறக்கடவுள் ''அந்த ஓர் அரிசி அடியாரின் திருவுதரத்தில் வீழ்ந்தபடியால் திருக்கயிலாய மலையிற் சென்று சிவபெருமானைத் தரிசிக்க வேண்டும்'' என்றார்.

நமனுடைய தமர்கள் கிழவியைப் பாசக் கயிற்றால் நன்றாகப் பிணித்துக் கொண்டு போய்த் திருக்கயிலாயத்தில் சிவசந்நிதியில் நெடுந் தொலைவில் நிறுத்தினார்கள்.

'கிழவி' அதோபார், சிவபெருமான்!'

பவளக் குன்று போன்று கோடிச் சந்திரப் பிரகாசமாம் வேத மந்திர பீடத்தில் வீற்றிருக்கும் சிவ மூர்த்தியையும், இடப் பாகத்தில் மரகதக் கொடிபோல் வீற்றிருக்கின்ற இமயவல்லி

அம்மையையும், இடையில் கனகச் சிறு குன்று போல் களி நடம் புரியும் கந்த வேளையும் கண்டாள் கிழவி. அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சிந்தியது.

''அப்பா எமதூதர்களே! உங்களுக்கு ஒரு கோடி வணக்கங்கள். ஓர் அரிசிக்கு இத்துணைப் புண்ணியம் வரும் என்று பாவியாகிய எனக்குத் தெரியாமல் போய்விட்டது. அந்தோ! என் வீட்டில் குதிர் நிறைய நெல்லும் பல மூட்டைகள் அரிசியும் நெய்யும் பாலும் முந்திப் பருப்பும் பாதாம் பருப்பும் டப்பா டப்பாவாக இருந்தன. அத்தனையும் இப்போது எனக்கு உதவவில்லை. பெட்டி நிறைய பணம் வைத்திருந்தேன். வட்டிமேல் வட்டி வாங்கினேன். பெட்டி மேல் பெட்டி அடுக்கினேன். எல்லாம் அங்கேயே நின்று விட்டன. அடியாரிடம் சேர்ந்த ஓர் அரிசிதான் இங்கு உதவுகின்றது. இத்துணைப் புண்ணியம் வரும் என்று யாரும் எனக்கு விவரமாகச் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் என் வீடு தேடி வந்த அடியார்க்கு இருக்கையிட்டுப் பாலும் நெய்யும் அன்னமும் சொர்ணமும் அள்ளி வழங்கியிருப்பேன். சண்டாளியாகிய நான் கிள்ளிக்கூடத் தந்தேன் இல்லை. வாழ்நாள் முழுவதும் வீழ்நாளாகக் கழித்தேனே! போற்றாதே ஆற்றா நாள் போக்கினேனே! அப்பா, நீங்கள் நல்ல உத்தமர்கள். தேவருக்கும் மூவருக்கும் காணக் கிடைக்காத கண்ணுதற் கடவுளைக் கண்ணாரக் கண்டேன். ஆனந்தம் கொண்டேன். கடவுளைக் கண்டு கைகூப்பித் தொழவில்லையானால் மேலும் பாவந்தானே! உங்களைத் தலைவணங்குகிறேன். சிறிது கட்டை அவிழ்த்துவிடுங்கள். கை கூப்பிக் கும்பிடுகின்றேன். பிறகு என்னைக் கட்டிக் கொண்டு போய் எரிவாய் நரகில் இருத்துங்கள்'' என்று மிக மிக நடுங்கிய குரலுடன் இனிமையாக கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

இரக்கமே அறியாத எமதூதர்களின் உள்ளம் சிறிது உருகிற்று. 'குடலறுந்த குறுநரி எங்கே போய்விடும்' என்று கருதிச் சிறிது கட்டை அவிழ்த்து விட்டார்கள்.

''தேவதேவா! மஹாதேவா! தீனரட்சகா! கருணைக் கடலே! ஏழை பங்காளா! அருட்பெருஞ்சோதி! அப்பனே! சிறியேன் அறியாமையால் வல்வினைகளைச் செய்து விட்டேன். அத்தனையும் பொறுத்து ஏழையைக் காத்தருள், காலதூதர்கள் இரும்புச் சம்மட்டியால் அடிப்பார்களாமே! கும்பி நோக நரகில் தள்ளிச் சித்திரவதை செய்வார்களாமே! தாண்டவம் புரியும் ஆண்டவனே! வேண்டியவர்களுக்கு அருளும் தயாநிதியே! என்னை விரட்டியடிக்காமல் காத்தருள். குழந்தைகள் செய்த குற்றங்களுக்கு அம்மையும் அப்பனும் தண்டிக்கலாம். தெருவில் போகும் பயில்வானை விட்டுத் தண்டிக்க மாட்டார்களே! எமனிடம் கொடுத்து என்னைத் தண்டிக்காதே!'' என்று கூறி அழுதாள்; தொழுதாள்.

கருணாநிதியாகிய கண்ணுதற்பெருமான் அவள் மீது கருணை மழை பொழிந்தார். 'அஞ்சேல்' என்று அபயம் அளித்தார்.

கிழவி சிவபெருமான் திருவடியின் அருகில் நெருங்கி அமர்ந்தாள்.

இத்தனையும் கண்ட காலதூதர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள். 'கிழவி, வெளியே வா' என்று அழைத்தார்கள். கிழவி, 'வரமுடியாது, போங்கள்' என்றாள்.

காலதூதர்கள், 'எமபெருமானே! கிழவியை அனுப்புங்கள். இவள் கொடிய பாவி ; நரகில் இவளைத் தண்டிக்க வேண்டும்' என்றார்கள்.

சிவபெருமான், ''காலதூதர்களே! விண்ணளவு அடுக்கிய பஞ்சுப் பொதி, பொறி நெருப்பினால் எரிந்து கரிந்து சாம்பாரானாற்போல இவளுடைய பாவங்கள் யாவும் என்னைத் தீண்டியவுடனே நீறாகிவிட்டன. இவளை நாம் மன்னித்து அருள் புரிந்தோம். நீங்கள் உங்கள் உலகுக்குச் செல்லுங்கள்'' என்று அருளிச்செய்தார்.

தமிழ்த்தாத்தா

உ.வே.சா.வின் வாழ்வும், தமிழ்த் தொண்டும்

டாக்டர் பு.ஏ. இராமையா,இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை,
தலைமைச் செயலகம்

தமிழ்த் தாயை தலை நிமிர்த்தி தரணியெல்லாம் புகழ் ஓங்கச் செய்த மாமேதைகள் பலர். தமிழ் மொழி வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டு ஒரு பொற்காலம் என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்த நூற்றாண்டில் தான் வடலூர் ராமலிங்க அடிகள், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை, மாயூரம் வேதநாயகம் பிள்ளை, மகாகவி பாரதியார், மறைமலை அடிகள், பரிதிமாற் கலைஞர் முதலிய தன்னிரகற்ற தமிழ் மேதைகள் தோன்றித் தமிழ் மண்ணிற்கும் தமிழ் மொழிக்கும் தகைமை சேர்த்திட தன்னிகரற்றத் தொண்டாற்றினர்.

இந்தப் பொற்காலத்தில் தான், **''தமிழ்த் தாத்தா''** என்று தமிழ் கூறு நல்லுலகம் பேரன்போடும், பெருமதிப்போடும் அழைக்கப்படும் உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள், 19.2.1855ல் வேங்கடசுப்பு - சரஸ்வதி தம்பதியருக்குத் திருமகனாக அவதரித்தார்.

அந்த ஆண்டுக்கு ஆனந்த வருடம் என்று பெயர். அந்த ஆண்டு, தமிழுக்கு ஆனந்தம் தரும் இந்தச் சான்றாளரைத் தந்துதவித் தன் பெயருக்குப் புதுப்பொருள் பெற்றது. அவர் பிறந்த அன்றே தமிழுக்கும் பெரும்புகழ் பிறந்தது என்று சொல்லலாம்.



தமிழ்த்தாத்தா உ.வே.சா., முதுமையில்

இளம் பருவத்தில், தம் பாட்டனாரிடம் அரிச்சுவடி படித்தார். அந்தக் காலத்தில், ஆங்கிலம் தெரிந்தவர்கள் மிகக் குறைவு. அதனால், இவருக்கு ஆங்கிலத்தில் நாட்டம் செல்லவில்லை. இவருடைய தந்தையார் அரியலூரில் இருந்தபோது, அங்கிருந்த சடகோபஐயங்காரிடம் தமிழ் பயின்றார். அவர் பாடம் சொல்லித் தந்த பாங்கு இவருக்குத் தமிழ்மொழிபால் ஈர்ப்பை ஏற்படுத்தியது.

பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பை உரிய காலத்தில் முடித்த உ.வே.சா., காலமெல்லாம் தமது வாழ்வைத் தமிழ் மொழிக்கு அர்ப்பணிக்க முடிவு செய்து, பல இடங்களிலிருந்து ஓலைச்சுவடிகளைத் தேடிப் பெயர்த்துப் புதுப்பித்து நூல்கள் வெளியிடுவதையே தமது வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய சங்க நூல்களையும், வேறு பழைய காவியங்களையும் கண்டெடுத்து ஆராய்ந்து அருமையான முறையில் பதிப்பித்தார்.

திருநெல்வேலி மாவட்டம், செவந்திபுரத்தில் வேணுவனலிங்கத் தம்பிரான் கட்டிய ''சுப்பிரமணிய தேசிக விலாசத்''தின் புதுமனைப் புகுவிழாவிற்கு வந்திருந்த புலவர்கள் எல்லோரும் அதைச் சிறப்பித்துப் பாடினார்கள். அந்தப் பாடல்களையெல்லாம் திரு. உ.வே.சா. அவர்கள் தொகுத்து வெளியிட்டார். பிற்காலத்தில் எத்தனையோ அருமையான சங்க நூல்களை எல்லாம் பதிப்பித்த அய்யர் அவர்கள் முதன் முதலாக பதிப்பித்த நூல் இதுவே ஆகும்.

1887 ஆம் ஆண்டு சீவக சிந்தாமணி என்ற ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான பேரிலக்கியத்தைப் பதிப்பித்தார். இந்த நூல், 1675 பக்கங்களைக் கொண்டதாகும். மூலத்தையும் நச்சினார்க்கினியர் உரையையும் தமது 33 வயதில் ஒரு சாதாரண மூன்றரை ரூபாய் வாடகை வீட்டில் இருந்து கொண்டும், கும்பகோணம் அரசுக் கல்லூரியில் 50 ரூபாய் சம்பளம் பெற்றுக் கொண்டும் இத்தகைய மாபெரும் சரித்திர சாதனையைப் படைத்துள்ளார்.

சைவ மரபில் வந்த ஒருவர் மிகக் கடினமான ஒரு சைன காப்பியத்தை வெளியீடுவது என்பது ஒரு மிகப் பெரிய சாதனையாகும். சிந்தாமணியிலுள்ள சைன சம்பிரதாயங்களைத் தெரிந்து கொள்ள கும்பகோணத்தில் இருந்த சைனர்களிடம் ஐயங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். சைன சமயம் சம்பந்தப்பட்ட எல்லாச் செய்திகளையும் ஐயம் திரிபறத் தெரிந்து கொண்ட பின்னரே சீவகசிந்தாமணியைப் பதிப்பிக்கத் தலைப்பட்டார்.

சீவக சிந்தாமணி வெளியான பிறகு தமிழ்நாட்டில் ஒரு புது மலர்ச்சி உண்டாயிற்று. அவர் வாழ்ந்த காலத்தில் நடைமுறையில் இருந்த கரடுமுரடான தமிழை மாற்றி எளிய நடையில் ஆங்கிலக் கலப்பு இல்லாமல் பாமர மக்கள்

தமிழ்த்தாத்தா உ.வே.சா. இல்லம் நினைவிடம் ஆகிறது

உத்தமதானபுரம் கிராமத்தில் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யர் பிறந்த வீட்டை ரூ,23 லட்சம் மதிப்பில் நினைவு இல்லமாக்க நம் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் ஆணை வழங்கி உள்ளார்கள்.

அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் எழுதி மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றார்.

சீவக சிந்தாமணியை அடுத்து ஏழு வள்ளல்களைப் பற்றியும் புகழ்பெற்ற சோழ மன்னனான கரிகால் பெருவளத்தானைப் பற்றியும் பறைசாற்றும் ''பத்துப்பாட்டு'' என்னும் நூலை 1889ம் ஆண்டு ஜூன் திங்களில் அச்சிட்டுப் பதிப்பித்தார்.

அதே போன்று அரசர் நீதி தவறினால் அறக் கடவுள் தண்டிக்கும், ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும், கற்புடைய பெண்களைக் கற்றோர் போற்றுவர் என்ற பெருமைகளுக்கு எல்லாம் சொந்தமான சிலப்பதிகாரத்தைச் சேகரித்து எடுத்து செந்தமிழில் பதிப்பித்து 1889ல் வெளியிட்டார்.

சிலப்பதிகாரத்தை வெளியிட்ட உடன், புறநானூறு என்ற சங்க நூலைப் பதிப்பிக்க வேண்டுமென்ற அவா அவருக்கு உண்டாயிற்று. புறநானூற்றுக்கு ஒரு பழைய உரை இருந்தது. அதில் முதல் 260 பாடல்களுக்கு மட்டுமே உரை இருந்தது. இவர் முழுமைப்படுத்தி வெளியிட்ட புறநானூற்றுப் பதிப்பு 1894-ஆம் ஆண்டில் நிறைவேறியது. இதனால், பல அருமையான வரலாற்றுச் செய்திகள், பழங்கால மன்னர்கள், வள்ளல்கள் ஆகியோரைப் பற்றிய செய்திகள் தெரிய வந்தன.

பிற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று ஆராய்ச்சிகளுக்கு எல்லாம், கருவியாக இருந்தது புறநானூறு என்னும் சங்க நூலே. புறநானூற்றுக்குப் பிறகு மணிமேகலையை ஆராயப் புகுந்தார். மணிமேகலை பௌத்த சமய நூலாகையால், அதைப் படித்தபோது பல செய்திகள் அவருக்குப் புரியவில்லை. பௌத்த நூல்கள் எல்லாம் ஆங்கிலத்தில் இருந்தன. அவற்றையெல்லாம் தருவித்து ரங்காச்சாரியார் என்ற பேராசிரியரிடம் கொடுத்தார். அவர் அவற்றைப் படித்து பௌத்த சமயக் கருத்துக்களைக் கூற அவற்றைப் புரிந்து கொண்டு மணிமேகலையைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டார். 1898ம் ஆண்டு ஜூலை திங்களில் மணிமேகலை பதிப்புப் பணி நிறைவேறியது.

இதனையடுத்து அய்யர் அவர்கள் ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, பெருங்கதை ஆகிய நூல்களில் தம் கவனத்தைச் செலுத்தினார். குறவஞ்சி, பள்ளு, உலா முதலான பல பிரபந்த நூல்களையும் பதிப்பித்துத் தமிழுக்கு தொண்டு செய்தார். இப்படி காலமெல்லாம் பல பணிகளுக்கிடையே பல்வேறு இடங்களில் சிதறிக் கிடந்த ஓலைச் சுவடிகளையெல்லாம், வெய்யில், மழை, பனிக் காலம் எனப்பாராது, கரடு முரடான பாதைகளில் நடையாக நடந்தும், மாட்டு வண்டியில் பயணம் செய்தும் தமிழ் வாழக்

தமிழ்த்தாத்தா உ.வே.சா., பயன்படுத்திய எழுத்தாணி, தொட்டெழுதிய பேனா



காப்பியங்களையும் நூல்களையும் ஓலைச் சுவடியிலிருந்த இலக்கியத் தமிழை எளிய நடையில் அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் பதிப்பித்த அவரின் சீரிய தொண்டு மிகவும் போற்றுதலுக்குரியதாகும்.

மணிமேகலை, புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களைப் பதிப்பிக்க அய்யர் அவர்களுக்கு உதவியவர் இராமநாதபுரம் பொ. பாண்டித்துரைத் தேவர் ஆவார். அய்யர் அவர்களின் பதிப்புப்பணியின் சிறப்புக்களையெல்லாம் திரு பாண்டித்துரைத் தேவர் வாயிலாக அறிய வந்த இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி, தன்னுடைய ஜமீனிலுள்ள ஒரு கிராமத்தையே அய்யர் அவர்களுக்கு வழங்க முன்வந்தார். ஆனால், அய்யர் அவர்களோ, மிகவும் பணிவாக அதனை ஏற்க மறுத்துவிட்டார்.

மாமனிதர் உ.வே.சா. அவர்கள் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தால் எதையும் சாதிக்கலாம் என்ற மிகப்பெரிய ஒரு செய்தியை நமது சமுதாயத்திற்கு விட்டுச்சென்றுள்ளார்.

1855ல் பிறந்த உ.வே.சா. என்னும் தமிழ்ச்சுடர் 18.4.1942ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். இவ்வளவு நீண்ட நெடுங்காலம் வாழ்ந்த காரணம் பற்றி ஒரு முறை' அவரிடம் கேட்ட போது என் ஆயுள் முழுவதும் தமிழ் என்ற ஒரே மருந்தை உண்டு உயிர்ப்பும் உணர்வும் உயிருமாய் அதையே பருகி, அதைத் துணை கொண்டுதான் இவ்வளவு காலம் வாழ்ந்தேன் என்றார்.

அப்பேர்ப்பட்ட மாமேதை பிறந்த 150வது ஆண்டு இந்த ஆண்டு.

அவர் வாழ்ந்த ஒவ்வொரு நாளும் தமிழுக்காகவே பாடுபட்டார். பழைய அணிகளைச் செப்பம் செய்து தமிழ் அன்னைக்கு அணிவித்ததோடு, புதிய உரைநடையாலும் அவளை எழில் கொழிக்கச்செய்தார்.

தமிழின் பழைய சங்க இலக்கியங்கள் எல்லாம் இன்றைக்கு மாணவர்களுக்கு எளிதில் கிடைக்கின்றன என்றால் அதற்கெல்லாம் மூல காரணம் இந்தத் தமிழ்ப் பெருமகனார் செய்த தொண்டுதான். அவர் வாழ்ந்த இல்லமான உத்தமதானபுரத்தில் உள்ள சரஸ்வதி இல்லம் என்ற அந்தத் தமிழ்க் கோயிலை அரசு நாட்டுடைமையாக்கி, அதனைப் புதுப்பித்து அவருக்கு பெருமை சேர்த்திருப்பது, வள்ளுவனும், சைவசமயக் குரவர்களும், ஆழ்வார் பெருமக்களும், கம்ப நாடனும், இளங்கோவடிகளும். பாரதியாரும், பாரதிதாசனும், கண்ணதாசனும் இதர தமிழறிஞர்களும் தமிழ்த்தாயை அழகுப்படுத்திப் பார்ப்பது போல் என்று எண்ணத் தோன்றுகிறது. இப்பெருமகனார் பெரும் பணியை ஒவ்வொரு தமிழ் மகனும் நினைவு கொள்ள வேண்டும். வருங்காலத் தமிழ்ச் சமூகத்திற்கு இவரின் வாழ்க்கை ஒரு பாடமாக இருக்க வேண்டும்.

வாழ்க தமிழ்த்தாத்தா
உ.வே.சா.!

வளர்க அவர் புகழ்!



மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை



தமிழ்த்தாத்தா
உ.வே.சா.,
அவர்களின்
தலைப்பாகை,
அங்கவஸ்திரம்,
பூஜைப்பெட்டி,
ஏடு, எழுத்தாணி.

திருமந்திர உபதேசம்

"திருமந்திரச்செல்வர்" டி.வி. வெங்கட்ராமன், இ,ஆ,ப. (ஒய்வு

சிவப்பரம்பொருள் உயிர்களின் உய்திக்காக, உடல், கருவிகள், உலகம், அனுபவங்கள் போன்றவற்றைத் தருகிறான் என்றால், அவன் நேராக வந்து இந்த பணியைச் செய்வதில்லை, படைப்புத் தொழில். திருவருளின் துணையோடு, இறைவன் அருள் பெற்ற அதிகாரிகளால் நடைபெறுகிறது. படைப்புக்கான மூலப் பொருள்கள் வேண்டும்.

மண்பாண்டம் செய்ய குயவன் இருந்தால் மட்டும் போதாது. மண் வேண்டும். மண்ணைப் பதப்படுத்த நீர் வேண்டும், திரிகை என்ற கருவி வேண்டும். திரிகையைச் சுற்றக் கோல் வேண்டும்.

அதேபோல், சிவப்பரம்பொருள், நிமித்த காரணனாக இருந்து கொண்டு தனது ஆற்றலாகிய ஆதிசக்தியாலே எல்லாவற்றையும் செய்து முடிக்க விழைவான் ! அந்த நிலையில் ஆதிசக்தி உலகத்தைப் படைப்பதற்கான இச்சையும், அதற்கேற்ப ஞானமும், ஆற்றலும் கொண்டவளாக நிற்பாள்.

இறைவன் ஆதிசக்தியின் வழி, நாதம் என்ற ஓசைநிலையைத் தோற்றுவிப்பான். சிவன் நாதனாய் நிற்பான். ஆதிசக்தியும் நாதத்திலிருந்து விந்து என்ற தத்துவத்தை உருவாக்குவாள், அதிலிருந்து சிவமும், சிவத்திலிருந்து சக்தியும் தோன்றுகின்றன.

இவையெல்லாம் அருவநிலைகள், சுத்த மாயைநிலை என்றும் பெயர்பெறும்.

குடம் செய்ய மண் முதல் காரணம். குடம் காரியம். படைக்கப்படும் உலகம் காரியம், அதற்கு முதல் காரணம் மாயை.

மாயை, சுத்தமாயை, அசுத்தமாயை எனக்கூறப்படும். உயிர் ஆணவமலத்தால் கட்டுப்பட்டுள்ளது, உயிர் உடல் வழியாக தனது வினைப்பயன்களை அனுபவிக்கின்றது. உயிரோடும் உடலோடும் இணைந்து செயல்படும் மாயையே அசுத்த மாயை எனப்படும். இவ்வாறு கலவாமல் இருக்கும் தூயப்பகுதி சுத்தமாயை எனப்படும்.

சுத்த மாயைக்கு விந்து, குடிலை, குண்டலினி என்ற பெயர்களும் உண்டு. இதுவே மகாமாயை எனப்படும். அசுத்தமாயைக்கு மோகினி என்ற பெயரும் உண்டு. அசுத்த மாயாகருவிகளான கலை, அராகம், வித்தை, மாயை போன்றவை உயிரை, உடலுடன் இணைத்து இயங்கவைக்கும் போது உயிர் தன்னை உடல் என்றே கருதிக் கொள்வதால் மோகினி அல்லது மயக்கும் சக்தி என்று அழைக்கப்படுகிறது.

இறைவனுக்கு, அருவம், அருவுருவம், உருவம் என்ற மூவகைத் திருமேனிகள் உண்டு. இறைவன் சத், சித், ஆனந்தப் பொருளாக நிற்பது அவனுடைய சொரூபநிலை, இயற்கைநிலை; உலகத்தைக் கருதியும், உயிர்களின் உய்தியைக் கருதியும் இறைவன் நிற்கும் நிலை தடத்த நிலை எனப்படும். அளவற்ற பெருமையுடைய இறைவன், உயிர்களின் நலன் கருதி, படைப்பு முதலான தொழில்களை மேற்கொள்ளும் போது அவன் தனது திரோதான சத்தி, அருட்சத்தி ஆகியவற்றின் மூலம் செயல்படுகிறான்.

இறைவனும், அவனது சக்தியும் ஒன்றே. ஆயினும் அவன் உயிருக்கு உயிராக இருந்து செயல்பட்டு, உயிர்களைப் படிநிலையில் வளர்ச்சிபெறக் கருதி உயிர்களுக்குத் துணைசெய்யும் போது அவனது சக்திகள் எண்ணற்ற நிலையும், தன்னையும் பெறுகின்றன.

சத்தி, மணியின் ஒளிபோல, சிவத்தோடு ஒன்றியே நிற்பாள். சிவமும் சக்தியை விட்டுத் தனித்து நிற்பதில்லை. உலக நோக்கத்திற்காக, தனது சக்தியைத் தனிப்படச் செயல்படுவது போல் நிறுத்திவைக்கும் இறைவனுடைய அளப்பரிய பெருமையை விளக்குவது என்பது இயலாத காரியம் என்கிறார் திருமூலர் பெருமான்.

"இல்லது சக்தி இடர்தனில் உண்டாகிக்
கல்லொளி போலக் கலந்துள்ளிருந்திடும்

வல்லது ஆக வழி செய்த அப்பொருள்
சொல்லது சொல்லிடின் தூராதி தூரமே''

(திருமந்திரம் 383)

சிவம் நாதமாக நிற்க சத்தி விந்து எனத் தோன்றி அதிலிருந்து சதாசிவம், மகேசுரர், உருத்திரர், மால், அயன் என்று தோன்றுவர்.

சிவம், சத்தி, நாதம் விந்து என்பவை அருவநிலைகள். சதாசிவம் அருவுருவமாகும், சதாசிவமூர்த்தம் இலிங்கவடிவம், மகேசுரன், உருத்திரன், மால் அயன் என்பவர் உருவநிலைகள். இவற்றையெல்லாம் ''நவந்தரும் பேதங்கள்'' என்று சைவ தத்துவம் கூறும். இவை சுத்தமாயைப் படைப்புகள்.

உலகம் தோன்றுவது பிரகிருதிமாயையில். பிரகிருதியிலிருந்து, தன்மாத்திரைகளும் அவற்றிலிருந்து ஐம்பூதங்களாகிய ஆகாயம், காற்று, தீ, நீர், நிலம் ஆகியவை தோன்றும். அதேபோல் குணங்கள், புத்தி, அகங்காரம், மனம், ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள் ஆகியவையும் தோன்றும்

அசுத்த மாயா காரியங்களாக இருப்பவை, மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் என்பனவாகும்.

இவற்றையெல்லாம் தத்துவங்கள் என்பார்கள். தத்துவங்கள் மொத்தம் முப்பத்து ஆறு. அவற்றில் பிரகிருதி மாயையிலிருந்து தோன்றிய ஆன்மத்துவங்கள் இருபத்து நான்கு. அசுத்தமாயைத் தத்துவங்கள் ஏழு, சுத்தமாயைத் தத்துவங்கள் ஐந்து, இவையெல்லாம் படைப்பின் பல்வேறு கூறுகள். தனு, கரண, புவன போகம் என்ற தொகுப்பில் அடங்கும்.

இவ்வாறு சிவனும், சக்தியும் ஒரு விளையாடலை மேற்கொண்டுள்ளார்கள். அது அவர்களுக்கு வெறும் பொழுது போக்காகாது, இந்த விளையாட்டு (படைத்தல், அழித்தல், காத்தல் மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்கள்) எண்ணற்ற உயிர்களுக்கு எண்ணற்ற பயன்களைத் தரும். உயிர்களுடைய பக்குவத்திற்கேற்ப, அந்தப் பயன்கள் தன்மையில் வேறுபடும், அதுவும் இறைவனுடைய திருவுள்ளமே. அதன் நோக்கம், உயிர்கள் பிறவிதோறும் செய்த வினைகளின் பயன்களாக இன்பத் துன்பங்களை அனுபவித்து விட்டு, அவற்றிலே சலிப்படைந்து உலகப் பற்றுகளைக் குறைத்துக் கொண்டு, திருவருளை நோக்கி நின்று, திருவருளின் ஆட்சியின் கீழ்வந்து மலபரிபாகம் பெற்று இறைவனுடைய திருவடி நிழலில் என்றும் இருக்க வேண்டும் என்பதாகும்.

''ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்
இருவர் விளையாட்டும் எல்லாம் விளைக்கும்
பருவங்கள் தோறும் பயன் பலவான
திருவொன்றிற் செய்கை செக முற்றுமாமே''

(திருமந்திரம் 396)

உயிர் உடலுடன் சேர்வதே படைப்பாகும். இறைவன் உயிரைக் கருப்பையுள் தோற்றுவிக்கும் போதே, தூய உடலுடன் சூக்கும உடல் தன்மாத்திரைகள், அந்தக் கரணங்கள், குணங்கள், வித்தியாதத்துவங்கள் ஆகியவற்றைச் சேர்ப்பான். இது இறைவனின் சூக்கும ஐந்தொழில் எனப் பெயர் பெறும். **''நள்ளிரவில் நட்டம் ஆடுதல்''** என்றும் சொல்வர்.

இதைத் தெரிந்து கொள்ளாமல் கணவனும், மனைவியும் இன்புற்ற காலத்து உயிர் தோன்றியது என்று கருதிக் கொள்வார்கள். கருவை இட்டவனாகிய தந்தை அறிந்தானில்லை, பெற்றவளாகிய தாய்க்கும் இது பற்றி தெரியாது. கருவும், உயிரும் ஒரு சேர வளரச் செயல்படுகின்ற பிரம்மனாகிய தட்டானுக்குத் தெரியும். ஆனால் அவன் இதன் உண்மையை ஒருவருக்கும் சொல்லுவதில்லை, எல்லாம் வல்ல பரம்பொருள் எங்கும் நிறைந்து எதையும் அறிந்திருந்தும், ஒருவருக்கும் இது பற்றி இந்த நிலையில் சொல்லுவதில்லை, அவனுடைய திரோதன சக்தி இத்தகைய மறைப்பினைச் செய்கிறது. அதுவும் அவன் நியமித்தபணியே, இந்த மாயையின் வஞ்சனைக்கு ஆட்பட்டு அறியாமையில் நிற்கும் உயிர்கள் மேன்மேலும் துன்பத்தையல்லவா வளர்த்துக் கொள்கின்றன.

**''இட்டான் அறிந்திலன், ஏற்றவள் கண்டிலள்
தட்டான் இருந்தும் ஒருவர்க்கும் உரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்குளன்,
கெட்டேன் இம்மாயையின் கீழ்மை எவ்வாறே!''**

(திருமந்திரம் 486)

திருமந்திரத்தில் முதல் தந்திரத்தில் உபதேசம் என்று வருகிற முதல் பகுதியின் முதல் மந்திரத்தில் **''விண்ணின்றிழிந்து''** என்று வருகின்ற சொற்றொடருக்கு விளக்கமாக இதை எடுத்துக் கொள்ளலாம்.

(தொடரும்)

நலம் தரும் தைலப் பிரசாதம்

பொதுவாக பெருமாள் கோயில்களில் துளசியைப் பிரசாதமாகத் தருவார்கள்.

ஆனால் திண்டுக்கல் மாவட்டம் தாடிக் - கொம்பிலுள்ள சுந்தரராஜப் பெருமாள் கோயிலில் தன்வந்திரி சன்னதியில் லேகியம் மற்றும் தைலத்தைப் பிரசாதமாகத் தருகிறார்கள்.

நோய் வாய்ப்பட்டவர்கள் இங்குவந்து இப்பிரசாதத்தைப் பெற்று உண்டு நலம் பெறுகிறார்கள்.

சைவ சித்தாந்தம் உணர்த்தும் உண்மை

'சிவஞானசித்தர்' டி.என்.எஸ். முருகதாஸ்
தீர்த்த பூபதி, சிங்கம்பட்டி.

''கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை''

என்றார் திருவள்ளுவர்.

இறைவன்

1. முடிவில்லாத ஆற்றலுடையவன்.
2. முற்றும் உணர்ந்தவன் (திரிகாலம் உணர்ந்தவன்)
3. முற்றறிவுடையவன்.
4. தன் வயத்தன் (பிறர் துணையின்றித் தானே இயங்குபவன்)
5. தூய உடம்பினன் (அழியாத அருள் திருமேனி உடையவன்)
6. பேரருள் உடையவன்.
7. வரம்பில்லாத இன்பம் உடையவன்.
8. இயல்பாகவே பாசங்களில் நீங்கியவன்

- என்று நம் முன்னோர்கள் கண்டுரைத்தார்கள்.

மேலே சொன்ன இறைவனது எண்குணங்களில் ஒன்றாகிலும் நமக்கு இருக்கிறதாவென்று சீர்தூக்கிப் பார்த்தால், பரமான்மாவுக்கும் ஜீவான்மாவுக்கும் உள்ள தராதரம் உள்ளங்கை நெல்லிக் கனியே போல் நன்றாக விளங்கும். ஜீவான்மாக்களுக்கு ஆணவத்தால் ஏற்பட்டிருக்கும் குணங்களும் எட்டு என்றே நிச்சயித்து இருக்கிறார்கள். அவையாவன :-

1. தனக்குத் தெரிந்த ஒன்றையே சாதித்தல், தனக்குத் தெரியாத உண்மைகள் உலகத்தில் நிரம்ப உண்டு என்பதை ஒப்புக்கொள்ள மறுத்தல். (உலகத்தார் உண்டென்பதை இல்லென்பது)
2. தான் சொல்லுவதை பிறர் கேட்க வேண்டுமென்ற விருப்பமும், பிறர் சொல்லுவதைத் தான் கேட்டுக் கொண்டிருத்தலில் விருப்பக் குறைவும் உள்ள தன்மை.
3. எடுத்ததற்கெல்லாம் கோபப்படுதல்.
4. தன்னிடம் இல்லாத பொருட்களின் மேல் ஆசைப்படுதல்.
5. கொலை செய்தலும், கொன்றதைத் தின்றலும்.
6. எப்பொழுதும் கவலைப்பட்டு வருத்தமுறுதல்.
7. நான் என்ற அகங்காரமும் என்னுடையது என்ற முனைப்பும் தலைக்கேறியிருத்தல்.
8. தன் குற்றத்தை உணர்ந்து கொள்ள முடியாமல், பிறர் குற்றத்தைச் சொல்லி நகையாடுவதில், பெரியதோர் மகிழ்ச்சியும் திருப்தியும் கொள்ளல். இந்த எட்டுக் குணங்களில் யார் யாருக்கு எவ்வளவு இருக்கிறது என்பதை அவரவரே அறிவார், ஆண்டவனும் அறிவார்.

மாயா மலத்திற்கு ஏழு குணங்கள் உண்டென்று கண்டிருக்கின்றனர். அவையாவன:

1. எவ்வளவு படித்திருந்தாலும் உண்மையை அறிய முடியாமை.
2. களவு செய்தல் கெடுதல் என்று தெரிந்தும் களவு செய்யாதிருக்க முடியாமை.
3. கண்டதைச் சொல்லும் நேர்மை வராமை.
4. படித்தப்படி நடக்க வேண்டும் என்று நினைத்தாலும் நடக்க முடியாமை.
5. பெரும் பணம் படைத்தவனாக இருந்தாலும் பிறர்க்குக் கொடுத்து உதவும் மனப்பான்மை வராமை.
6. இறப்பு என்பது திண்ணமாக உண்டு என்பதைக் கண்டும் கேட்டும், உணர்ந்தும் அதைக் குறித்து மனம் தெளிவுபெறாமை.
7. பிறருடைய ஆக்கங்களைக் கண்டபோதும், கேட்டபோதும் மனம் பொறாமை.

இவற்றில் யார் யாருக்கு எவ்வளவு மயக்கம் இருக்கிறது என்பதைச் சிந்தித்துத் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வளவு இழிவான தன்மையிலுள்ள ஜீவான்மாக்களாகிய நம்மைப் பரமான்மா என்று கருதிக் கொள்ளுதலும், பேசிக் கொள்ளுதலும் எவ்வளவு பேதமை என்பதும், எவ்வளவு பாவமும் பழியும் ஆகும் என்பதைச் சிந்தித்துத் தெரிந்து கொள்ள வேண்டுகின்றேன்.

தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - சிவவாக்கியர்



முனைவர் இரா. செல்வக்கணபதி

தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரையில் குறிக்கத் தக்க பெருஞ்சிறப்புடைய ஒருவர் சிவவாக்கியர். அன்னை வயிற்றிலிருந்து உலகில் வந்துதித்த உடனேயே 'சிவ' என்ற நாமத்தை உச்சரித்தவர் இவர்.

உலகம், அந்த மகாவாக்கியத்திற்குச் சொந்தக்காரர் என்ற பொருளில் இவரைச் சிவவாக்கியர் என்று அழைக்கலாயிற்று. இவர், அவ்வப்போது அருளிய ஞானக் கருவூலங்கள் திரட்டப்பட்டுச் **'சிவவாக்கியம்'** என்று பெயர் சூட்டப்பெற்றன.

இன்று சிவவாக்கியத் தொகுப்பில் 524 பாடல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. எல்லாம் தேன்பிலிற்றும் தத்துவக் கவிதைகள். அழகுணர்ச்சி மிக்க சிவனருட் செல்வங்கள். பிரமிப்பூட்டும்பூடகப் புதிர்கள்.

சிவவாக்கியர் வேதியர் குலத்தவராகத் தெரிகிறார். எங்கே பிறந்தார்? பெற்றோர் யார்? காலம் யாதென்பன ஒன்றும் தெரியவில்லை. ஆயினும் தமிழ்நாட்டுக்காரர். தமிழர். தமிழ்ச்சித்தர். சிவநெறி நின்றவர் என்பதில் குழப்பம் ஏதுமில்லை.

ஒருமுறை இவர் தமிழ்நாட்டிலிருந்து காசியாத்திரை மேற்கொண்டார். பிரம்மச்சாரி. ஆயினும் இல்லறநாட்டம் இருந்தது. வழியில் சித்தர் ஒருவரைச் சந்தித்தார். அவரோ செருப்புத் தைக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தவர். வாய் பேசாத அச்சித்தர்பெருமகன் சிவவாக்கியருக்குச் சில காசுகள் வழங்கி, ஒரு உண்ண உதவாத பேய்ச் சுரைக்காய் ஒன்றையும் வழங்கினார். இவை எதற்கு என்று சிவவாக்கியர் வினவினார். ''போ! போகும் வழியில் மணலைச் சோறாக்ச் சமைத்து, இப்பேய்ச் சுரைக்காயைக் கைப்பின்றிச் சமைத்துப் பரிமாறும் பெண் ஒருத்தி எதிர்ப்படுவாள். அவள் நினக்கு மனைவியாவாள்'' என்றார் ஞானகுரு.

வழியில் இவர் கண்ட பெண்கள் எவரும் குருநாதர் குறித்த ஆற்றல்களைப் பெற்றிருக்கவில்லை. கடைசியாக ஒரு குறக்குலப் பெண் எதிர்பட்டாள். சிவவாக்கியர் வாட்டம் கண்டு அவள் வினாத் தொடுத்தாள். சித்தர் தம் கவலை கூற, அக்குறவஞ்சி மணற்சோறாக்கி, கைப்பின்றிப் பேய்ச்சுரையைக் கறியாக்கி அமுது படைத்தாள். குருப்பிரசாதம் என உணர்ந்து அக்குறமகளையே சிவவாக்கியர் மணந்து கொண்டு சிலகாலம் இல்லறத்தில் இருந்து, இறுதியில் துறவு பூண்டார்.

இல்லறத்தில் வாழ்ந்திருந்து, மிக்க காமவேட்கை தீர்ந்தபின் துறப்பதே துறவு என்பது தொல்காப்பியம். இளமையிலேயே துறவு மேற்கொள்வதை வள்ளுவரும் ஏற்கவில்லை. இல்லறமே ஏற்காத ஒருவர் எதனைத் துறந்தார் என்று இவரைத் துறவி என்கிறீர்கள் என்று நிகழ்காலக் கவிஞர் ஒருவர் வினா எழுப்புகிறார்.

சித்தர்களில் ஒருவராகிய கொங்கணரோடு இவருக்கு நட்பு இருந்தது. இவர் உலகப்பற்று நீங்கக் கொங்கணரே துணை நின்றார் என்று தெரிகிறது.

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவராகிய திருமழிசைஆழ்வார் இவரே என்பர் சிலர். இதனை உறுதிப்படுத்த இயலவில்லை. எல்லாம் செவிவழிச் செய்திகள்தாம்.

வரலாற்றில் பொய்மையும் கற்பனையும் இருக்கலாம். ஆனால், சிவவாக்கியர் கவிதைகளில் சத்தியமும், ஞானமும் பூத்துக் குலுங்குகின்றன.

'சித்தம் போக்கு சிவம் போக்கு' என்பது பழமொழி. சித்தர் பலரும் சிவநெறி நின்றவர்கள் தாம். அருளாளர்கள் சடங்காசாரங்களை ஏற்றுப் போற்றினர். ஆயினும் சித்தர்கள் சமய சீர்திருத்தவாதிகளாகச் சடங்குகள் இல்லாத சமயம் ஒன்றை முன்வைத்தனர்.

சமயச் சடங்குகளுக்கு எதிரான மிகப் பெரிய மௌனப் போராட்டம் சிவவாக்கியத்தில் ஓங்கி ஒலிக்கிறது. செய்தொழில் பற்றி வந்த சாதியக் குறியீடுகள் தகர்க்கப்பட வேண்டும் என்ற தீவிர எண்ணம் கொண்டவர் சிவவாக்கியர். சந்தம் கொழிக்கும் அற்புதமான கவிதைகள். புரட்சிகரமான எண்ணக்குவியல்கள்.

சிவனே பெருந்தெய்வம். ஒரே தெய்வமும் கூட. நமச்சிவாயம் என்பதே மகாமந்திரம்.

''அரியதோர் நமச்சிவாயம் ஆதியந்தம் ஆனதும்
ஆறிரண்டு நூறு தேவர் அன்றுரைத்த மந்திரம்''

என்கிறார் அவர். திருமூலரை உள்வாங்கிக் கொண்டு, புதிய கோணத்தில் வழிமொழிந்தவர் சிவவாக்கியர்.

''ஆனஅஞ் செழுத்துளே அண்டமும் அகண்டமும்
ஆனஅஞ் செழுத்துளே ஆதியான மூவரும்
ஆனஅஞ் செழுத்துளே அகாரமும் மகாரமும்
ஆனஅஞ் செழுத்துளே அடங்கலாவ துற்றதே''

இதில் திருமந்திரம் நிழலாடுவது தெரிகிறது.

உள்ளத்தின் உள்ளே ஒளிபூத்து நிற்கும் ஒளி வடிவானவன் சிவன். அவனை எங்கெங்கோ சென்று தேடித் திரியும் அறிவிலிகளை இவர் ஏளனம் செய்கிறார். அது குறித்த அழகிய சந்தக் கவிதை பின்வருமாறு:-

''ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்து போய்
வாடி வாடி வாடி வாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே''

தெள்ளத் தெளிந்தாருக்கு மட்டும்தான் சீவனே சிவலிங்கம் என்பது தெரிய வரும்.

சிவநாமத்துக்கு இணையாக ராமநாமச் சிறப்பும் இவர்கவிதைகளிலே காணப் படுகின்றன.

''அந்திமாலை உச்சிமூன்றும் ஆடுகின்ற தீர்த்தமும்
சந்தி தர்ப்பணங்களும் தபங்களும் செபங்களும்
சிந்தைமேவு ஞானமும் தினம் செபிக்கும் மந்திரம்
எந்தை ராம ராம ராம ராம என்னும் நாமமே''

ஒரு எல்லை கடந்துவிட்ட நிலையில் பேதா பேதங்கள் நொறுங்கிப்போகும் என்பது புலனாகிறது. இத்தகு கவிதைகளில் ஆழ்வார் நிழலாட்டம் காணப்படுவதை உணர இயல்கிறது.

சாதீயக் கட்டுடைப்பதிலே சிவவாக்கியர் தீவிரமான ஒரு போராட்டத்தை நிகழ்த்தி யிருக்கிறார். நாயன்மார்களும், ஆழ்வார்களும் மெல்ல உரைத்த சமத்துவத்தைச் சித்தர் உரக்க உரைத்து வியப்பூட்டுகிறார். உவமைகள், வினாக்களிலே கோபக்கனல் கொப்பளிக்கிறது.

''பறைச்சியாவ தேதடா? பணத்தியாவ தேதடா?
இறைச்சிதோல் எலும்பினும் இலக்கமிட் டிருக்குதோ?''

இவள் பறையர் குலப்பெண். இவர் பார்ப்பன மகள் என்று இறைச்சி தோல், எலும்பு எங்காவது முத்திரை குத்தப்பட்டுள்ளதா? என வினவுகிறார்.

''பறைச்சி போகம் வேறதோ பணத்திபோகம் வேறதோ?''

நன்கு யோசித்தால் இந்தப் பேதங்கள் யாவும் மாயை என்பது உன் உள்ளத்திற்கே தெரிய வருமே.

''பறைச்சியும் பணத்தியும் பகுத்துப்பரும் உம்முளே!''

சாதியக் கட்டுடைக்கும் சாட்டை அடிகளாக இவர் கவிதைகள் ஆத்திர வடிவம் பூண்டு தகிக்கின்றன.

உள்ளத்தில் தெய்வமிருப்பதால் உருவ வழிபாட்டை இவர் ஏற்கவில்லை. தலயாத்திரைகள் கூட வேண்டாமே என்கிறார். மதவாதத்தைக் கடுமையாகச் சாடுகிறார். 'வேத மந்திரம், சாதி ஆசாரம்' என்பனவற்றை ஏற்க மறுக்கிறார். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' உள்ளமே கோயில் என்று சாதிக்கிறார்.

''நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பசாத்தியே
சுற்றிவந்து முணமுணென்று சொல்லும் மந்திரம் ஏதடா?
நட்டகல்லும் பேசுமோ? நாதன் உள் இருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?''

உருவ வழிபாடு கடந்த உள்ள வழிபாட்டுக்கு அறை கூவல் விடுக்கிறார் சிவவாக்கியர். 'சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ' என்ற வினா ஆயிரம் அர்த்தங்கள் கொண்டது. விரிப்பின் பெருகும்.

நிறைவாக சிகரத்தை முன்னும் பின்னும் வைத்துச் செபிக்கும். 'சிவாயவசி' என்ற மந்திர ரகசியம் அறிந்து உய்யலாம்.

''சிவாயவசி என்னவும் செபிக்கஇச் சகமெலாம்
சிவாயவசி என்னவும் செபிப்பயாவும் சித்தியாம்
சிவாயவசி என்னவும் செபிக்கவானம் ஆளலாம்
சிவாயவசி என்பதே இருதலைத்தீ ஆகுமே''.

சித்தர்கள் வலியுறுத்தும் நடைப்பயிற்சி

''காலைக் கல்லும்
மாலைப் புல்லும்
ஆளை வெல்லும்''
என்பது சித்தர் வாக்கு.

காலையில் சூரியோதய நேரத்தில் ஏதாவது ஒரு மலைமீது ஏறி இறங்க வேண்டும்.

மாலையில் அருகம்புல் உள்ள தரைமீது நடக்க வேண்டும். இவ்வாறு தினமும் செய்து வந்தால் உடல் நலமாக இருக்கும் என்பது இச்சித்தர் வாக்கின் விளக்கம் ஆகும்.

திருநாவுக்கரசரை வழங்கிய திருவதிகைத் திருக்கோயில்

கி. ஸ்ரீதரன் எம்.ஏ.,
பதிவு அலுவலர்,
தொல்லியல் துறை, சென்னை - 600 008

சைவ சமயம் போற்றும் சிறப்பான தலங்களுள் திருவதிகைத் திருக்கோயில் மிகவும் முக்கியமானது. நடுநாட்டுத் தலங்கள் 22-ல் இது மிகவும் சிறப்பானது.

கடலூர் மாவட்டம், பண்ருட்டியிலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் இக்கோயில் அமைந்து உள்ளது. சிவபெருமான் நிகழ்த்திய வீரச்செயல்கள் புரிந்த தலங்களை வீரட்டானத் தலங்கள் என்று அழைப்பர். அட்ட வீரட்டத் தலங்களில் திரிபுரத்தை எரித்த - திரிபுர அசுரர்களை அழித்து அருள் வழங்கிய தலம் இதுவே!

சிவ வழிபாட்டில் சிறந்த திரிபுர அசுரர்களை இறைவன் அழிக்கவில்லை. இருவரை வாயிற் காப்போராகவும், ஒருவரைக் குடமுழா முழக்கவும் தமது அருகிலேயே இருக்க அருள் புரிந்த இறைவன் கருணையை ஒரு தேவாரப் பாடலால் அறியலாம்.

''மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில்
இருவர் நின்திருக்கோயிலின் வாய்த்தலை
காவலாள ரென்றேவிய பின்னை
யொருவ நீகரிகாடரங்காக
மானை நோக்கியோர் மாநடம்
கிழமணிமுழா முழக்கவருள் செய்த
தேவ தேவ நின் திருவடி யடைந்தேன்
செழும்பொழிற்திருப் புன்கூருளானே''

- சுந்தரர், தேவாரம்

ஞானசம்பந்தர் பெருமான் இத்தலத்திற்கு வந்து இறைவனை வழிபடுகிறார். திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுள் தாம் ஆடிய நடனக் காட்சியை அப்பொழுது காட்டியருளிய திருத்தலம்.

''பாதம் பலரேத்தப் பரமன்பரமேட்டி
பூதம் புடைசூழப் புலித் தோலுடையாகக்
கீதம் உமைபாடக் கெடிலவடபக்கம்
வேத முதல்வன் நின்றாடும் வீரட்டானத்தே''

- சம்பந்தர், தேவாரம்.

வன்தொண்டரான சுந்தரர் பெருமானுக்கு இறைவன் திருவடி சூட்டிய திருத்தலம் இதுவே.

சூலை நோயின் துன்பம் தாளாமல் திருப்பாதிரிப் புலியூரை விட்டு இங்கு வந்து, தமது தமக்கையார் திலகவதியாரை வணங்கித் திருநீறு பெற்று இறைவனை வழிப்பட்டு சூலைநோய் நாவுக்கரசர் அகல அருள்புரிந்தது திருவதிகை திருத்தலம். சைவ சமயத்திற்கு திருநாவுக்கரசர் பெருமானை வழங்கியது இத்திருத்தலம் என்ற பெருமை உடையது.

தமது சூலை நோய் - வயிற்று வலி தீர நாவுக்கரசர்பெருமான்

''கூற்றாயின வாறு விலக்ககிலீர் - - -
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறையம்மானே''

என வேண்டுகிறார்.

''சலம் பூவோடு தூபம் மறந்தறியேன்
தமிழோசைப் பாடல் மறந்தறியேன்
நலந் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே''

என்று இறைவனை வேண்டுகிறார். சூலை நோய் நீங்கப் பெற்று சைவ சமயத்திற்கு பெருந் தொண்டாற்றினார். இன்றும் தீரா வயிற்று வலியால் துன்பப்படுபவர்கள் ''கூற்றாயினவாறு'' எனத் தொடங்கும் பதிகத்தை ஓதி வயிற்றுவலி நீங்குவதை உணரலாம். அத்தகைய சக்திவாய்ந்த திருப்பதிகம்.

சைவ சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றான 'உண்மை விளக்கம்' நூலை அருளிய மனவாசகங்கடந்தாரின் அவதாரத் தலமும் திருவதிகை ஆகும். சைவ சமயத்திற்கு திருவதிகைத் திருத்தலம் பெருந்தொண்டாற்றியுள்ளது என்றால் மிகையில்லை!

அரையர் சேவை

நாலாயிரத் திவ்யபிரபந்தப் பாசுரங்களை இசைநயத்துடனும், லயம், நர்த்தனத்துடனும் பாகுபடுத்தி அளித்த மஹான் ஸ்ரீநாதமுனிகள்

பாம்பன் சுவாமிகள்

தா. சந்திரசேகரன், இ.ஆ.ப
சிறப்புச் செயலாளர்
தமிழ் வளர்ச்சி
பண்பாடு மற்றும் இந்து சமய
அறநிலைய ஆட்சித் துறை
சென்னை - 600 009

நம் பாம்பன் சுவாமிகள் ஒரு அஞ்சாநெஞ்சர். அவருடைய பாடல்கள் கடின நடையுள்ளவைகளாக இருந்தாலும், கந்தப் பெருமானின் பாடல்களைப் படிக்கும்போது நம் சிந்தையணு ஒவ்வொன்றும் சிலிர்க்கின்றன. **''தமிழால் பாம்பன் சுவாமிகளின் பாடல் உயர்வு பெற்றது போல், பாம்பன் சுவாமிகளின் பாடல்களால், தமிழ் மேன்மை பெற்றது'' என்றுகூட உறுதியாகச் சொல்லலாம்.**

இந்த உலகத்தில் துறவு என்பதன் உயர்வை எண்ணுவோர் பல பேர் கிடையாது. துறவு மேற்கொண்டவர் வெள்ளையாடையை நீக்கிக் காவி ஆடை அணிவதுதான் துறவு என்று தவறாக எண்ணிவிடுகிறார்கள். காவி உடுத்திக் கொண்டால் எவ்வளவு உறுதியாக இருக்க வேண்டுமென்று பலபேர் சிந்திப்பது இல்லை. சிலர் ஒருநாளில் திடீரென்று காவி உடுப்பதும், சில நாட்களில் மறுபடியும் வெள்ளையாடை அணிவதும் நாம் வாழ்க்கையில் சில நேரங்களில் காண்கிறோம். இதுபோல் துறவு பூணுவதற்குக் காரணங்களும் பல.

மனைவியோடு கொண்ட மனவருத்தத்தால், மகன் முதலிய உற்றார் மரணத்தால், உண்ண உணவும், உடுக்க உடையும் இல்லாததால், வாங்கிய கடனைத் தீர்க்க வழி தெரியாததால், கொலை முதலிய படுபாதகச் செயலைச் செய்து விட்டுத் தண்டனைக்கு அஞ்சித் தம்மை மறைத்துக் கொள்ளுதல் ஆகிய பல்வேறு நிலையால் சில பேர் துறவியாக உலவி வருவார்கள். இவர்களெல்லாம் பொய்த்துறவிகள், போலித்துறவிகள்.

ஆனால் நம் குருநாதர் பாம்பன் சுவாமிகள் அஞ்சாநெஞ்சர். ஒழுக்கச்சீலர். சிங்கத்தமிழர். சீரிய சிந்தனையாளர். செவ்வான் உருவில் விளங்கும் எம்மான் முருகனை எப்போதும் கனவிலும் நனவிலும் வணங்கி வாழ்ந்த மாபெரும் துறவி. பாம்பன் சுவாமிகளின் துறவு ஈடுஇணையற்றது.

இறைவனைப் பற்றியே நினைத்தும், உணர்ந்தும், பாடியும், தொழுதும், அழுதும், ஆடியும் வந்தவர் நம் சுவாமிகள். நம் சுவாமிகள் 1895 ஆம் ஆண்டு துறவு மேற்கொள்ள விழைந்தார். ஒருநாள் வடசமுத்திரத்தையடைந்து எவரிடமும் ஏதும் கூறாமல் ஒரு படகில் ஏறிச் சென்றார். இதைச் சின்னச்சாமிபிள்ளை என்பவர் கண்டார். சுவாமிகள் துறவு நெறி மேற்கொள்வதைப் புரிந்து கொண்டார். அவர் உடனே சுவாமிகளது அருமைப் புதல்வர் முருகையாப் பிள்ளையை அழைத்துக் கொண்டு சுவாமிகளிடம் விரைந்து வந்தார்.

சின்னச்சாமிப்பிள்ளை பாம்பன் சுவாமிகளிடம் ''தாங்கள் துறவறம் ஏற்பதால் மயங்கும் இந்த மகனுக்கு தாங்கள் சொல்லும் சேதி என்ன?'' என்று கேட்டார். அப்பொழுது சுவாமிகள் ''முருகவேள் சொன்னதைச் செய்யும் நீமயங்காதே! மிக்கச் சிறப்புடைய இப்பிள்ளையவர்களும் உன்னைக் கவனித்துக் கொள்வார்கள்'' என்று கூறினார். படகும் நகர்ந்தது. புதல்வர் முருகையாப் பிள்ளையும் தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்று தம் தந்தை பாம்பன் சுவாமிகள் சென்ற திசைநோக்கி படகு தன் கண்களுக்குத் தெரியும் வரைநின்றிருந்து வணங்கி விட்டுச் சென்றார்.

கோசலக் கோமான் அயோத்தியை ஆண்ட அரசன் தசரத சக்கரவர்த்தியும், தம் மகனாகிய இராமபிரான் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய புறப்பட்டதைக் கண்டு அந்த பிரிவைத் தாங்காது உடனே உயிர்விட்டான். ''கடந்த யோகியரும் கடப்பரோ, மக்கள் மேல் காதல்'' என்பர். நம் சுவாமிகளுக்கு முதல் மகன் முருகையாப் பிள்ளை. மற்றவர்கள் சிவஞானம்மாள் என்ற பெண்ணும் குமரகுருதாசபிள்ளை என்ற ஆணும் ஆவர். சுவாமிகள் ''செவ்வேட்பரமனின் திருவடியைச் சேராமல் இந்த ஆற்றைக் கடந்து பாம்பனில் இனி அடியெடுத்து வைக்கமாட்டேன்'' என்று அஞ்சா நெஞ்சனாக அந்த இடத்தை விட்டு அகன்று விட்டார். அந்த உறுதியை தம் வாழ்நாள் இறுதி வரையிலும் போற்றினார்.

இதற்கு முன்பாக சுவாமிகள் நீண்டநாள் வரை திருமணத்தில் விருப்பமில்லாமல் இருந்தார். இவருக்கு திருவாறெழுத்தை உபதேசித்த சேதுமாதவையரது கட்டளைக்கு இணங்கியே திருமணம் செய்து கொண்டார். காளி முத்தம்மாள் என்பவரே இவரது குணம் நிறைந்த மனைவியாவார். இந்த அம்மையாரும் முருகப் பெருமான் மீது தணியாத அன்புடையவர்.

ஒருநாள் உடல் நலிவால் சுவாமிகள் மூச்சற்று இருந்தபோது அவர்தம் மனைவி வருத்த முற்றிருந்தார். இதைக் கண்ட நம்முடைய வடிவேல் முருகப் பெருமான் இவர் மூலமாக திருநீறு அளித்தமை சிந்திக்கத்தக்கது. சுவாமிகளே இவ்வம்மையின் குணநலன்களைப் பாராட்டிப் பின்னர் ''அப்பனவன் சொன்னபடி ஓர் பெண்ணை மணந்தேன். அவளும் நல்லவளே'' எனக் கூறியுள்ளார்.

நம்முடைய சுவாமிகள் துறவு கொள்வதற்கு முன்னதாக தம்முடைய இல்லக்கிழத்தியிடம் ''நான் இருக்கும்வரை நீஎன்னைச் சந்திக்க பாம்பன் பதியை விட்டு வரக்கூடாது'' என்ற உறுதி வாங்கிச் சென்றார். அந்தக் குணவதியாகிய சுவாமிகளுடைய மனைவியார் காளிமுத்தம்மாள் தம் கணவர் வார்த்தைகளுக்கு எதிரொன்றும் பேசாது அவர் கூறிய வண்ணமே தமது வாழ்நாள் முடியும்வரை பாம்பன் என்ற ஊரைவிட்டு வரவேயில்லை. கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை அன்றோ!

மாயப் பிறவியே மூவேடணையால் மாறி மாறி வருகிறது. ஏடணை என்பது ஆசை. மூவேடணை என்றால் மூன்று ஆசைகள். அவை முறையே

1. தனேஷணை (பொருளாசை)
2. தாரேஷணை (மனைவி மேல் காதல்)
3. புத்திரேஷணை (மக்கள் மேல் வைத்தப் பற்று) எனலாம்.

நமது சுவாமிகள் பெரும் செல்வந்தர். நெல் வாணிபம் செய்தவர். இருப்பின் அவற்றை எல்லாம் விட்டு விட்டுப் பொருள்மேல் உள்ள பற்றை அறுத்துவிட்டு மனைவி மக்களைத் துறந்து விட்டு முழுத் துறவியானார். இதனையே நம் பரமகுரு அருணகிரிநாதர் கந்தரனுபூதியில் ''மாவேழ் சனனங் கெடமாயைவிட மூவேடணை என்று முடிந்திடுமோ?'' என்றமை காண்க. ஆதலின் நம் சுவாமிகளும் மூவேடணை ஒழித்த முனிவரானார்.

நம்முடைய சுவாமிகள் ஏறிய படகும் பிரப்பன்வலசையை அடைந்தது. அங்கே துறவு பூண்டு வந்துள்ள தம் அருமை மகனைச் சுவாமிகளின் தாயாகிய திருமதி செங்கமல அம்மையார் சந்தித்துக் கல்லையும் உருக்கும் கவலையை முகத்தில் காட்டி நின்றார். பின்னர் ''என் அருமை மகனே! எனக்கு என்ன கூறவுள்ளாய்?'' எனத் தழுதழுத்தக் குரலில் கேட்டார்.

உடனே நம்முடைய குருநாதர் பாம்பன் சுவாமிகள் ''அன்னையே! என்னைத் தடை செய்ய வேண்டாம். செவ்வேளை நம்பினால் எவ்வேளையும் வந்து எல்லா நலமும் நல்குவார். எம்பிரான் திருவுள்ளப்படியே எதுவும் முடியும்'' என்று கூறி வணங்கினார். அன்னையாரும் பின்னர் ஏதும் பேசாமல் ஒதுங்கிச் சென்றார். சீடர்கள் சிலரும் சிறிது தூரம் சாமிகளுடன் சென்று வணங்கிப் புறப்பட்டனர். சுவாமிகள் எல்லாரிடமும் விடைபெற்றுக் கொண்டு கந்தவேளை எந்தவேளையும் தம் சிந்தையில் நினைத்துக் கொண்டு துறவறம் பூண்டவராய் தம் ஊரை விட்டுப் புறப்பட்டார். ஆகவே நம்முடைய குருநாதர் பாம்பன் சுவாமிகளுடைய மாதவம் ஈடு இணையற்றதன்றோ? நம் சுவாமிகள் ஒரு அஞ்சா நெஞ்சர். ஆண்மையின் இமயமன்றோ?

ஒரே ஆலயத்தில் மூன்று திருக்கோலம்

திருநெல்வேலி மாவட்டம் கரியமாணிக்கம் பெருமாள் கோயிலில் சுவாமியை நின்றகோலம், சயனக்கோலம், அமர்ந்தகோலம் ஆகிய மூன்று திருக்கோலங்களிலும் வழிபட்டு மகிழலாம்.

இவ்வளவு தூரம் வந்த பிறகு

நிறைமதி

பழமதுரை என்று பார்போற்றும் ''கோயில் மாநகரம்'' மதுரைக்கு வரும் பக்தர்கள் பலரும் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தை வழிபடுவதோடு ஊர் திரும்பி விடுகிறார்கள். இன்னும் சிலர் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம் சென்று வழிபடுவதோடு மனநிறைவு பெற்று விடுகிறார்கள்.

இதே மதுரையில் சிறப்புற்று விளங்கும் நான்காம் படைவீடு சோலைமலை முருகன் ஆலயத்தையும் அந்த ஆலயத்துடன் இணைந்தே விளங்கும் அருள்மிகு கள்ளழகர் ஆலயத்தையும் சென்று வழிபடும் பக்தர்கள் கூட மிகமிகக் குறைவு என்பது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

இதே மதுரையில் பக்தர்கள் கண்டு வழிபட வேண்டிய சிறப்புமிக்க திருத்தலங்கள் ஒன்றல்ல. மிகப் பலவாக உள்ளன என்பதையே ''இவ்வளவு தூரம் வந்தபிறகு'' எனும் இக்கட்டுரையில் தெளிவுபடுத்தி வருகின்றோம்.



அவ்வகையில் மதுரையிலேயே அமைந்து விளங்கும் அருள்மிகு இம்மையில் நன்மைதருவார் திருக்கோயில் மகிமையையும், அருள்மிகு திருஆப்புடையார் திருக்கோயில் மகிமையையும் சென்ற இதழில் வணங்கி வழிபடவேண்டியதன் இன்றியமையாமையைக் குறிப்பிட்டிருந்தோம்.

மேலும் மதுரைக்குச் செல்லும் பக்தர்கள் வழிபட வேண்டிய அரும்பெரும் சிறப்புக்கள் மிக்க திருத்தலங்கள் சிலவற்றையும் இவ்விதழில் இனி நாம் விளக்கமுறக் கண்டு மகிழ்வோம்.

மதுரையிலே அமைந்து விளங்கும் நாம் காண வேண்டிய மற்றொரு சிறப்புமிக்க திருக்கோயில் **அருள்மிகு காஞ்சனமாலை திருக்கோயில்** ஆகும். இத்திருக்கோயிலின் பெயரிலிருந்தே நாம் இத்திருக்கோயிலின் பெருமையைத் தெரிந்து கொள்ளலாம்.

தடாதகை பிராட்டியாராம் மீனாட்சியை ஈன்ற தாயார் காஞ்சனமாலை கடல் நீராடிச் சிவலோகம் சேர விரும்புவதாக மீனாட்சியிடம் தம் விருப்பத்தைத் தெரிவித்தபோது அருள்மிகு சுந்தரேசுவர் ஏழுகடல்களையும் வரவழைத்து, மாண்ட மலையத்துவசபாண்டியனையும் உயிருடன் வரவழைத்துத் தம் மாமியாரான காஞ்சனமாலையை ஏழுகடல் நீராட வைத்துக் கணவருடன் கயிலாயம் அடைவித்தார் என்பதை 64 திருவிளையாடல்களில் ஒன்றாக அறிந்து இன்புறுகிறோம். அவ்வேழுகடல் அழைத்த எம்பெருமான் கோயில் கொண்டு விளங்கும் அற்புதத் திருத்தலமே அருள்மிகு காஞ்சனமாலை திருக்கோயிலாகச் சிறப்பினைப் பெற்றுத் திகழ்கின்றது.

இத்திருத்தலத்தை வழிபடுவதோடு இங்குள்ள ஏழுகடல் தீர்த்தமும் நீராடினால் இகபரசுகங்கள் யாவும் பெற்று பக்தர்கள் வீடு பேறு அடைவது திண்ணம் ஆகும்.

மதுரைக்கு வரும் பக்தர்கள் அவசியம் கண்டு வழிபட வேண்டிய திருத்தலம், பெரியாழ்வார் திருப்பல்லாண்டுப் பாடிக் கொண்டாடிய கூடலழகர் வீற்றிருக்கும அருள்மிகு கூடலழகர் திருக்கோயில் ஆகும்.

அஷ்டாங்க விமானம் அமையப் பெற்ற இச்சிறப்பு வாய்ந்த திருக்கோயில், 108 திவ்விய தேசங்களுள் புகழ்மிக்க ஒன்றாகும்.

பாண்டியன் ஸ்ரீவல்லபதேவனுக்குப் பரதத்துவத்தை விளங்கவுணர்த்திப் பொற் கிழியறுத்த ஸ்ரீவிஷ்ணு சித்தர், பட்டத்துயானை மேல் வலம் வந்தபோது பரமபதநாதன் பிராட்டியுடன் பெரிய திருவடியின் மீதேறி வந்து சேவை தந்தருளினார்.

அத்திருக்காட்சியைக் கண்டு மகிழ்ந்த விஷ்ணு சித்தர் திருப்பல்லாண்டுப் பாடிப் போற்றினார். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள்



பலவகை மிருகங்களும் பறவைகளும்

பசு	-	பந்தணை நல்லூர்
காளை	-	ராமநந்தீச்சரம் (திருப்புகலூர் அருகில்)
யானை	-	திருவானைக்காவல்
ஆடு, யானை	-	திருவாடானை
புலி	-	திருப்புலிவனம், புலிப்புறக் கோயில் (படாளம் அருகில்)
எறும்பு	-	திருவெறும்பூர்
மான்	-	வள்ளிமலை
நண்டு	-	நண்டான் கோயில் என்னும் திருந்து தேவன்குடி
கோழி	-	கொக்குடீச்சரம் என்னும் வாரணாசி
ஒட்டகம்	-	நெடுங்களம்

முதல் பிரபந்தமாகத் திகழ்வது **திருப்பல்லாண்டு.** அனைத்துத் திவ்விய தேசங்களிலும் பாடப்படும் பெருமைமிக்க அத் திருப்பல்லாண்டு பிரபந்தம் தோற்றிய பெருமை மிக்க திருத்தலம்தான் மதுரை மாநகரின் கண் அமைந்து விளங்கும் **அருள்மிகு கூடலழகர் திருக்கோயில் ஆகும்.**

''பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! உன்
சேவடி செவ்வித் திருக்காப்பு''

எனத் திருப்பல்லாண்டு நாமும் பாடி அருள்மிகு கூடலழகர் திருக்கோயில் வழிபட்டால் பல்லாண்டு பல்லாண்டு நலமோடும், வளமோடும் வாழ்ந்து கூடலழகர் சேவடி சேர்தல் திண்ணமாகும்.

கள்ளழகரின் அபிமான தலம் எனப் போற்றப்படும் தல்லாகுளம் அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயிலும் பக்தர்கள் வழிபட வேண்டிய திருக்கோயிலாகும்.

வைகை ஆற்றில் இறங்கி மண்டூக மகரிஷிக்குச் சாபவிமோசனம் வழங்க வரும் கள்ளழகர் இத்தலத்தில்தான் எதிர்சேவை காண்பது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். மேலும் இத்திருக்கோயில் திருமலை நாயக்க மாமன்னரால் கட்டப்பெற்ற பெருமை கொண்டது ஆகும். ''திருப்பதி ஏழுமலையானை வழிபட்டு மகிழ முடியவில்லையே!'' எனத் திருமலை நாயக்கர் வருந்தியபோது அருள்மிகு வெங்கடாஜலபதி தோன்றித் தமக்கு மதுரையிலேயே ஒரு திருப்பதி அமைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அவ்வாறு கட்டப் பெற்ற சிறப்புடையது தான் அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயில் ஆகும். மதுரையில் அமைந்து விளங்கும் திருப்பதியான இத்திருத்தலத்தைப் பக்தர்கள் அவசியம் வழிபட்டு வரம் பெறலாம்.

இன்னும் மதுரையில் பக்தர்கள் அவசியம் வழிபடவேண்டிய திருக்கோயில்களில் ஒன்றாகத் திகழ்வது தெப்பக்குளம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் ஆகும்.

திருமலைநாயக்கர் வெட்டிய தெப்பக் குளக்கரையில் அமைந்து விளங்கும் வண்டியூர் மாரியம்மன் பிரசித்தி பெற்ற அம்மன் கோயிலாகும். சகல ரோகங்களையும் நிவர்த்தி செய்யும் சர்வலோக நிவாரணியாம் வண்டியூர் மாரியம்மனை வழிபடாதவர்கள், கண்பெற்ற பயனைப் பெறாதவர்கள் என்றே கூறலாம்.

மாரியம்மனை வழிபட்டு, எதிரே பரந்து விரிந்த ''திருமலை நாயக்கர் சமுத்திரம்'' எனப் போற்றப்படும் தெப்பக்குளத்தையும், அதில் அமைந்து விளங்கும் நீராழி மண்டபத்தையும் தரிசித்துப் பக்தர்கள் மகிழலாம்.

தெப்பக்குளம் அருகே உள்ள அருள்மிகு முக்தீஸ்வரர், இந்திரனின் வாகனமான வெள்ளை யானைக்குச் சாபவிமோசனம் தந்த கீர்த்திமிக்க மூர்த்தி ஆவார். இவ்வளவு தூரம் வந்த பிறகு இவரையும் கும்பிட்டுச் செல்வதே நாம் பிறவி பெற்ற பயனாகும். இவரை வழிபடுவதால் நவகிரகதோஷம் விலகும் என்று தலவரலாறு கூறுகின்றது.

மதுரையிலேயே இன்னும் நாம் அவசியம் வழிபடவேண்டிய திருத்தலம் திருமோகூர் அருள்மிகு காளமேகப் பெருமாள் திருத்தலம் ஆகும். 108 திவ்விய தேசங்களில் புகழ்மிக்க ஒன்று. பாற்கடல் கடைந்து தேவர்கள் அமுதம் பெற்ற போது மோகினி அவதாரம் எடுத்துத் தேவர்களுக்கு அமுதம் வழங்கிய பெருமாளே இங்கு காளமேகப் பெருமாளாகத் திகழ்கின்றார். இங்குள்ள

வழிபாடு செய்த தலங்கள்

பருந்து -	பட்சீஸ்வரம்
புறா -	திருப்புறவம் என்னும் சீர்காழி
கருங்குருவி -	திருவலிதாயம் (பாடி)
சிட்டுக்குருவி -	திருப்புல்லாணி
காகம், குரங்கு, அணில் -	குரங்கணில் முட்டம்
மீன் -	திருஅறப்பளீஸ்வரம் என்னும் கொல்லிமலை
கருடன் -	குடவாசல்
பாம்பு -	திருநாகேஸ்வரம்
கழுகு -	திருக்கழுக்குன்றம்

பெருமாளே நம்மாழ்வாருக்கு வழிகாட்டி வைகுண்டத்திற்கு அழைத்துச்சென்றவர் ஆவார்.



இங்குள்ள சக்கரத்தாழ்வார் மந்திர எழுத்துக்களோடு காட்சி தருவதால், இவரை வழிபடும் பக்தர்களுக்கு வியாபார விருத்தி, தொழில் உயர்வு, வெளிநாட்டுப் பயணம், செல்வச் செழிப்பு, கல்யாணவரம், குழந்தை பாக்கியம், வழக்குகளில் வெற்றி யாவும் எளிதில் கைகூடுவது திண்ணமாகும். மதுரையிலிருந்து இத்திருத்தலம் 13 கி.மீ. தூரம் மட்டுமே. அவசியம் தரிசிக்கலாம்.

''இவ்வளவு தூரம் வந்த பிறகு'' ... மாணிக்கவாசகரின் அவதாரத்தலமான திருவாதவூரைத் தரிசிக்காமல் இருக்கலாமா?

சனீஸ்வர பகவானுக்கே வாதநோயை நீக்கிய தலம் என்பதால் இத்தலத்திற்கு வாதவூர் என்ற பெயர் உண்டாகியுள்ளது. வாத நோய் உள்ளவர்கள் இத்தலத்தில் வந்து பிரார்த்தனை செய்தால் நோய் குணமாகிவிடும் எனத்தல புராணம் கூறுகின்றது. வாதநோயில் பாதிக்கப் பட்டவர்களுக்காக அவர்தம் உறவினர்களும், நண்பர்களும் கூட இங்கு வழிபட்டுப் பிரார்த்தனை செய்ய நலமுண்டாவது திண்ணம். திருமோகூரிலிருந்து 10 கி.மீ. தூரம் தான் திருவாதவூர். மதுரையிலிருந்து 26 கி.மீ. ; அவசியம் மாணிக்கவாசகர் திருஅவதாரம் புரிந்த இத்திருத்தலத்தை வழிபட்டு நலம் பெறலாம்.

மாணிக்கவாசகரைத் தரிசித்த கையோடு மதுரைக்குத் திரும்பி, ஊர் திரும்பிவிடலாம் என்றால் மற்றொரு திசையில் திருஞானசம்பந்தர் இருந்து கொண்டு நம்மை வழிபட மறந்தீரோ என்று நினைவுபடுத்தித் திருவேடகத்திற்கு வருமாறு அழைப்பினைத் தருகின்றார்.

சமணர்களோடு அனல் வாதம் புரிந்து வென்ற ஞானசம்பந்தரிடம் சமணர்கள் புனல்வாதமும் புரிந்து வென்றால் எம் தோல்வியை ஒப்பிக் கழுவேறச் சம்மதிக்கிறோம் என மார்தட்டினர். அவர்கள் எழுதிய ''அத்திநாத்தி'' ஏடு ஆற்றோடு போய் விட்டது. ஞானசம்பந்தர் எழுதிய ''வாழ்க அந்தணர்'' என்ற ஏடு ஆற்றை எதிர்த்து சென்று கரை ஏறியது. அந்த ஏடு கரை ஏறிய இடம்தான் திருஏடகம். கூன்பாண்டியன் கூன் நிமிரவும், சைவ சமயம் தலைநிமிரவும் காரணமான வரலாற்றுச் சிறப்புடைய திருத்தலம் திருஏடகம். அருள்மிகு ஏலவார்குழலி அம்மை உடனுறை ஏடகநாதர் திருவடிகளைவழிபட்டு

''வையம் நீடுக மாமழை மன்னுக
மெய்யை விரும்பிய அன்பர்கள் விளங்குக!
சைவ நன்னெறி தாம்தழைத் தோங்குக
தெய்வ வெண்திருநீறு சிறக்கவே!''

என வாழ்த்தியவாறே மதுரை திருத்தலப் பயணத்தை ஓரளவு நிறைவு செய்து, பேரளவு மனநிறைவோடு நாம் நம் ஊர் திரும்புவோமாக!

ஏது குறை? எல்லாம் நிறை

துருவன் கோ. கோபாலகிருஷ்ணன், எம்.ஏ.

(கடலூர் - குறிஞ்சிப்பாடி - வேங்கடாம்பேட்டை பள்ளி கொண்ட ராமர் மேல் பாடியது)

பள்ளிகொண்ட கோலத்தில் ஸ்ரீராமர்

(கற்பின் கனலி சீதையைத் தேடி இலங்கைக்குத் தமிழ் நாட்டின் ராஜபாட்டையில் செல்லும் வழியில் எங்கும் துயிலாத இராமன் சீதையை மீட்டு அயோத்தி திரும்பும் வழியில் வடஅரங்கமாம் வேங்கடாம்பேட்டையில் இளைப்பாறித் துயின்ற அதிசயம் நிகழ்ந்துள்ளது. அழகியள் சீதை, ஆதிசேட இலக்குமணன், அஞ்சலிக்கும் அனுமன் ஆகிய இணைபிரியா மூவர் மட்டும் அருகிருக்க பள்ளிகொண்ட ராமரைப் போற்றிப் பாடப்பட்ட கவிதையாகும் இது; இராமாயணக் கதைப் பாடல் இதைப் பயின்று இன்புறலாம்.)

ராகம்	தாளம்
குவலையாபரணம்	ஆதி

பல்லவி

ஏது குறை எல்லாம் நிறை
எந்தன் இறையே!
எழில் மாதைச்சிறை மீட்ட மாதுஉறை
மார்பன் என்துரையே!

(ஏது குறை)

அனுபல்லவி

ராமதுரையே! வட அரங்க ராஜதுரையே
ரங்கதுரையே கரும் தங்கதுரையே

(ஏது குறை)

சரணம் -1

அரவணையில் அன்று துயின்றாய்!
அரவணை அமுதால் பிறந்தாய்!
அரசகுல திலகனாக
அரண்மனையில் நீவளர்ந்தாய்!
அறியாத வயதில் கானகத்தில்
அரும் வேள்வியைக் காத்தாய்!
அரக்கியை எதிர்த்தழித்தாய்!
அகல்யைக்கு வாழ்வளித்தாய்!

(ஏது குறை)

சரணம் -2

அரசவையில் வில்லொடித்தாய்!
ஆரணங்குசீதை மணந்தாய்!
அரியேறாம் உனைக் கண்டு வெகுண்ட
அந்தண ராமனையும் வென்றாய்!
அரவணைக்கும் ஆற்றல் கொண்டு
அனைவருக்கும் அன்பன் ஆனாய்!
அரியணையைத் துறந்து பின்னர்
ஆரண்ய வாசம் செய்தாய்!

(ஏது குறை)

சரணம் - 3

அரும்பும் பேரன்பால் குகன் வணங்க
அகன்ற கங்கையைக் கடந்தாய்!
அரற்றிடும் நெஞ்சோடு தந்தைக்கு
ஆற்றில் நின்று நீர்க்கடன் கழித்தாய்!
அரிதான மான்பிடிக்கப் பின்போய்
ஆசைமனையாளை நீபிரிந்தாய்!
அருங்கானில் கண்களில் நீர் வழிய
அழகின் கண்மணியைத் தேடிச் சென்றாய்!
அழகுப் பெண்மணியைத் தேடிச் சென்றாய்!

(ஏது குறை)

சரணம் - 4

அற்று வீழ்ந்த சடாயூ சொல்ல
அழி பகையை இனம் கண்டாய்!
ஆறாத மனத்து லட்சுமணனுடன்
அனுமன் சுக்ரீவனுடன் சேர்ந்தாய்!
அறன் இல்லா வாலிக்கு 'அம்பு' தந்து
அவன் தம்பிக்கு 'அன்பு' தந்தாய்!
அறிவின் திறல் அனுமன் கடல் கடந்து உன்
ஆற்றல் தூது உரைக்க வைத்தாய்

(ஏது குறை)

சரணம் -5

அறவழிபோல் சேது பந்தனமிட்டு
அனுமன் சேனையொடு இலங்கை புகுந்தாய்!
அரக்கரோடு இராவணனைக் கொன்று
அன்னை சீதையைச்சிறை மீட்டாய்!
அரசாள அயோத்திநகர் மீண்டாய்!
அடியார்க்கு அடிக்கமலம் அருளினாய்!
அரவப் பெரும் பள்ளி கண்டு - வட
அரங்கத்(து) அரசாய் அறிதுயில் கொண்டாய்!

(ஏது குறை)

தெரிந்த கோயில் தெரியாத செய்தி :

ஆதிபுரியின் அதிகார நந்தி

- ப. ராஜா, பி.எஸ்.ஸி., பி.எல்.
இணை ஆணையர், சென்னை.

நந்திதேவர் சிவகணங்களுக்குத் தலைவர். சிவபெருமானின் மிக உகந்த வாகனமாக விளங்குபவர் நந்திதேவர். இவருக்கு விடை, இடபம், நந்திகேஸ்வரர், நந்திதேவர், நந்தி என்றெல்லாம் பல பெயர்கள் உள்ளன.

நந்தியின் வடிவம் செப்புத் திருமேனியானால் 'பால நந்தி' எனவும், பலிபீடத்தின் அருகில் இருந்தால் 'மகா நந்தி' எனவும், சுதையால் பெரிய அளவில் அமைக்கப்பட்டிருந்தால் 'ராஜ நந்தி' எனவும் அழைக்கப்படுகிறது. இது தவிர கோவில் விமானத்திலும், மதில்சுவர் போன்ற இடங்களிலும் நந்தி தேவர் உருவங்கள் அமைந்திருக்கும்.

நந்திதேவர் சிவாலயங்களில் தலைவாசல் காக்கும் பெருமை பெற்றவர். அது போல் கைலாயத்தில் ஈசுவரனையும், உமையையும் தரிசிக்கச் செல்லுபவர்களை அனுமதிப்பது அல்லது நிராகரிக்கும் அதிகாரம் படைத்தவர் இவர் ஒருவரே ஆதலால் இவருக்கு **''அதிகார நந்தி''** என்பது சிறப்புப் பெயர் ஆகும்.

இவர் முகம் மட்டும் ரிஷபத்தின் முகமாக இருக்கும். உடல் முழுவதும் மனித உடல். 4 கரங்களுடன், இறைவனின் மானும் மழுவும் மேல் இரு கரங்களிலும் இருக்கும். முன்னிரு கரங்களைக் கூப்பியவாறோ அல்லது திருவடியைத் தாங்கிக் கையை மலர்த்தி வைத்தவாறோ இருப்பார். சில சிற்பங்களிலும், வாகனங்களிலும் இடுப்பிலோ மார்பிலோ கத்தியை உறையுடன் அணைத்தவாறு இருக்கும் இவர் வடிவமும் உண்டு.

சிவனின் அதிகாரம் பெற்றவர், சிவனின் அணுக்கத் தொண்டர், கயிலையங்கிரியில் உறையும் இறைவனின் வாயில் காக்கும் அதிகாரம் பெற்றவர் என்பதால் இவரின் வாகனத்தில் இறைவன் உலா வருவதை வணங்குவது மிகச் சிறப்பானதாகக் கருதப்படுகின்றது.

''அதிகாரநந்தி சேவை'' என்பதைப் பெருமாள் கோயில்களில் நடைபெறும் கருடவாகன சேவையுடன் ஒப்பிட்டுச் சிலர் பேசுவர்.

அதிகார நந்தி சேவை, ஒவ்வொரு கோயிலிலும் பிரம்மோற்சவத்தில் ஒவ்வொரு நாளில் ஒவ்வொரு நேரத்தில் நடைபெறுகிறது.

- மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் பிரம்மோற்சவத்தின் 3ஆம் நாள் காலையில், அதிகார நந்தி சேவை நடைபெறுகிறது. சில இடங்களில் 2ஆம் நாளும், 5ஆம் நாளும் பிறநாட்களிலும் அத்திருக்கோயிலின் ஆகமங்கள் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப நடத்தப் படுகிறது.

சென்னையில் உள்ள சில பழமையான சிவாலயங்களில் ஒன்றான சிந்தாதிரிப்பேட்டை அருள்மிகு ஆதிபுரீஸ்வரர் திருக்கோயிலில் பிரம்மோற்வசத்தின் 5ஆம் நாள் மாலையில் அதிகார நந்தி சேவை நடைபெறுகிறது. இந்த அதிகார நந்தி சேவையைக் காணக் கண்கள் கோடி வேண்டும்.

பிரம்மோற்சவத்தின் 5ம் நாள் பிரதோஷ நேரத்தில் கயிலையங்கிரியில் சிவபெருமான் உமையம்மையோடு எழுந்தருள்வார். அக்காட்சி கயிலையங்கிரியில் உள்ள அதிகார நந்தியின் மீது இறைவன் அமர்ந்து வருவது போல இருக்கும். இங்கு உள்ள வாகனம் மரத்தினால் செய்யப்பட்டு தங்க ரேக்கு அடிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள ''அதிகார நந்தி''யின் தனித்தன்மையும் சிறப்பும் பலருக்குத் தெரியாத ஒன்று. அதனைத் தெளிவுபடுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

இரண்டு அடுக்குகள் கொண்ட இந்த கயிலையங்கிரி விமானத்தின் மீது அதிகார நந்தி அமர்ந்து உள்ளார். அவரின் மீது உமையம்மையுடன் சிவபெருமான் காட்சி தருகிறார்.

இந்த வாகனத்தில் பொம்மைகளும் இறை உருவங்களும் தங்க ரேக் ஒட்டப்பட்டவை ஆகும். இவை அனைத்தையும் மரத்தால் ஆன பட்டறை ஒன்று தாங்குகிறது. அதனைத் தண்டுடன் கட்டினால் சுமார் 15 அடி உயரத்தில் அதிகார நந்தியின் மீது உமையம்மையும் ஈசுவரனும் காட்சி தருவர். அதனைச் சீர்பாதம் தாங்குவோர் தூக்கும் போது சுமார் 20-21 அடி உயரம் வரும்.

20-21 அடி உயரத்தில் பிரதோஷ மாலை வேளையில் சுடர்விட்டு ஒளிரும் தீவட்டிகளின் வெளிச்சத்தில், தங்கம் தகதகவென ஒளிர, அப்சரஸ் பெண்கள் பொம்மைகளாகப் பறந்து கொண்டிருக்க, இதர இறை உருவங்கள் சேர்ந்து வர, அதனோடு இறைவன் காட்சி தரும் சிறப்பை மனக்கண் முன் நிறுத்திப் பார்த்தால் எங்கும் காண முடியாத காட்சி இதுவெனவே தோன்றும்.

ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் நடைபெறும் பிரம்மோற்சவத்தில் இந்த வாகனப் புறப்பாட்டைக் கண்டு களிக்கலாம்.

வரகூரில் உறியடி உர்சவம்

திருமதி இந்திரா ஆராஅமுதன் - திருவரங்கம்

பூபதிராஜபுரம், வராஹபுரி என்று அழைக்கப்படும் வரகூரில் சுமார் 500 ஆண்டுகளாக தவறாமல் உறியடி நடத்தப்படும் காரணத்தை நாம் அறிந்து கொள்வோம். இந்த ஊர் திருவரங்கம் அருகே கண்டியூர் திருக்காட்டுப் பள்ளி செல்லும் வழியில் இருக்கிறது.

நாராயண தீர்த்தர் என்ற கவி ஆந்திராவில் பிறந்து, வேதம், சாஸ்திரம் எல்லாம் பயின்றார். திருமணம் செய்து சில ஆண்டுகள் கழிந்தபின் சன்னியாசம் ஏற்றுக் கொண்டு சஞ்சாரம் செய்ய ஆரம்பித்தார்.

திருப்பதி, மெலட்டூர், திருவையாறு, நடுக்காவேரி போன்ற தலங்களைச் சேவித்து வரும்போது, அவருக்கு திடீரென்று வயிற்றுவலி ஏற்பட்டது. மருத்துவ வசதி அதிகம் இல்லாத காலம் அது. நடுக்காவேரி என்ற ஊரில் அவர் தங்கியிருந்த போது வலியினால் மிகவும் துடித்துக் கொண்டிருந்தார். அவரையும் மீறிச் சற்று கண் அயர்ந்த நேரத்தில், பகவான் அவர் கனவில் தோன்றி ''நாளைக் காலையில் நீஎதை முதலில் பார்க்கிறாயோ, அதைப் பின்தொடர்ந்து செல், உன் நோய்க்கு மருந்து கிடைக்கும்'' என்று சொல்லி மறைந்தார்.

விடிந்தது. இவர் வியப்புடன் வெளியே வந்தார். முதலில் அவர் கண்ணில் ஒரு வெள்ளை வராகம் தான் பட்டது. ஒன்றும் விளங்காமல் தவித்தார். பின் பகவானின் கட்டளை என்று புரிந்து கொண்டு அதைப் பின்பற்றிச் செல்ல ஆரம்பித்தார். மாய வித்தை போல வரகூர் வந்தவுடன் அவரது வயிற்று வலி பறந்தோடி விட்டது.

அவர் மூலம் அற்புதமான பாடல்களை ரசிப்பதற்காக அல்லவா பகவான் காத்துக் கொண்டிருக்கிறார்! தான் தான் கிருஷ்ணன் என்றும், இந்த ஊரில் வெங்கடேசப் பெருமாள் என்று அழைக்கப்படுவதாகவும், தன்னுடைய பாலலீலைகளை ஆயிரம் பெயர்கள் கொண்ட துதிகளினால் பாடும்படியும் சொல்லி விட்டு வராகம் மறைந்தது.

லலிதாதேவி தன் பரிவார தேவதையான வாக்தேவி வசினிக்கு அருள் புரிந்து, தன் பெருமைகளை ஆயிரம் பெயர்கள் கொண்ட ஸ்துதியாகப் பாடச் சொல்லி அதன் மூலம் நமக்கு லலிதா சஹஸ்ரநாமம் கிடைத்தது போல வெங்கடேசப் பெருமாள் நாராயண தீர்த்தர் மூலம் நமக்குக் கிருஷ்ணலீலாதரங்கிணியைப் பெற்றுத் தந்தார் என்பது வரலாறு.

நிற்க. மூலவர் ஸ்ரீவெங்கடேசப் பெருமாள் இடது காலைத் தனது வலது தொடை மீது வைத்துக் கொண்டும், இடது தொடையில் ஸ்ரீமகாலட்சுமியை அமர்த்திக் கொண்டும் இடது

உறையூர் அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயிலில் காய்கனிகள் அலங்கார வழிபாடு

உறையூர் அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயிலில் ஆண்டுதோறும் ஆனித்திங்கள் 3 ஆம் வெள்ளிக்கிழமையன்று நடைபெறும் காய்கனிகள் அலங்கார வழிபாடு 1.7.2005 அன்று மாலை 6.00 மணிக்கு மிகச்சிறப்பாக நடைபெற்றது.

பக்தர்கள் யாவரும் காய்கனிகள் வழங்கி, அவர்கள் கைகளாலேயே மாலைகளாகக் கோர்த்து அம்பாளுக்கு வழங்கினர். வழிபாடு முடிந்து மறுநாள் காலை காய்கனிகள் அனைத்தும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

கரத்தினால் அணைத்துக் கொண்டும் வீற்றிருக்கிறார். தாயாரும் தமது வலது கரத்தினால் பகவானை அணைத்தபடி இருக்கிறார். உத்ஸவருக்கும் அதே பெயர்தான். ஸ்ரீதேவி, பூதேவியுடன் காட்சி தருகிறார்.

கிருஷ்ண ஜயந்தி அன்று காலை வெண்ணைத் தாழி உத்ஸவம் நடக்கும். அன்றைய தினம் உறியடி நடப்பதால், மாலையில் பெருமாள் நவநீதகிருஷ்ணன் அலங்காரத்துடன் பல்லக்கில் எழுந்தருளி கடுங்கால் மண்டபத்தில் தங்கி திருமஞ்சனம் நடைபெற்றபின் உறியடிக்கும் கிருஷ்ணனாக அலங்காரம் செய்யப்படுவார். அலங்காரம் முடிய இரவு 12 மணி ஆகிவிடும்.

இதற்குள் உறியடியையும் சறுக்கு மரத்தையும் தயார் செய்வார்கள். விளைந்த மூங்கில்கள் 3 அல்லது 4ஐ சேர்த்துக் கட்டி அதை மேலும் உயரமாக்க வேறு மூங்கில்களை இணைத்து சுமார் 60 அடி உயரமாக ஆக்குவார்கள். உச்சியில் ஒரு பல்லைப் பொருத்தி விட்டு, அந்தக் கம்பத்தின் முக்கால் பாகத்தில் ஒரு பெட்டியைக் கட்டி அதன் நான்கு மூலைகளிலும் நான்கு தும்பாக்களைத் தொங்கவிடுவார்கள். மின்விளக்கு அலங்காரம் செய்து வைத்து அதற்கும் கீழே மூங்கில் குச்சிகளைக் கொண்டு மிருதங்க வடிவில் ஒரு அமைப்பை அமைத்து அதற்குள் உறியடிக்குத் தேவையான பட்சணங்கள், பணம், தங்கம் ஆகியவைகள் வைத்து மூடுவார்கள். அத்துடன் இன்னொரு மூங்கில் கழியை இணைத்து அதை மேலும் கீழுமாக ஆட்டும் விதத்தில் அமைப்பார்கள். போட்டியாளர்கள் சுலபத்தில் எட்ட முடியாத தூரத்தில் கட்டிவிட்டு, அவர்கள் பிடிக்க வரும்போது மேலே தூக்குவதும், பின் இறக்கி விளையாட்டுக் காட்டுவதும், பார்க்கும் ரசிகர்களின் ஆரவார இரைச்சலும் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

கோயில் வாசலின் முன்பு உறியடி மரத்தை நடுவார்கள். அதற்கு 20, 30 அடி தள்ளிச் சறுக்கு மரத்தை நட்டு அதன் பூராவும் விளக்கெண்ணை, கத்தாழை, பசைஆகியவைகளைத் தடவுவார்கள். இதன் உச்சியிலும் பரிசுப் பொருட்களை வைத்து இருப்பார்கள். பெருமாளுக்கு அலங்காரம் நடக்கும் நேரத்தில் இந்த இரண்டு மரங்களையும் தயார் செய்து வைத்து விடுவார்கள்.

வரகூரில் ஓடும் நதியின் பெயர் கடுங்கால். அந்த நதியில் நீராடிவிட்டு ஈரத்துணியுடன் கையில் ஒரு தேங்காயை வைத்துக் கொண்டு, மண்டபத்தின் வெளிப்பந்தலில் பக்தர்கள் காத்திருப்பார்கள்.

மண்டபத்தின் உள்ளே பஜனை கோஷ்டி ஒரு ஓரமாக அமர்ந்து பஜனை செய்தபடி இருக்க, அலங்காரம் முடிந்து திரையை நீக்கித் தீபாராதனை ஆனபிறகு, பெருமாளைப் பந்தல் போடப் பட்டிருக்கும் பெஞ்கியில் எழுந்தருளப் பண்ணுவார்கள். பின் வெள்ளித் தோளுக்கினியானில் பெருமாளை எழுந்தருளப் பண்ணி வெளியே எடுத்துச் செல்வார்கள். பெருமாள் அங்குலம் அங்குலமாக அசைந்து அசைந்து செல்வார். பந்தலைத் தாண்டி பெருமாள் வெளியே சென்ற பின் அங்கப்ரதக்ஷிணம் ஆரம்பிக்கும்.

அங்கப்பிரதக்ஷிணம் செய்பவர்கள் ஒருவர் பின் ஒருவராக மண்டபத்தின் வாசற்படிக்கு நேரே வந்து நின்று கொண்டு (பெருமாள் வெளியே போய் விட்டதால் கம்பிக் கதவை மூடி விடுவார்கள்) கையில் தேங்காயை வைத்தபடி கீழே விழுந்து நமஸ்காரம் செய்து விட்டு உருள ஆரம்பிப்பார்கள்.

பெருமாள், கோயில் வாசலுக்குச் சென்று உறியடிக்கம்பத்தைப் பார்வையிடுவது போல திரும்பி நிற்பார். கூப்பிடு தூரத்தில் இருக்கும் கோயில் வாசலுக்கு செல்ல பெருமாள் எடுத்துக் கொள்ளும் நேரம் சுமார் 3 மணி நேரமாகும். அதற்குள் குறிப்பிட்ட இடத்திற்கு உருண்டு வந்து அங்கப்ரதக்ஷிணம் செய்யும் பக்தர்களும் அப்படியே படுத்தபடி இருப்பார்கள்.

உறியடியை அடிக்கும் உரிமை பெற்ற அறங்காவலர் வீட்டில் சில பக்தர்கள் தங்களை யாதவர்களாக நினைத்துக் கொண்டு சலங்கைசளைக் காலில் கட்டிக் கொண்டு தயாராக இருப்பார்கள்.

அந்த வீட்டிலிருந்து ஒருவர் வெளியே வந்து ஒரு பெரிய துணி மூட்டை அல்லது சாக்குச் சுருளை கையில் வைத்தபடி நிற்க, வேறு இருவர் இரண்டு பக்கத்திலும் நின்று கொண்டு அதை விதானம் போல விரித்து இழுத்துச் செல்ல, வீட்டில் காத்திருந்த பக்தர்கள் கொட்டிலிலிருந்து கிளம்பும் பசுக்களைப் போல ஆடிக்கொண்டும், அசைந்து

மயிலையில் ''பெரியபுராணத் தொடர்ச் சொற்பொழிவு'' தொடக்கவிழா

மயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் ''பெரியபுராணத் தொடர்ச் சொற்பொழிவு'' நிகழ்ச்சியை நம் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு த. பிச்சாண்டி இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இவ்விழாவில் சென்னை இணை ஆணையாளர் திருமிகு ப. ராஜா பிஎஸ்.சி.பிஎல் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். திருக்கோயிலின் துணை ஆணையாளர், நிர்வாக அதிகாரி திருமதி ந. திருமகள் எம். ஏ. பி.எல் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள், ''செந்தமிழ்வாரிதி'' முனைவர் இரா. செல்வக்கணபதி அவர்கள் வெள்ளிக்கிழமை தோறும் மாலையில் பெரியபுராண விரிவுரை நிகழ்த்துகின்றார்.

கொண்டும், எட்டிப் பார்த்துக் கொண்டும் செல்வார்கள். அந்த விதானத்தின் அடியில் சிலர் உட்கார்ந்து கொண்டு சப்பாணிகள் போல நகர்ந்தும் செல்வார்கள்.

பெருமாள் முன்பு வரும் முதல் இடையனுக்கு சடாரி, பூமாலை, தீர்த்தம் தந்துவிட்டு, அவன் தலையில் பால் சொம்பை வைத்துக் கையில் கழியைக் கொடுத்து (ஆநிரைகளை மேய்ப்பது போன்ற பாவம்) கம்பளியால் போர்த்தியபின் தீபாராதனை நடக்க எல்லோரும் ''கோபாலா'', ''கோபாலா'' என்று பாட, பதிலுக்கு ''உறியடியோ கோவிந்தா'' என்ற நாமகோஷம் வானைப் பிளக்கும். இவர்களைத் தொடர்ந்து அங்கப்ரதக்ஷிணம் செய்பவர்களும் சென்று உறியடி, சவுக்குமரம், பெருமாள் ஆகியோரை 3 முறை வலம் வருவார்கள். அவர்களுக்கு மூலவர் சேவை ஆகிப் பிரசாதம் கொடுத்துவிட்டுப் பின் மூலவர் சன்னதியை மூடிவிடுவார்கள்.

இதற்குள் விடியற்காலை 4 மணி ஆகிவிடும். உறியடி ஆரம்பிக்கும், பக்கத்தில் ஒரு பெரிய தொட்டியில் மஞ்சள் பொடி கலந்த நீர் இருக்கும். அறங்காவலர் முதல் அடியை அடித்தவுடன் உறியடி ஆட்டம் ஆரம்பிக்கும். பங்கேற்பவர்கள் மேல் தண்ணீரைப் பாய்ச்சிப் உறியைப் பார்க்கவிடாமல் பண்ணிவிட்டு, அவர்களை எட்ட முடியாதவாறு பண்ணிவிட்டு, பச்சைக் குதிரை பாவனையிலும் அவர்கள் முயற்சிப்பார்கள். பின் ஒரு வழியாக யாராவது ஒருவர் அந்த மிருதங்க வடிவத்தை எட்டிப் பிடித்து, உள்ளே கையை விட்டு எடுக்கும் போது கீழே விழுவதையும் சிலர் பொறுக்கிக் கொள்ள, கடைசியில் பிரித்துக் கொள்வார்கள். (முன்பெல்லாம் பீச்சாங்குழலினால் தண்ணீரை பீச்சுவார்களாம்)

இதே ரீதியில் சறுக்குமரம் விளையாட்டும் நடைபெறும். ஜெயிப்பவர்கள் உச்சியில் கட்டியிருக்கும் பரிசைஎடுத்துக் கொள்வார்கள். முயற்சி செய்யாமல், கஷ்டப் படாமல் வெற்றி அடைய முடியாது என்ற உள் அர்த்தம் கொண்ட இந்த இரு விளையாட்டுகளையும் தந்து நமக்குப் புரிய வைத்தது கண்ணனின் ஜன்மதினம் தானே ! இரு விளையாட்டுகளும் முடிந்தவுடன் வெளியூர்க் காரர்கள் தம், தம் வண்டிகளில் கிளம்புவார்கள்.

பின் மறுநாள் ருக்மணி கல்யாணத்துடன் உத்ஸவம் நிறைவு பெறும்.

ஸ்ரீ வரலட்சுமி விரதம்

ஆவணி மாதம் பௌர்ணமிக்கு முன்வரும் வெள்ளிக் கிழமைகளில் நோற்கப்பட வேண்டிய விரதம் ஸ்ரீ வரலட்சுமி விரதம் ஆகும்,

அஷ்ட ஜஸ்வரியங்கள், மக்கள்பேறு, பேரன் பேத்திகளுடன், சகல சுகங்களும் பெற ஸ்ரீவரலட்சுமி விரதம் கண்கண்ட மருந்தாகும்.

சிறப்பாசிரியர் மற்றும் திருமிகு **த. பிச்சாண்டி**, இ.ஆ.ப., ஆணையர்.
வெளியிடுவோர் : தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929

அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில்

திருவான்மியூர், சென்னை 600 041
போன் : 24410477
www.marundeeswarar.com

தங்கரதத் திருப்பணி

எல்லாம் வல்ல பேரருட் கடலாகிய சிவபெருமான், மக்களெல்லாம் தம்மை எளிதில் வழிபட்டு இம்மை மறுமைப் பயன்களைப் பெற்றுய்யும் பொருட்டு, அருளே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் தெய்வத் திருத்தலங்களுள் ஒன்றாய் விளங்குவது தரும மிகு சென்னை.

தரும மிகு சென்னையில் சென்னை கடலோரத்தில் அமைந்ததும், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர் பாடல் பெற்றதும், இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன் வழிபட்டதும், இந்திரன், யமன், சூரியன், சந்திரன், பிருங்கிமுனிவர் முதலியோரும், நான்குமறைகளும் வழிபட்டதும், காமதேனு பால்சொரிந்து வணங்கிப் பேறுபெற்றதும், வான்மீகி முனிவருக்குத் திருநடனக் காட்சி அளித்ததும், அகத்தியருக்கு இன்ன நோய்க்கு இன்ன மருந்து என உபதேசித்ததுமாகிய திருத்தலம் திருவான்மியூரில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு திரிபுரசுந்தரி அம்பாள் உடனுறை அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் ஆகும்.

இத்திருக்கோயிலுக்குப்பக்தகோடிகளின் ஏகோபித்த வேண்டுகோளின்படி தங்கரதம் சுமார் 60 லட்சம் மதிப்பீட்டில் செய்யத் தீர்மானித்து 5/5/2005 அன்று தங்கரதத் திருப்பணி துவங்கப் பெற்று இத்திருப்பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது, இந்த தங்கரதத் திருப்பணிக்கு மொத்தமாக 7900 கிராம் தங்கம் தேவைப்படுகிறது.

எனவே பக்தகோடிகள் ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் ஒருகிராம் தங்கம் வழங்கினாலே இத்திருப்பணி மிகச்சிறப்பாக நிறைவேற்றிவிடலாம்.

ஆதலால் பக்தகோடிகள் தங்களால் இயன்ற அளவில் தங்கத்தைத் திருக்கோயில் தங்கரத உண்டியலில் அல்லது அலுவலகத்தில் காணிக்கையாகச் செலுத்தும் படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

பக்தகோடிகள் பெருமளவில் இத்திருப்பணியில் கலந்து கொண்டு எல்லாம் வல்ல அருள்மிகு திரிபுரசுந்தரி அம்பாள் உடனுறை மருந்தீஸ்வரர் திருவருள் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

தெ.ப. ஏகாம்பரம் எம்,ஏ.
நிர்வாக அதிகாரி

எஸ். ராஜப்பன்,
தலைவர், அறங்காவலர்க் குழு

பி. ராஜகோபால், எஸ். புருஷோத்தமன்
எஸ். சாந்தி, எல். மோகனகிருஷ்ணன்
அறங்காவலர்கள்.

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 03-05 / WPP No. 451/03-05

அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் திருவேற்காடு, சென்னை - 77

(ஆடித்திருவிழா - 2005 நாள் : 10-7-05 முதல் 16-8-05 முடிய)

கருவறை விமானம், கொடிமரம் மற்றும் இராஜகோபுரக் கலசங்களுக்குத் தங்கம் போர்த்தும் திருப்பணி வேண்டுகோள்

அருள்மிகு தேவி கருமாரி அம்மன் திருக்கோயில் கருவறை விமானம், கொடிமரம் மற்றும் இராஜகோபுரக் கலசங்களுக்குத் தங்கம் போர்த்தும் திருப்பணி சென்ற 5-5-2005 முதல் சிறப்பாக நடைபெற்று வருகிறது. வருகிற 16-8-2005 அன்று ஆடித்திருவிழா நிறைவடைந்ததும் ஆவணி மாதம் 6-ம் தேதி (22-8-2005) திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு மேல் 7.00 மணிக்குள்ளாக தேவி கருமாரியம்மனுக்குப் பாலாலயம் செய்யப்பட்டு வெகு விரைவில் தங்கவிமானத் திருப்பணி வேலைகள் முடிக்கப்பட்டுப் பின்னர் சுபயோகம் கூடிய சுபதினத்தில் அம்மனுக்குத் திருக்குட நீராட்டு விழா நடைபெற உள்ளது.

மண்டலாபிடேகம் நடைபெறுதல்

திருக்குடநீராட்டு விழா நடைபெற்ற நன்னாளின் மறுநாளிலிருந்து தினசரி தொடர்ந்து 48 நாட்களுக்குக் காலை 11 மணிக்குத் தேவி கருமாரி அம்மனுக்கு மண்டலாபிடேகம் சிறப்பாக நடைபெற உள்ளது.

மேற்கண்ட மண்டலாபிடேகத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ள பக்தப் பெருமக்கள் முன்னதாகத் திருக்கோயிலில் பதிவு செய்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இங்ஙனம்

மா. கவிதா, பி.எல்.,
துணை ஆணையர் / நிர்வாக அதிகாரி

எம். நந்தகோபால்
அறங்காவலர் குழுத் தலைவர்

பா. சீனிவாசன் மு. உதயகுமார் ஜி. திருநாவுக்கரசு ஆர். சந்திரா ராஜா
அறங்காவலர்கள்